

# தவம்

(சிறுகதைத் தொகுப்பு)

பானுகுமார்

# தவம்

## (சிறுகதைத் தொகுப்பு)

### பானுகுமார்

ராஜம் பதிப்பகம்,
120, அரிசிக்கடைத் தெரு,
மன்னார்குடி - 614 001.

# நூற் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | தவம் |
| ஆசிரியர் | : | பானுகுமார் |
| பதிப்பாசிரியர் | : | கே. நரேந்திரன் |
| பொருள் | : | சிறுகதைகள் |
| முதல் பதிப்பு | : | 2004 டிசம்பர் |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| நூலின் அளவு | : | 1/8 கிரவுன் |
| மொத்தப் படிகள் | : | 1100 |
| மொத்தப் பக்கங்கள் | : | 144 |
| தாளின் தன்மை | : | வெண்மை |
| கட்டுமானம் | : | சாதாரணக் கட்டு |
| நூல் வெளியீடு | : | ராஜம் பதிப்பகம்,<br>120, அரிசிக்கடைத் தெரு,<br>மன்னார்குடி - 614 001. |
| ஒளி அச்சு | : | Prompt Offset Printers, Chennai |
| அச்சிட்டோர் | : | 34, திப்பு தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை. |
| விலை | : | ரூ. 30/- |

# நிறைவேறிய ஆசைகள்

மேகக் கூட்டங்களோடு விளையாட வேண்டும்
மின்னும் நட்சத்திரங்களோடு சிறகடிக்க வேண்டும்
கோள்களோடு கண்ணாமூச்சி ஆட வேண்டும்
கூடு விட்டு கூடுபாய வேண்டும்.

பூமிபந்தைக் கட்டி முத்தமிட வேண்டும்
பஞ்ச பூதங்களோடு உறவாட வேண்டும்
பருவ காலங்களாய் பயன்தர வேண்டும்
பக்குவமாய் உலகியலை கடந்திட வேண்டும்.

அலைகள் போல் ஒலிக்க வேண்டும்
ஆமைப்போல் ஐம்புலனை அடக்க வேண்டும்
ஓசையாய் தென்றலில் உலாவர வேண்டும்
ஓடும் நதியாய் குதூகலிக்க வேண்டும்.

மலர்களாய் மணம் வீச வேண்டும்
மனமொடுங்க தவம் செய்ய வேண்டும்
வளர் மதியாய் வளர வேண்டும்
விந்தைகளை எழுத்தில் பதித்திட வேண்டும்.

நாட்டுப்புற பாடலில் இலயிக்க வேண்டும்.
நாகரீகச் சந்தையிலிருந்து விடுபட வேண்டும்
நான் என்ற தன்முனைப்பை ஒழிக்க வேண்டும்
நாளும் தொண்டாற்றி இன்பம் பெறவேண்டும்.

# அன்புள்ள அப்பாவுக்கு

இறையாற்றல் நம்மிருவரையும் தந்தை மகனாக கூட்டுவித்தது. பிறகு உன்னைப் பறித்துக் கொண்டு விட்டது.

இதைப் படிக்க நீ இன்றில்லை என்பதை யாரிடம் போய் முறையிடுவது?

- பானுகுமார்.

# என்னுரை

நினைத்து நினைத்து நினைப்பற்று, நெஞ்சே
நினைப்பற்றி நீயாகி நில்"

ஒரு வாசகி என்னிடம் கேட்டார். இவ்வளவு நாட்கள் எழுதாமல் ஏன் இப்பொழுது எழுத ஆரம்பித்தீர்கள்? நல்ல கேள்வி.

என்னுடைய ஐம்பது வயது வரை அனுபவங்களைச் சேகரித்து வந்தேன். எழுத்துக்குத் தேவையான வாழ்க்கை என்ற பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தேன். படிப்பு முடித்ததும் பணியைத் தொடங்கினேன். ஐம்பது வயதில்தான் அறிவுக் கூர்மை அதிகரிக்கிறது.

படைப்பிலக்கவாதிகள் மட்டுமல்ல. கலைஞர்கள், வர்த்தகர்கள் ஏன் அரசியல்வாதிகள் கூட ஐம்பது வயதுக்குமேல் பிரகாசிக்கத் தொடங்கி அறுபது வயதுக்கு மேல்தான் சாதனைகளின் உச்சியைத் தொடுகின்றனர்.

உலகப் புகழ்பெற்ற காவியமான "ஃபுவுஸ்டை" எண்பத்து மூன்று வயதில் தான் எழுதினார் ஜெர்மானிய இலக்கிய அறிஞர் கொய்தே.

உலகப் புகழ்பெற்ற தத்துவமேதை காஸிட் எழுபது வயதில் புகழ்பெற்ற தத்துவ புத்தகங்களை எழுதினார்.

அமெரிக்க உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை எழுதியபோது நீதிபதி ஹோம்ஸ்க்குத் தொண்ணூறு வயது.

## 6

தாமஸ் ஹாப்ஸ், பெரிராண்ட் ரஸ்ஸல் இருவருமே 90 வயதில் தத்துவ புத்தகங்களை எழுதினார்கள்.

நாவலாசிரியர் சாமர்செட்மாம் 90 வயசிலும் எழுதினார்.

பெர்னாட்சா தொண்ணூறு வயதிலும் நாடகங்களை எழுதினார்.

வாழ்க்கை அனுபவங்கள் பெற்றவர்கள் தான் உலகில் சிறந்த எழுத்தாளர்களாக படைப்பாளிகளாக சாதனைப் படைத்திருக்கின்றனர்.

வேறு பணியில் இருப்பவர் இலக்கியத்தின் படிகளில் உயரமுடியுமா? பகுதி நேர படைப்பாளி இலக்கியத்திற்குச் சேவை செய்துவிட முடியுமா? இது அடுத்தக் கேள்வி.

என் படைப்புகளை ஒவ்வொன்றாகப் பார்த்த பின், என் எழுத்துக்களை நேசிக்கின்ற வாசகர்கள் தரும் உற்சாகத்தில், விமர்சனங்கள் கடலில் கரைந்த உப்பாக கரைந்து போயின.

இலக்கிய உலகில் புகழ் பெற்ற பலர், அரசுப்பணியில் இருந்து எழுதி வெற்றி பெற்றவர்கள் தானே.

பக்தி இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படும் பெரியபுராணத்தை எழுதிய சேக்கிழாரும் ஒரு அரசு அதிகாரியே!

தமிழில் முதல் நாவலைத் தந்த வேதநாயகம் பிள்ளையும் அரசு அதிகாரி தான்.

இன்றைய காலகட்டத்தில் இறையன்பு, திலகவதி, தென்கச்சி சாமிநாதன், ராமையா, லா.சா.ரா. போன்றவர்கள் பகுதிநேர எழுத்தாளர்கள்.

உலகச் சிந்தனையாளர்களில் புகழ்பெற்ற தாவோ, கன்பூசியஸ் கூட அரசு அதிகாரிகள் தான்.

சிந்தனையும், ஞானமும் எல்லாருக்கும் உண்டு. ஒவ்வொரு மனிதனுக்கும் சிந்திக்கும் ஆற்றல் உண்டு. நல்ல கருத்துக்கள் எங்கிருந்து வந்தாலும் அதை ஏற்றுக் கொண்டு பாராட்டுவது தான் மனித நேயம்.

இலக்கியம் படைக்க, இருக்கிற மனிதர்களை நேசித்து அவர்களைப் புரிந்து கொள்கிற மனசு மட்டும் இருந்தால் போதும்.

என் வாழ்க்கையில் இனிப்பான கசப்பான கற்கத்தக்க உன்னதமான அனுபவங்களை கதைகளாகப் படைத் திருக்கிறேன். இந்த அனுபவங்களின் தொகுப்பைச் சமுதாய நலம் கருதி இறைவன் எனக்கு எழுதும் ஆற்றலை கொடுத்திருப்பதாக வெளிப்படுத்துகிறேன். ஒவ்வொரு மனிதனும் ஒரு காரியத்திற்காக தான் ஒரு இடத்தில் வைக்கப்படுகிறான்.

இது என்னுடைய முதல் சிறுகதை தொகுப்பு. நம்மோடு நாள்தோறும் வாழ்ந்து வரும் மனிதர்களும் இதில் இருக்கிறார்கள். நம்மால் ஒதுக்கிவைக்கப்பட்டு, நாம் ஒதுங்கி வந்துவிட்ட மனிதர்களும் உண்டு. எனவே கதைகளில் வரும் பாத்திரங்களில் குணமும் உண்டு. குறையும் உண்டு.

பாட்டி காலம் தொட்டு நம்நாட்டில் கதை கேட்கும் பழக்கம் இருந்து வருகிறது. சங்க காலப் பாடல்களில் குறுந்தொகையில் சிறுகதைகள் படித்திருக்கிறோம். 457 பிரிவுகள் கொண்ட புத்த சாதகக் கதைகள் எவ்வளவு அற்புதமானவை. பஞ்சதந்திர கதைகள், இதிகாச குட்டிக் கதைகள் எவ்வளவு அழகாக நமக்குப் பாடங்களை புகட்டியிருந்தன.

உலகில் எல்லா மொழிகளிலும் சிறுகதையின் ஆதிக்கமும் செல்வாக்கும் அதிகமாக இருப்பதைக் காண்கிறோம்.உலக இலக்கியத்துக்கு நிகராக நல்ல எழுத்தாளர்கள் நல்ல கதைகளைப் படைத்து வருகின்றனர்.

மேல்நாட்டிலும் ஈசாப் நீதிக்கதைகள், மாப்பசான், பால்சாக் போன்றவர்களின் பிரெஞ்சு சமூகக் கதைகள், உருசியத்தில் செகாவ் கதைகள், ஆங்கிலத்தில் எட்கர் ஆலன்போ, ஓஹென்றி கதைகள் எவ்வளவு அற்புதமானவை.

தமிழில் புதுமைப்பித்தன், வ.வே.சு. அய்யர், பாரதி, நா. பிச்சமூர்த்தி, கு.பா.ரா., அகிலன், கு. அழகர்சாமி, ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, எம்.டி. வாசுதேவன் நாயர் (மலையாளம்) போன்ற எண்ணற்றவர்களால் சிறுகதைகள் பக்குவம் அடைந்துள்ளன.

சிறுகதையில் ஆற்றல் வியப்பளிப்பதாகவே உள்ளன. ஒரு கனத்த யுகமாக மாற்றும் சக்தி கதைகளுக்கு உள்ளன.

சிறுகதை என்றால் நாற்பது பக்கங்களானாலும் சரி நாற்பது வரிகளிலும் சரி சிறந்த சிறுகதைகள் படைக்கப்பட்டிருக்கின்றன.

**"சிறுகதை மனித உள்ளத்தின் அடைய முடியாத ஆசைகளின் எதிரொளி"** என்ற புதுமைப்பித்தனின் வார்த்தைகளில் எவ்வளவு உண்மை.

எழுத்தாளருக்குச் சமூக அக்கரை இருக்க வேண்டும். மானுடநேயம் இருக்க வேண்டும். சுற்றி நடைபெறும் கொடுமைகளை அவலங்களைப் பார்த்தும் பார்க்காமல் போகும் சராசரி வழிபோக்கனாக இருக்க அவனால் முடியாது. இத்தகைய சிந்தனை உள்ளவன் படைப்புகள் எதிர்கால சந்ததியினால் பேசப்படும்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நாம் வாழும் வாழ்க்கையின் அர்த்தத்தைக் காட்டுவதாக அமைய வேண்டும். அந்த வகையில் இக்கதை தொகுப்பு ஒருசில வாசகர்களுக்காவது மாற்றத்தை ஊக்கத்தைத் தரும்.

என் வாழ்க்கையில் நான் அனுபவித்தது, பார்த்தது, கேட்டது, படித்தது எல்லாம் இத்தொகுப்பில் கதைகளாக மணம்பரப்பிக் கொண்டிருக்கிறது. ஒரு புதிய பரிணாமத்தைக் காட்டுவதாக கதைகள் படைக்கப் பட்டுள்ளன. இவைகள் வாழ்க்கை உண்மைகளை நமக்கு உணர்வுபூர்வமாகக் காணச் செய்யும். இந்த வகையில் நமது அனுபவத்தையும் உணர்வையும் அறிவையும் அது கூர்மையாக்கிவிடும்.

படிப்பவர்களை நம்ப வைக்கணும், சிந்திக்க வைக்கணும், இந்த வகையில் இதில் உள்ள கதைகள் எல்லாம் உங்களை நிச்சயம் சிந்திக்க வைக்கும்.

நர சேவையே நாராயணன் சேவை என்று முன்னோர்கள் சொல்லிவைத்தார்கள். நாட்டில் கோயில்களுக்கும், மசூதிகளுக்கும், சர்ச்சுகளுக்கும் செலவிடுவதைக் காட்டிலும், தெய்வத்தின் குழந்தைகளாக பரிணமித்திருக்கும் மனிதர்களுக்குச் சேவை செய்வதுதான் உயர்ந்தது, உன்னதமானது. இக்கருவை வைத்து எழுதப்பட்டது தான் **'காட்டுக்குக் கோபம்'** கதை. கதையில் வரும் வடிவேலு, பூசை, மந்திரம், கோயில், கும்பாபிஷேகம் என்று செலவு செய்து ஆன்மீகத்திற்கு அதிகம் செலவு செய்தவர். இவரை, பைபிள் வாசகம் கண்ணைத் திறக்கிறது. துன்பப்படும் மனிதனுக்குச் சேவையை செய்யத் தொடங்குகிறார். அவரது சேவைக்கு திருமந்திரம் தூண்டுகோலாக அமைவதாக கதையை முடித்தேன்.

இக்கதையில் மத வழிபாட்டு ஸ்தலங்களை விட மனித நேயத்தில் முக்கியத்துவம் கொடுத்தது சரியா? வாதங்கள் வரலாம்! மனிதனின் அடிப்படைத் தேவையான உணவு, உடை இருந்தால்தானே அவன் இறைவழிபாடு நடத்த முடியும் என்பதை மறுக்க முடியாதே!

நம்மவர்களில் பெரும்பாலானோர் மாற்றுத் திட்டம் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். காலை எட்டுமணி பேருந்து கிடைக்காவிட்டால் எட்டு முப்பது பஸ்சுக்குப் போகவும் திட்டமிட வேண்டும்.

ஆங்கிலத்தில் 'Plan for the Best Prepare for the worst' என்பார்கள். நல்ல உயர்ந்த இலட்சியத்திற்கு திட்டமிட

வேண்டும். அது கிடைக்காவிடில் மாற்றுத்திட்டமும் வைத்திருக்க வேண்டும். இந்த கருத்தை மையமாகக் கொண்டு தான் “கலைந்த கனவு” கதை எழுதினேன்.

கிடைக்காததை எண்ணி வருந்துவதைவிட இருந்ததை எண்ணி சந்தோஷப்படுகிறாள் ஷீலா. தான் நினைத்த டாக்டர் படிப்பு கிடைக்க வில்லையே என்ற சோகத்தில் கீதா மட்டுமல்ல அவர்களது பெற்றோர்களும் எதையோ இழந்துவிட்டதாக எண்ணி துக்கப் படுகின்றனர். இயற்கை நம்மை ஒரு இடத்தில் வைப்பதற்காகச் சில காட்சிகளை நடத்தும். அனுபவம் வாய்ந்த பேராசிரியரது அறிவுரையால், தனது சோகத்திலிருந்து கதையின் நாயகி பழைய உற்சாகத்திற்குத் திரும்புகிறாள். எதற்கும் மாற்றுத் திட்டம் வேண்டும் என்பதே கலைந்த கனவுகளின் கரு.

உலகில் நூறு சதவீதம் நல்லவர்களும் இல்லை. நூறு சதவீதம் கெட்டவர்களும் இல்லை. மின்சாரத்தில் கையை வைத்தால் ஷாக் அடிக்கும். இது அதனுடைய இயல்பு. மற்ற விலங்குகளை சாப்பிடுவது சிங்கத்தின் இயல்பு. நமது இரத்தத்தை உறிஞ்சுவது கொசுவின் இயல்பு. பாடுபட்ட விவசாயியின் தானியத்தை சாப்பிடுகிறது எலிகள், பறவைகள், இது அவைகளுடைய இயல்பு. இக்கருத்துக்களை உணர்த்த எழுதப்பட்ட கதைதான் **சூர்ப்பனகை.**

அடுத்துக் கெடுப்பது, வஞ்சம், கோபம், தற்பெருமை, புறம் கூறுதல், பொய் சொல்லுதல் போன்ற குணங்களின் வடிவமாக “சூர்ப்பனகையை”

சித்தரித்தேன். கெட்ட குணங்களுடன் கெட்ட குணங்கள் சேருவது இயற்கை. சூர்ப்பனகைக்கு சகுனியும், கார்கோடனும் கணவராகவும், மைந்தனாகவும் அமைந்தனர்.

சூர்ப்பனகை பாத்திரத்தால் ஞானம் வந்தவர்கள் சிலர். பயந்து ஓடியவர்கள் சிலர். அந்தப் பாத்திரத்தின் இயல்பு தங்கள் குணங்களில் அண்டவிடக் கூடாது என்பதில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கெடுவான் கேடு நினைப்பான். தனது எண்ணமே அவளுக்கு எமனாக வந்து அமைந்ததாக சூர்ப்பனகை கதை அமைந்தது.

தொண்டு செய்பவர்களில் கிறிஸ்துவர்களின் பங்கு உலகெங்கும் பாராட்டப்படுகிறது. எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து நம் மண்ணுக்குச் சேவை செய்த வீரமாமுனிவர், கால்டுவெல், அன்னை தெரசா இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்த வரிசையில் **ஊனத்தின் கண்கள்** கதையில், தாமஸ் என்ற தொண்டுள்ளம் படைத்தவரைப் படைத்தேன். அவரது சேவையில் அவருக்குத் தொய்வு ஏற்படும் போது அவரது அன்னை அவரை வழிநடத்துவதாகக் கதை ஓடுகிறது. நாயகன் அப்துல்லா இரண்டு ஊனத்திலும் சுறுசுறுப்பாக இயங்குபவன். தனது மூன்றாவது ஊனம் இருப்பது அறியாமல் பாதர் தாமஸிடம் அடிவாங்கும்போது நானே அழுதிருக்கிறேன்.

அப்துல்லாவின் மூன்றாவது ஊனம் தெரியவந்ததும் துடித்துப்போகும் பாதர். அவனைத் தன்னுடனே வைத்துக்

கொண்டு அவனுக்கு மாற்றுக்கண் சிகிச்சை அளிக்க முயற்சி செய்து வருவதாக கதையை முடித்தேன்.

ஒரு ஊனமுற்ற பள்ளி ஆசிரியர் கூறிய உண்மைச் சம்பவத்தைத் தான் கற்பனையுடன் எழுதினேன்.

என்னுடைய நெஞ்சிற்குள் பல ஆண்டுகளாகத் தவித்துக் கொண்டிருந்தது தான் வர்ஷா கதை. விடலைப் பருவத்தில் நாயகனும், நாயகியும் காதல் வயப்பட்டிருப்பார்களா என்று சில அறிவாளிகள் கேட்டார்கள். இவர்களுக்கு உலகக் காதல் காவியங்களை எடுத்துச் சொன்னதும் அமைதியடைந்தனர்.

இப்போதெல்லாம் ஆண்களும், பெண்களும் காதலிக்கின்றனர். ரயில் காதல், கல்லூரி காதல், நல்லது காதலிக்கட்டும். காதல் என்பது என்ன? பருவ வயதில் ஹார்மோன்களின் பசிக்கு இரைபோடும் இளமையும், கட்டழகும் மட்டுமல்ல காதல்.

ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கவும், ஒருவர் ஒருவருக்காக வாழ்வது காதல். தானும் வாழ்ந்து தன் மேல் காதல் கொண்டவரையும் வாழ வைப்பது காதல். காதல் கைகூடாவிட்டாலும் தான் நேசித்தவர் நன்றாக இருக்க வேண்டும் என்று வாழ்த்துவது தான் உண்மையான காதல். இந்தக் கருவைத் தான் வர்ஷா கதையில் வைத்தேன். தான் காதலிக்கப்பட்டவரின் உண்மையான அன்பு தெரிந்ததும் மனமுருகி நிற்கும் வர்ஷாவில் காதல் உண்மைக் காதல்.

காதல் ஒருதலையாக மாறினாலும் கொண்டவளையே நினைத்து வாழ்க்கையில் முன்னேறும் கதாநாயகன் எண்ணத்தில் உயர்ந்தவன். அவன் காதல் தெய்வீகமானது. அவன் ஆன்மா பரிசுத்தமானது. அவன் எண்ணத்திற்கு ஆற்றல் உள்ளது.

வர்ஷாவும் தன் மாமாவின் காதல் தெரிந்ததும் துடிக்கின்ற துடிப்பு.... பாசம் அவனை நிலகுலையச் செய்துவிட்டது. இந்த நிலையிலும் நாயகி தன் கணவனுடன் வாழ வாழ்த்தி நிற்கும் நாயகன் நம் மனதில் உயர்ந்து நிற்கிறான்.

இவர்களது உன்னதமான காதல், சம்மந்தி உறவாக மாறுவதாக கதையை முடித்தேன். வித்தியாசமான கதையில் காதலர்களுக்கு நல்ல செய்தியைக் கொடுத்த சந்தோஷம் ஏற்பட்டது. வர்ஷா - கதைக்காக உயிர் பெற்றவளல்ல. வாழ்க்கையில் நான் சந்தித்த மறக்கமுடியாத பாத்திரம்.

இக்கதை யாரேனும் சிலருக்கு அவர்கள் பாதையில் வெளிச்சமாக பயணத்தில் துணையாக இருக்கும் என்ற மகிழ்ச்சி இருக்கிறது.

ஒவ்வொரு படைப்பாளியும் தன் படைப்பை பிரசவ வலியுடன் வெளியிடுகிறான். படைப்பாளியின் படைப்புத் திறனையும், எழுதும் முறையை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட கதை தலைப்பிரசவம்.

கதையில் நாயகன் தனது முதல் படைப்பை எழுத எடுத்துக் கொண்ட முயற்சி பிரமிக்க வைப்பதாக

இருக்கிறது. எல்லா எழுத்தாளர்களைப் போலவே இவரும் தனது முதல் படைப்பை அச்சில் பார்த்து இருக்கிறார். ஆனால் அவருடைய தலைப்பிரசவம் வலியுடன் இருந்தாலும் சுகமாகவே அமைந்து விடுகிறது. எழுத விரும்பும் புதிய எழுத்தாளர்களுக்கு இக்கதை ஊக்கமாகவும், ஊன்று கோலாகவும் அமையும்.

முதன் முதலில் **'கடலை'** பார்த்த சிறுவன் அதே கடலில் தனது வாழ்க்கைப் பயணத்தையும் நடத்தி வருவதுதான் 'கடல்' கதையின் கருப்பொருள்.

சிறுவனாயிருந்த போது கடல் பார்க்க ஆசைப்பட்டது. கடலைப் பார்த்த போது ஏற்பட்ட அவனின் மகிழ்ச்சி. அவனது குதூகலிப்பு போன்றவை பரவசமான காட்சிகளாகக் கதையில் காட்டப்பட்டுள்ளன.

கடலின் காட்சிகள், சிறுவன் மனதிற்கு தகுந்தவாறு ஒருபுறமும், மாலுமியான பின்பு அவனது மனநிலையில் ஒருபுறமும் வாழ்க்கை ஓட்டத்தோடு பின்னிப்பிணைந்து கதையில் ஓடுகிறது.

பூமிப்பந்தில் முக்கால் வாசி தண்ணீர்தான். அதுபோல் கதையின் நாயகனின் வாழ்விலும் கடல் ஆக்ரமித்து வளம் சேர்த்ததாகக் கதை முடிக்கப்பட்டுள்ளது.

மனிதன் செவ்வாய் கிரகத்தில் ஆராய்ச்சி செய்து வருகிறான். நாட்டுப்புறங்களில் உள்ள தாய்மார்களது குழந்தைகள் கூட, இன்று அமெரிக்காவில் சாப்ட்வேர்

இன்ஜினியர்களாகப் பரிணமித்து வருகிறன்றனர். இந்த சூழ்நிலையிலும் மூடநம்பிக்கை கொண்ட நாயகி, ஏமாறுவதும்.... மக்களின் அறியாமையையும் பயத்தையும் முதலீடாகக் கொண்டு பணம் பறிக்கும் நபர்களின் சாமர்தியமும்.... **"குறிகேட்ட பெரியம்மா"** கதையில் காட்டப்பட்டுள்ளது.

சித்து வேலை செய்து மயக்கும் நபர்களின் ஏமாற்று வித்தையும் அதை அறிவியல் பூர்வமாகத் தெரிந்து கொள்ளும் விதமும் கதையில் காண முடியும்.

தன்னம்பிக்கையும், விடா முயற்சியும், ஊக்கமும் இருந்தால் அச்சத்தையும், மூட நம்பிக்கையையும் அகற்றிவிடலாம் என்பதைக் கொண்டு செல்வதே கதையின் நோக்கமாகும்.

பத்துமாதம் சுமந்து பெற்ற தாயையும், சோறுட்டி, கல்வி கொடுத்த தந்தையையும், பருவ வயதில் தக்க துணையைத் தெரிந்தெடுப்பதற்கு மறந்து, அவசரப்படும் பொறுப்பற்றவர்களின் போக்கை சாடுவதுதான் **"அவசரபுத்தி"** கதையின் கருவாகும்.

கதையின் நாயகி குடும்பத்தில் பல சௌரியங்களை அனுபவித்து வருகிறாள். பட்டப் படிப்பு படிக்க வைத்து திருமணத்திற்கு வரன் பார்த்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், உறவுகளையும், ஊரையும் ஒதுக்கிவிட்டு காதலனுடன் ஓடிவிடுகிறாள். அவசரபுத்தியால் அவளது வாழ்க்கை தறிகெட்டுப் போகிறது. முடிவில் அவளது வாழ்க்கை சோகமாகவே அமைகிறது. இதுதான் கதையின் அம்சம்.

பருவ வயதின் பக்குவமாய் தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லது பெற்றோர்கள் அமைத்து தரும் வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் பொறுமையும் அமைதியும் வேண்டும். அவசரபுத்தியால் வாழ்க்கையைச் சீரழித்துக் கொள்ளக் கூடாது என்பது கதையின் நோக்கமாகும்.

“பல சிரமத்திற்கிடையில் இவ்வளவு கஷ்டப்பட்டு எழுத வேண்டுமா? என்று அடிக்கடி சிந்திப்பேன்” என்று எழுத்தாள நண்பர் பூமணி என்னிடம் ஒருமுறை கூறினார். நான் வியந்து போனேன்.

“எழுத்துக்கள் என்பது தவம். நமது தவம் மானுடத்திற்கு செய்யும் சேவை” என்நு சொன்னதை ஆமோதித்தார் அவர்.

மானுடத்திற்காக தொண்டு செய்து வருபவரின் கதைதான் **தவம்**. கதையின் நாயகன் நூறு வயது அனுபவங்களை நாற்பது வயதில் பெற்றிருக்கிறார். தனது வெற்றிக்கும், பெற்ற அனுபவங்களுக்கும் தன் தந்தையே காரணம் என்பதை கூறுவதாக கதை செல்கிறது.

தந்தை தனக்கு வாழ்க்கைப் பாடத்தை எவ்வளவு எளிமையாக காலபோக்கில் விதைத்து வளர்த்து வந்தார் என்பதைப் பார்க்கும்போது நாமும் அத்தந்தையின் மகனாகப் பிறக்கவில்லையே என்ற ஆதங்கமும் சில வாசகர்களிடம் ஏற்பட்டதுண்டு.

மகன் தந்தைகாற்றும் உதவியும். தந்தை மகனுக்காற்றும் உதவியும் அவரவர் நோக்கில் சரிசமமாக கதையில் பின்னி பிணைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கை அமைப்புகளையும், முறைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது தான் கதையின் நோக்கம்.

இக்கதைத் தொகுதியை அச்சிட்டோர், வெளியீடு செய்த பதிப்பகத்தார் அனைவருக்கும் என் நன்றி. பிறந்தது முதல் இந்த நிமிடம் வரை உதவிய அனைவருக்கும் நன்றி. என்னை இயக்கும் இயக்குநரான என் வாழ்க்கைத் துணைக்கும் நன்றி.

இக்கதைத் தொகுப்பை படிக்கும் நீங்களும், உங்கள் குடும்பமும், உடல் நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர் புகழ், மெய்ஞ்ஞானம் பெற எல்லாம் வல்ல இறையாற்றலிடம் பிராத்திக்கிறேன்.

வாழ்த்துக்கள்

25-11-2004
பி 58, ஏழாவது குறுக்குத் தெரு,
அண்ணாநகர், செங்கற்பட்டு - 603 001.

என்றும் உங்கள்
பானுகுமார்

# இதனுள்ளே...

| | | |
|---|---|---|
| 1. | காட்டுக்குக் கோபமா? | 20 |
| 2. | கலைந்த கனவு | 31 |
| 3. | சூர்ப்பனகை | 37 |
| 4. | ஊனத்தின் கண்கள் | 47 |
| 5. | வர்ஷா | 62 |
| 6. | தலைப் பிரசவம் | 90 |
| 7. | கடல் | 98 |
| 8. | குறிகேட்ட பெரியம்மா | 108 |
| 9. | அவசர புத்தி | 119 |
| 10. | தவம் | 130 |

# 1. காட்டுக்குக் கோபமா?

“நான் ஆடையின்றி இருந்தேன். எனக்கு ஆடை அணிவித்தீர்கள்.”

“நான் பசியாய் இருந்தேன். நீங்கள் எனக்கு உண்ண உணவு கொடுத்தீர்கள்”

“நான் தாகமாய் இருந்தேன், என் தாகத்தை தவித்தீர்கள்.”

“நான் அந்நியனாய் இருந்தேன். என்னை ஏற்றுக் கொண்டீர்கள்”

இதனைக் கேட்ட நல்லவர்கள் “ஆண்டவரே உங்களுக்கு எப்போது இதையெல்லாம் செய்தோம்?” என்றனர். அதற்கு ஆண்டவர் “என் சகோதர சகோதரி ஒருவருக்கு நீங்கள் செய்தது எல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று உறுதியாகச் சொல்கிறேன்” என்று பதில் அளித்தார்.

சுயநலவாதிகளைப் பார்த்த ஆண்டவர் “சபிக்கப்பட்டவர்களே, என்னிடம் இருந்து அகன்று போங்கள். எனக்கு நீங்கள் எதுவுமே செய்யவில்லை” என்றார்.

அதற்கு அவர்கள் “ஆண்டவரே நீங்கள் எப்பொழுது ஆடையின்றியோ, பசியாகவோ, நோயுற்றோ, தாகமாகவோ இருக்கக் கண்டு உமக்குத் தொண்டு செய்யாமலிருந்தோம்” எனக் கேட்டனர்.

அதற்கு “எளியவர்களுக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை” என்றார் ஆண்டவர்.

சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டு வாரப்பத்திரிக்கை ஒன்றில் படித்த இந்தச் செய்தி வடிவேலுவின் மனதில் ஆழமாகப் பதிந்தது.

வடிவேலு அரசுப் பதவியில் இருப்பவர். ஆச்சாரமான குடும்பம். பூஜை, புனஸ்காரம், கும்பாபிஷேகம் என்றால் உதவி செய்து கொண்டிருந்தவரின் மனதில் பைபிளின் வாசகங்கள் சற்று நேரத்தில் இரசாயண மாற்றத்தை உண்டாக்கி விட்டது.

காலிங்பெல் அடித்தது. சாய்வு நாற்காலியில் இருந்து எழுந்து வாசலுக்குச் சென்றார். நான்கு நபர்கள் கையில் ரசீது புத்தகத்துடன் நின்றிருந்தனர்.

“சார் பூஜை செய்ய உதவி செய்யுங்கள்” என்று ரசீது புத்தகத்தை ஒருவர் நீட்டினார்.

சற்று முன்பு படித்த செய்தியால் வடிவேலுவின் மனம் உறுதியுடன் இருந்தது. வந்தவர்களிடம் நிதி தர இயலாது என்பதை உறுதியுடன் சொன்னார்.

வாசலில் கிடந்த அன்றைய செய்தித்தாளை எடுத்து மீண்டும் சாய்வு நாற்காலியில் அமர்ந்து படிக்கத் தொடங்கினார் வடிவேலு.

வாரப் பத்திரிக்கையில் படித்த செய்தியோடு தொடர்புடைய செய்தித்தான் நாளிதழிலும் அவர் கண்களில் பட்டது.

இறைவன் தன்னை ஆட்படுத்துகிறானா? சோதிக்கிறானா? நல்வழிப்படுத்துகிறானா? என்று கருதி நிமிர்ந்து உட்கார்ந்து செய்தியை மீண்டும் மீண்டும் படித்தார்.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் காடுகளில் உள்ள கிராமங்களில் பலர் உடுக்க உடையும், உண்ண உணவுமின்றி பரிதவிக்கின்றனர். வறட்சி தாண்டவமாடுகிறது என்ற பத்திரிக்கைச் செய்தி அவர் மனதில் ஊடுருவிச் சென்றது.

மானத்தை மறைக்க துணியில்லாமல் இருக்கும் மனிதர்களின் வறுமை நிலைமை அவரது சிந்தனையில் நிழலாடிக் கொண்டே இருந்தது. பைபிளின் வாசகம் உசுப்பிக் கொண்டே இருந்தது. வடிவேலு மனதிற்குள் மானுடப் பிரவாகம் ஊற்றெடுத்தது.

சாய்வு நாற்காலியை விட்டு எழுந்தார். தொலைபேசியைச் சுழற்றினார். நெருங்கிய நண்பர்கள் ஏழு பேரிடம் அவரது கருத்தைச் சொன்னார். "உங்களிடமும், உங்களின் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் உள்ள பழைய துணிகளைச் சேகரியுங்கள்" என வேண்டுகோள் விடுத்தார்.

நண்பர்கள் அனைவரும் பத்தே தினங்களில் வேகமாகச் செயல்பட்டு ஆளுக்கு ஒரு மூட்டை பழைய துணிகளைச் சேகரித்தனர்.

தாளவடியில் இருக்கும் கிறிஸ்துவ மிஷினரியிடம் தொடர்பு கொண்டார் வடிவேலு. மிகவும் பின்தங்கிய

கிராமம் ஒன்றுக்கு துணிமணிகள் வழங்க இருப்பதையும் தெரிவித்தார். அவர்களும் சோளகத் தொட்டி என்ற கிராமத்திற்கு ஞாயிறன்று வரச்சொல்லி தக்க ஏற்பாடுகள் செய்தனர்.

வடிவேலுவும் நண்பர்களும் சத்தியமங்கலத்தைத் தாண்டி, மலையேறி தாளவாடிக்கு வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். வழிநெடுகிலும் பசுமை மரங்கள் பட்டை மரங்களாகச் சோகக் காட்சியளித்தன. எல்லா மரங்களும் பார்க்க பரிதாபமாக நின்றன. தலை முடியைப் பறிகொடுத்த கிழவிகளைப் போல் அலங்கோலமாய் நின்றன. மலைகள் மேல் வறட்சியும், வறுமையும் தாண்டவமாடியது.

வெயிலில் வறண்டு போன தென்னை மரங்கள் செடி கொடிகள் எல்லாம் உயிர்த் தண்ணீர் கேட்டுப் போராடிக் கொண்டிருந்தன. மலைகள் ஆடையின்றி அம்மணமாக இருந்தது நண்பர்களுக்கு வேதனை அளித்தது. மழைப் பருவம் தப்பிப் போன கொடுமை.

அதிகாலை தாளவாடியை அடைந்தனர். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு கிறிஸ்துவ துறவி ஒருவர் துணையுடன் சோளகத் தொட்டி கிராமத்திற்குச் சென்றார்கள். காலை ஒன்பது மணிக்கே, வெயில் உருவம் மாறி உஷ்ணத்தை ஏற்றிக் கொண்டிருந்தது.

முதுகுத் தோலை உரிக்கிற மாதிரி வெய்யில் கொளுத்தியது. கோடை காலத்தைப் போல தெருவெங்கும் அனல் சீறிக் கொண்டிருந்தது.

தாளவாடியில் இருந்து மூன்று கி.மீ. தூரத்தில் இருந்த கிராமத்திற்கு சிறுவன் ஒருவன் வழிகாட்டினான். மலர்ந்திருந்த பூ வாடியது போல், இதுவரை மகிழ்ச்சியோடு இருந்த வடிவேலுவின் முகம் சுருங்கியது.

காட்டிற்குள் கண்ட காட்சிகள் அவரை வேதனையடைய வைத்தன. தென்னை மர ஓலைகள் எல்லாம் கருகி இருந்தன. மரங்களின் கிளைகளும் சோர்வுற்று தளர்வுற்று "பசுமை என்பது என்ன?" என்று கேட்டுக் கொண்டிருந்தன. கண்ணுக்குத் தெரியும் தூரம் வரை தண்ணீர் தெரியவில்லை.

கானல் வெளியாகி காடெங்கும் அலைந்தது. உரும வெயில் வழிநெடுகிலும் வீச இலையின்றி நிற்கும் மரங்கள் எல்லாம் நாவைச் சுற்றி வெப்பத்தை, கோபத்தைக் கக்கிக் கொண்டிருப்பது போல் பிரம்மை.

மழையின்மையால் நிலம் பாளமாய் வெடித்துக் கிடந்தது அந்தக் காட்டுப் பூமி.

ஏனப்பா இந்த நிலைமை? என்று சிறுவனைக் கேட்டார் வடிவேலு.

"காட்டுக்குக் கோபம்" சிறுவன் பதிலளித்தான்.

அவன் சொன்ன வார்த்தைகள் அவரை நெகிழ வைத்தன.

"ஏனப்பா காட்டுக்குக் கோபம்?"

"பெரிய கோபம்"

"கோபமுன்னா...... மழை இல்லை...... தண்ணி இல்லை....."

மரம் எல்லாம் சாகுது...... பட்டினி - சட்டை இல்லை........

"பறவைகளுக்கு அடைக்கலம் தரும் மரங்களே அடைக்கலமின்றி அலையும் போது பறவைகள் எங்கே செல்லும்?"

மானம் பாத்து மனது இறங்கி மழை பெய்யாட்டா.... மனுஷ மக்க எப்படி பொழைக்கிறது? ஆடு மாடு எப்படி உயிர் வாழ்றது? காட்லேதான் என்ன தீனி கிடைக்கும்?

நினைவுகள் வாழ்வின் அவலத்தைச் சுற்றி மொய்க்க வடிவேலு மனசு அழுதது.

பாதையின் இருமருங்கிலும் நிலம் கரேலேன்று விரிந்து கிடந்தது.

கல்லு மனசு... மானம் கண்களை மூடப்போய்... மேகங்கள் மலடுகளாய் மாறிப் போய்... பூமி இப்படி சும்மா கெடக்கே?

"என்ன கொடுமையடா சாமி.?"

வறட்சி, காட்டிலும் வறட்சி, நாட்டிலும் வறட்சி.

பூமி மழையைப் பார்த்து வருடங்களாகின்றன. பூமித் தாயின் அடிவயிற்றில் கூட தண்ணீர் இல்லை. கண்ணீர் தான் வருகிறது.

காட்டுக்கு எப்படிக் கோபம் வரும்? வானம் பொழியவில்லை. பூமி நனையவில்லை. அப்புறமென்ன

காட்டுக்கு மட்டும் கோபம். சிறுவன் கூறியதற்குப் பொருள் தெரியவில்லை. வடிவேலுவின் மனசு கிடந்து பதைபதைத்தது. அவருக்கு அடிமனசில் வலிக்கிறது. வேதனையில் வாய் முணுமுணுக்கின்றன.

காட்டின் நடுவே ஊரின் துவக்கமாகவும் இருந்தன காட்டுவாசிகளின் கூரை வீடுகள். இக்கூரையைத் தாங்கியிருந்தன செம்மண் சுவர்கள்.

ஒரு வழியாகச் சோளகத் தொட்டியை அடைந்தனர். அந்தக் கிராமத்தில் உள்ள இருநூறு பேருமே உறவினர்களை வரவேற்பது போல் அவர்களை வரவேற்றனர்.

மொத்தம் எழுபது குடும்பம் இருக்கும். எண்பது பெண்கள், நாற்பது குழந்தைகள், எழுபது ஆண்கள்.

காட்டிலிருக்கும் நெல்லி, விறகு, தேன் முதலியவற்றைச் சேகரித்தும், ஆடு மாடு வளர்த்தும் ஜீவனம் நடத்தி வந்த மக்களுக்கு வானமும், காடும் மாறிமாறி ஏமாற்றிவிட்டன.

கிராம மக்களின் வறுமை அவர்களின் உடலிலும், உருவத்திலும், முகத்திலும் தெரிந்தது. கிராமத்தினர் சூழ்ந்து நின்றனர். துணி மூட்டைகளைப் பாழடைந்த பால்வாடியில் வைத்து ஒழுங்குபடுத்தினார்கள்.

அப்போது தான் அவரவர் மூட்டைகளைப் பிரித்தனர். துணிகளை வகை வாரியாக வேட்டி, சேலை, போர்வை, பேண்ட், சர்ட், குழந்தைகள் துணிகள் என்று

வகைப்படுத்தினார்கள். அங்கே பெரிய ஜவுளிக்கடையே உருவாயிற்று.

வடிவேலுவுக்கு ஆச்சரியம், மூட்டையிலிருந்து துணியை எடுக்க எடுக்க அமுதசுரபி போல் துணிகள் வந்து கொண்டே இருந்தன. நமது நோக்கமும், செய்கையும், பொதுநலத்திற்காக இருக்கும்போது அமுதசுரபியாய் பொழிவதில் வியப்பில்லை.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லோரும் வரிசையாக நின்றனர். பழைய துணிகளைப் பெற நின்ற மக்களின் முகத்தில் மகிழ்ச்சி. அவர்கள் கண்களில் தெரிந்த எதிர்பார்ப்பு. நண்பர்கள் பழைய துணிகளை அவரவர் சைசுக்குத் தகுந்தவாறு கொடுத்தனர்.

வாங்கிக் கொண்டுபோன சிலேட்டுகளையும், பென்சில்களையும், வாய்ப்பாடுகளையும். குழந்தை களுக்குக் கொடுத்தார் வடிவேலு. அதைப் பெற்றுக் கொண்ட குழந்தைகளின் முகத்தில் ஆயிரம் சூரியனுடைய வெளிச்சம்.

துணிகளைப் பெற்ற முதியவர்கள் முகத்தில் தெரிந்த பிரகாசம் ஆயிரம் வால்ட் பல்பு ஒளியாய்த் தென்பட்டது.

அவர்களின் முகமெங்கும் ஆச்சரிய வெளிச்சம் அடிப்பதைக் கண்டு வடிவேலு மனமும் பிரகாசித்தது.

சிறு வயதில் தீபாவளிக்குப் புது டிரஸ் போட்டுக் கொள்ளும் மகிழ்ச்சியை அந்த மக்களிடம் கண்டதை எண்ணி வடிவேலுவின் மனம் குதூகலித்தது.

தமக்குத் தேவையான புத்தாடைகளையும் சிலேட்டு, பென்சில்கைளயும் பெற்றுக் கொண்ட குழந்தைகளின் முகத்தில் ஜொலிக்கிற மத்தாப்பூ. அந்தப் பிரகாசத்தையும் ஆனந்தத்தையும் எதிரொலிக்கிற பெற்றோர்களின் நிறைவு. இவற்றை எல்லாம் கண்களால் மொண்டு இதயத்தில் நிரப்பிக் கொண்டனர் நண்பர்கள்.

காட்டுக்குக் கோபம் என்று சொன்ன அந்த சிறுவன் மூச்சிறைக்க ஓடி வந்தான். எங்கோ தேடி காய்ந்து போன பத்து நெல்லிக்காய்களை எடுத்து வந்து அவர்களிடம் கொடுத்து தன் நன்றியை புலப்படுத்தினான். இன்றும் கிராமத்து மக்கள் தான் ஒழுக்கக் கட்டுகளின் முடிச்சுகளை அவிழ்க்காமல் இருக்கிறார்கள்.

அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டார் வடிவேலு. ஊர் மக்களுக்கு ஆடை கொடுத்ததற்கு, சிறுவன் காட்டிய நன்றியுணர்ச்சி அவர் கண்களில் ஆனந்த கண்ணீரை வரவழைத்தது.

பழைய துணிகளுக்கே விழா கொண்டாடும் மக்கள், கூடி நின்று அவர்கள் நலம் பெற வாழ்த்தி விடைகொடுத்தனர்.

வறுமையிலும் நன்றி காட்டும் பண்பு. அவர்கள் கூடிநின்று மலைவாழ் மொழியால் அவர்களை வாழ்த்திப் பாடினர்.

வடிவேலுவின் மனம் இளகியது. ஒரு சிறிய உதவியே இந்தக் கிராம மக்களுக்கு ஒரு ஆண்டுக்கு மானத்தை மறைக்கப் பேருதவியாய் அமைந்த நிகழ்ச்சி

வடிவேலுவையும் அவரது நண்பர்களையும் மீண்டும் தொண்டு செய்ய ஊக்கப்படுத்தியது.

"சகோதரர்களே நீங்க பண்ற காரியம் உங்களையும் உங்க சந்ததியையும் நிச்சயம் காப்பாத்தும்" துறவியும் வாழ்த்தி விடைகொடுத்தார்.

இனி வருடம் ஒருமுறையாவது பழைய துணிகளையாவது சேகரித்து நம் சமுதாய மக்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற சங்கல்பத்துடன் ஊருக்குப் புறப்பட்டனர். வரும் வழியில் வேர்க்கடலையை வாங்கி கொரித்தபின் பொட்டலத்தின் பேப்பரில் இருந்த எழுத்துக்கள் வடிவேலுவை புல்லரிக்கச் செய்தன.

"இயலாத மக்களுக்குச் செய்தது தான் இறைவனுக்குச் செய்யும் தொண்டு" என்ற திருமந்திரப்பாடலின் வரிகள்.

"நடமாடக் கோயில் நம்பற் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவர்க்கது ஏற்குமே"

கசங்கிய பேப்பரின் பின்பக்கம் திருப்பி பார்த்தார் வடிவேலு.

"எல்லா உயிரிலும் நானே நீக்கமற நிறைஞ்சிருக்கேன்'னு பகவத் கீதையிலே கிருஷ்ணன் சொல்கிறார். இதைத்தான் பைபிளில் இயேசுவும் "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்னு" சொல்லுகிறார்.

வடிவேலு திகைத்துப்போய் கண்கொட்டாமல் அந்தக் காகிதத்தையே திருப்பித் திருப்பி உற்றுப் பார்க்கிறார். மீண்டும் மீண்டும் படிக்கிறார்.

கசங்கிய காகிதத்தில் இருந்ததைப் படித்த வடிவேலுக்கு ஆச்சரியங்களும் அதிசயங்களும் நிகழ்வதாகப் பெருமைப்பட்டார்.

அவரது இதயத்தின் வலது அறைகளில் ஆச்சரியம்.

இடது அறைகளில் ஆனந்தம்.

ஆனால் அந்த சிறுவன் சொன்ன "காட்டுக்குக் கோபம்" என்ற வார்த்தைகளுக்கு அர்த்தத்தைத் இன்னும் தேடிக் கொண்டிருக்கிறார் வடிவேலு.

# 2. கலைந்த கனவு

**வீ**டு முழுவதும் ஒரே அமைதி. மூன்று நாட்களாக யாரும் சாப்பிடவில்லை. பிளஸ்டூ தேர்வு முடிவுகளும், நுழைவுத் தேர்வு முடிவுகளும் வந்து, வீட்டின் அமைதியையே குலைத்துவிட்டன.

கீதா படிப்பில் படுசுட்டி. பூமியைப் போல் நிற்காமல் சுற்றிக்கொண்டிருக்கின்ற சுறுசுறுப்பு தேனீ. பிளஸ்டூ வரை வகுப்பில் முதல் மாணவி. பள்ளிக்கூடத்திலும் முதல் மாணவி. பள்ளிநாட்களில் கீதா பங்கேற்காத நிகழ்ச்சிகளே இருக்காது. கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி, நாடகங்களிலும் எப்போதும் முதற்பரிசை அவள்தான் தட்டிக் கொண்டு போவாள். அவளது எழிலார்ந்த சொல்லடுக்குகளை அள்ளித் தெளிக்கும்போது கூட்டம் சொக்கிப்போகும். காற்றிலாடும் கீற்றாய் ஒவ்வொரு கணமும் உற்சாகம்.

சின்ன வயதில் இருந்தே டாக்டர் படிக்க வேண்டும் என்ற ஆசையை அப்பாவும் அம்மாவும் ஊட்டி வளர்த்தார்கள்.

எல்கேஜி படிக்கும் கீதாவிடம் "நீ என்னவாகப் போகிறாய்?" என்று கேட்டால் "டாக்டராவேன்" என்று கேள்வி கேட்பவர் கையின் நாடியைப் பிடித்துப் பார்த்து மிமிக்ரி செய்வாள்.

அப்பாவும், அம்மாவும் மூன்று நாட்களாக வேலைக்குப் போகவில்லை. பெற்றோர்கள் மனதில் பீதி குடிகொண்டிருந்தது. அவர்கள் மனம் அமைதியற்று இருந்தது.

பாட்டியும், தாத்தாவும் சாப்பிடாமல் சோகத்தில் பங்கேற்றனர்.

வீட்டிற்குள் மௌனம் உறைந்து கொண்டிருந்தது. யார் முகத்திலும் களிப்பு இல்லை.

குடும்பத்தின் மீது இடி விழவில்லை. இமயமலையே பெயர்ந்து விழுந்தது போன்ற துக்கம்.

டாக்டர் கனவு, இலட்சியத்தை ஊட்டி ஊட்டி வளர்த்த கீதாவின் பெற்றோர்கள், எதையோ இழந்துவிட்டதாகக் கருதி வீட்டிலேயே அடைந்து இருந்தனர்.

கீதாவும் ஷீலாவும் பள்ளித் தோழிகள். ஷீலாவும் கீதா போல் படிப்பில் நன்கு கெட்டிக்காரி. இவளும் என்ட்ரன்ஸ் டெஸ்டிலே மார்க் குறைந்து வாங்கியிருந்தாள். இதனால் இவளுக்கும் கட் ஆப் மார்க் குறைந்து போனது. இருப்பினும் கீதா குடும்பத்தினரைப் போல் இவர்கள் குடும்பத்தினர் வருத்தப்படவில்லை.

"குழந்தை கஷ்டப்பட்டு படித்தாள். போதிய மார்க் கிடைக்கவில்லை. பரவாயில்லை" என்று ஷீலாவை தட்டிக் கொடுத்தனர்.

கீதா வீட்டு சோக நிலைமையை ஷீலா தன் தந்தையான பேராசிரியரிடம் கூறினாள்.

மறுநாள் காலை தந்தையை அழைத்துக் கொண்டு கீதா வீட்டுக்குச் சென்றாள் ஷீலா.

"வாங்க சார்! எப்படி இருக்கீங்க? ஷீலா நீ எப்படி இருக்க?" பேச்சில் சுரத்து இல்லாமல் வரவேற்றார் கீதாவின் தந்தை.

மூன்று நாட்களாக ரூமை விட்டு வெளியே வராத கீதாவை அழைத்து வந்து தந்தையின் முன்பு நிறுத்தினாள் ஷீலா. கீதாவின் குவளை விழிகள் வேதனையால் மின்னிற்று.

பயலாஜியில் கட் ஆப் மார்க் குறைந்து அதனால் கீதாவுக்கு மெடிக்கல் அட்மிஷன் கிடைக்காத சூழ்நிலையை உணர்ந்தார் பேராசிரியர்.

"தோல்வியைக் கண்டு பயப்படாதே கீதா. வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் எல்லாம் தோல்வி அடைந்தவர்கள்தான்." பேராசிரியர் கீதாவைப் பார்த்துக் கூறினார்.

"டில்லியில் என் நண்பர் தன் பையனை டாக்டராக்க விரும்பினார். மார்க் போதவில்லை. உடனடியாக சி.ஏ. படிக்க வைத்தார். இன்று டில்லியில் அவன் பிரபல சார்ட்டட் அக்கவுண்டாகப் பிராக்டிஸ் செய்கிறான். இதுபோல் கடவுள் நமக்கு வேண்டியதைத் தெரிந்தெடுத்து கொடுப்பார்."

கீதா மௌனமாயிருந்தாள்.

"சார் நாங்கதான் குழந்தைக்கு டாக்டர் கனவு காண வைத்தோம். அவளும் நன்றாகத்தான் படித்தாள். சனியன் இந்த என்ட்ரன்ஸ் டெஸ்ட் மார்க்தான் சதிசெய்துவிட்டது". கீதாவின் அம்மா முதன் முறையாக வாய் திறந்தாள்.

"அப்படி இல்லை அம்மா! நீங்கள் தான் தவறு செய்துள்ளீர்கள்"

"Plan for the best, prepare for the worst" என்பார்கள். நாம் முன் கூட்டியே திட்டமிட்டுச் செயல்களைச் செய்கிறோம். சில சமயத்தில் அது நடக்காவிட்டால் என்ன செய்வது என்பதற்கு மாற்று வழிகளையும் நம் திட்டத்தில் வைத்திருக்க வேண்டும். இதனை நீங்கள் முதலில் உணர்ந்து தயார் நிலையில் பக்குவப்பட்டு இருந்தால், உங்கள் மகளும் பக்குவப்பட்டிருப்பாள்.

இந்தப் பிரபஞ்சத்தில் எதுவும் நம் கட்டுப்பாட்டில் இல்லை. எந்த நேரத்தில் எதுவும் நடக்கலாம். எது நடந்தாலும் ஏற்றுக்கொண்டு மாற்று ஏற்பாடுகளுடன் தயார் நிலையில் இருந்தால் தான் எதையும் நாம் சமாளிக்கமுடியும்.

"நீங்க சரியாகச் சொல்கிறீர்கள். மாற்றுத் திட்டமில்லாமல் குழந்தையைத் தயார்படுத்தாத தவறை உணர்கிறோம்" கீதாவின் அப்பா கண் கலங்கிச் சொன்னார்.

"இந்த விஷயத்தில் எல்லா பெற்றோர்களும் தவறு செய்கிறார்கள். பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் மகனோ மகளோ டாக்டர் ஆக வேண்டும் என்று திட்டமிடுகின்றனர். இவர்களது ஆசையில் இலட்சியத்தில் தப்பில்லை".

"போட்டி நிறைந்த உலகத்தில், குறைந்த எண்ணிக்கையுள்ள மெடிக்கல் அட்மிஷன். எல்லோருக்கும் எப்படி இடம் கிடைக்கும்?"

கீதாவின் மனம் தெளிவடைந்து வருவதை உணர்ந்தார் பேராசிரியர்.

"கீதா! என் மாணவி ஒருத்தி உன்னைப் போல் படிப்பில் படுசுட்டி. அவளுக்கும் மெடிக்கல் சீட் கிடைக்கவில்லை. அவள் மனம் தளரவில்லை. உடனே மாற்றுத்திட்டம தயாரித்தாள். பி.டெக். படித்தாள். படிக்கும் போதே ஐ.ஏ.எஸ். கோச்சிங் சென்டரில் தகுதியை வளர்த்து வந்தாள். இன்று பல மருத்துவர்கள் அடங்கிய மருத்துவமனைகள் உள்ள மாவட்டத்தின் கலெக்டராகப் பணிபுரிகிறாள்.

தோல்விகூட வெற்றிக்கு கிடைக்கிற வெளிச்சம் என்று புரிஞ்சுக்கனும்.

உனக்குக் கிடைத்த மார்க்கை ஏற்றுக்கொள். கிடைக்காத மெடிக்கல் சீட்டிற்காக ஏன் வருத்தப்படுகிறாய்? வேறு ஒரு துறையில் நீ பிரகாசித்துப் புகழ்பெற வேண்டும் என்பது இறைவனின் கட்டளையாக இருக்கலாம்.

As it is accept it - என்ற தத்துவத்தை உணர்ந்து முயற்சி செய். நிச்சயம் பலன் கிடைக்கும்.

"அங்கிள் இருங்கள். நான் போய் காபி போட்டு எடுத்து வருகிறேன்" என்று கிச்சனுக்குப் பழைய துள்ளலுடன் ஒடினாள் கீதா.

கீதாவின் துள்ளலைக் கண்ட பெற்றோர்கள் பேராசிரியரை நன்றிப் பெருக்குடன் கையெடுத்துக் கும்பிட்டனர்.

எங்கே வாழ்க்கை தொடங்கும் -அது
எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை, இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது!
பாதையெல்லாம் மாறிவரும்
பயணம் முடிந்துவிடும்!
மாறுவதை புரிந்து கொண்டால்
மயக்கம் தெளிந்து விடும்!

# 3. சூர்ப்பனகை

இராம காப்பியத்தில் கூட சூர்ப்பனகை பாத்திரத்தை கம்பர் நானூறு பாடல்களில் மூன்று படலத்தில் காட்டினார். நமது சூர்பனகையின் கதையை நாலாயிரம் பாடல்களில் கூட எழுத முடியாது. அவ்வளவு பிரபல்யமான புண்ணியவதி. மானுடவர்க்கத்தின் எதிரி.

கைகேயி, அயோத்தியைத்தான் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கச் செய்தாள். இந்த சூர்ப்பனகை நினைத்தால் நாடே பாலைவனத்தில் பொசுங்கிப் போகும்.

முத்தியால்பேட்டையில் எந்த இடத்தில் கேட்டாலும் சூர்ப்பனகை வீட்டை எளிதில் அடையாளம் காட்டுவார்கள்.

அந்த வட்டாரத்திலேயே "சூரு" என்ற செல்லப் பெயரும் இவளுக்குண்டு.

அப்படி என்ன சமூகசேவகியா? ஆன்மீகவாதியா? அரசியல்வாதியா? அதெல்லாம் ஒரு புண்ணாக்கு மில்லை.

வட்டிக்குப் பணம் கொடுப்பாள். மாதச்சீட்டு, வாரச்சீட்டு நடத்துபவள். கடன் பெற்றவர்கள் திருப்பிச் செலுத்த தாமதித்தால் ஒரே அடாவடித்தான். இவள் மிரட்டலுக்குப் பயந்து பணத்தை முறையாகத் திருப்பித்தந்தவர்கள் ஏராளம்.

பழி, பகை, பாவம், வஞ்சம், காமம், கொடூர எண்ணம், பேராசை, சினம், கடும்பற்று, தன் முனைப்பு, அடுத்தவரை கெடுப்பது போன்ற பண்புகளுக்கு ஒரு உருவம் கொடுத்தால் எப்படி இருக்கும்? அதுதான் முத்தியால்பேட்டை சூர்ப்பனகை.

நடுத்தரவர்க்கம் வசிக்கும் அந்த நகரில் மூன்றாவது தெரு என்றாலே சூர்ப்பனகை நினைவுதான் அந்த ஏரியா வாசிகளுக்கு ஞாபகத்துக்கு வரும்.

சூர்ப்பனகை பெயரைக் கேட்டாலே எல்லோரும் ஒதுங்கிக் கொள்வார்கள். நமக்கேன் வம்பு என்று அடுத்த தெரு வழியாகச் சென்று விடுவார்கள்.

இராமகாப்பியத்தில் நடுவில் தோன்றினாலும், முக்கியமான பாத்திரமாகி, காப்பியத்திற்கு இன்றியமையாத பாத்திரமாகி, காப்பியத்தின் உயிரோட்டத்தை வழங்கிய சக்தியாக விளங்கியவள் சூர்ப்பனகை. நமது சூர்ப்பனகை சமுதாயத்தில் முக்கியமான பாத்திரமாக மானுடத்தை ஆட்டிப் படைக்கும் பாத்திரமாக இருக்கிறாள்.

பக்கத்து வீட்டுக்காரன், எதிர்வீட்டுக்காரன் ஆகியோர்களுடன் விளக்குமாறு, செருப்பு சகிதம் அவளது போர்க்களக் காட்சிகளைக் கண்ட நகர்வாசிகளுக்கு இவள் மீது மரியாதையான பயம்.

எல்லோருக்கும் புனைப்பெயர் வைப்பதில் கெட்டிக்காரி. ஆனால் அவளுக்கே ஒரு புனைபெயர் இருப்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

இராமாயண சூர்ப்பனகை காமவெறி கொண்ட பெண் பேய். கடலைத் தூக்குமளவுக்கு வலிமை கொண்ட வஞ்சகி. நமது சூர்ப்பனகை இந்தத் சூர்ப்பனகைக்கு சற்றும் இளைத்தவள் அல்லள்.

நகரில் பிள்ளையார் கோயிலுக்கு இவள் வந்தால், பெண்கள் எல்லாம் பயந்து நடுங்கித்தான் போவார்கள். கோயிலில் அமர்ந்து தன் வீட்டுக்கதை, சொந்த சுய புராணம், சுய கௌரவம் கலந்த ஆணவப் பேச்சுக்குப் பயந்தே, பூசாரி கூட உடனே விபூதி, குங்குமம் கொடுத்து அனுப்புவதில் சிறப்புக்கவனம் செலுத்துவார்.

ஒரு சமயம் கோயிலில் நடைபெற்ற கதாகாலட்சேபத்திற்குக் கதை கேட்க வந்தாள் சூர்ப்பனகை. கதையில் ஒழுக்கத்தை உணர்ந்த விரும்பிய பாகவதர்,

"எண்ணம், சொல், செயல் இவைகளின் விளைவாக தனக்கோ , பிறர்க்கோ, இன்றோ, பின்னோ, உடலுக்கோ, அறிவிற்கோ துன்பம் தோன்றாது இருக்கும் வகையில் ஆற்றும் செயல்முறை, ஒழுக்கம் எனப்படும்" என்றார். இதனைக்கேட்ட பக்தர்களில் சிலர் சூர்ப்பனகை அமர்ந்திருந்த பக்கம் திரும்பி அவளைப் பார்த்தனர்.

அவ்வளவுதான். கோபம் வந்துவிட்டது சூர்ப்பனகைக்கு. மனசில் நெருப்பலைகள். ஓசையுடன் புரண்டு தகித்தன.

"இந்தத் தாடி வைத்த பாகவதருக்குச் சரியாகக் கதை சொல்லத் தெரியவில்லை." என்று சத்தம் போட்டுவிட்டு கூட்டத்தை விட்டு வெளியேறினாள்.

அதிர்ச்சியடைந்த பாகவதர், ஒழுக்கத்திற்கு ஒத்துவராத ஆன்மா வெளியேறுகிறது என்று கருதிக் கொண்டார்.

உறவுக்காரர்களிடம், ஊர்க்காரர்களிடம் கலகம் மூட்டிவிடுவதில் கெட்டிக்காரி. இதனால்தான் இவளுக்கு சூர்ப்பனகை என்று பெயர் வழக்கில் இருந்து வருகிறது.

காலையில் வாக்கிங் என்ற பெயரில் நகரில் எந்தெந்த வீட்டில் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக உலா வருவாள்.

சூர்ப்பனகைக்கு ஒரு பையன், ஒருபெண். பெண்ணுக்கு திருமணம் செய்து அனுப்பி விட்டாள்.

சூர்ப்பனகை திருமணமாகி வந்ததும் புகுந்த வீட்டில் தனது ராஜ தந்திர வேலையை சமார்த்தியமாகச் செய்து பணத்தைச் சுருட்டினாள். இவள் புருஷன் அரசு வேலையில் இருந்தாலும் மதுரை அரசாட்சியிலே அடி பணிந்து சேவை புரிந்தான். இதனால் விதவை மாமியார் இவளைக் கண்டு பயந்தே போய் இவள் பக்கம் திரும்புவதில்லை. திருமணமாகாமல் இருந்த ஒரே நாத்தனாரையும் அவசர அவசரமாக இரண்டாந்தாரமாக ஒருவனுக்குத் திருமணம் செய்து வைத்து வீட்டில் தனது அதிகார சாம்ராஜ்யத்தை நிறுவினாள்.

திருமணமாகாத மச்சினனைப் பற்றி இல்லாததையும், பொல்லாததையும் சொல்லி பிறந்த வீட்டில் இருந்தே விரட்டி விட்டு, தனது குடும்பத்தைச் சேர்ந்த தம்பிகளை வரவழைத்து படிக்க வைத்தாள்.

இந்தச் செயலுக்கெல்லாம் கட்டிய புருஷன் மனைவிக்கு ஏவலனாகப் பணிபுரிந்தான்.

காப்பிய சூர்ப்பனகையின் நெஞ்சத்தில் எரிந்த காமத்தீ இராவணன் நெஞ்சிலே பற்றியதுபோல், நமது சூர்ப்பனகையின் வஞ்சமும், பழிதீர்க்கும் கொடூர எண்ணமும் அவனது கணவன் நெஞ்சினிலே பற்றியது.

ஜாடிகேத்த மூடிபோல் அவளது கணவனும் சகுனி வேலை செய்வதில் மகா கெட்டிக்காரன். வேலை பார்க்கும் இடத்திலும் சரி, உறவுக்காரர்களிடமும் சரி, கோள் மூட்டி சண்டை போட வைத்துக் கொள்வதில் சாணக்கியன். மொட்டை அடித்தவர்களுக்குக் கூட சிண்டு முடிவதில் கெட்டிக்காரன். இவனது சின்ன சின்ன சீண்டல்களாலும் கூட பாதிக்கப்பட்டவர்கள் பலர். இதில் இந்தத் தம்பதிகளுக்கு ஒரு திருப்தி. இவர்கள் விளையாட்டாய் எரிகிற கல்லாலும் சில மடைகளும் கூட உடைந்து விடுவதுண்டு.

சரி! அம்மாவும் அப்பாவும்தான் இப்படி. பிள்ளை அதைவிட சூப்பர். ஊரில் இவனை கார்கோடகன் என்ற செல்லப் பெயரால் அழைத்தனர்.

வீண் கவுரவம், பிறரை ஏளனப்படுத்திப் பார்த்தல், கேலிப் பேச்சு, கிண்டல், சுயலாபம் போன்ற நச்சு எண்ணங்கள் கொண்டவன்.

எதை விதைக்கிறோமோ, அதுதானே பூமியில் விளையும். வினை விதைத்தவன் வினையை அறுப்பான். சூர்ப்பனகைக்கும், சகுனிக்கும், கார்கோடகக் குணமுள்ளவன் பிறந்ததில் வியப்பில்லை.

சென்னையில் வேலையிலிருக்கும் பையனுக்கு ஊரெல்லாம் பெண் பார்த்தாள். தனது எதிர்பார்ப்புக்குத் தகுந்த வரதட்சணை கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு வட்டிகாரன் மகளையே மருமகளாக்கிக் கொண்டாள்.

தன் கணவன் அலுவலகத்திலிருந்து ஏதாவது போனோ, ஆளோ வந்தால் போதும் போங்கள். அவர்களை ஒரு வழி பண்ணி அனுப்பி விடுவாள்.

இராம காப்பிய சூர்ப்பனகை அண்ணனது ஆட்சியில் பஞ்சலடி தீரத்திலே நிறைந்து கிடந்த தூடணன், கரண், திரிசிரஸ் முதலான பல அரக்கர்கள் கூட்டங்களும் அவளது காமத்தீக்குப் பலியானார்கள்.

நமது சூர்ப்பனகையின் கணவன் சகுனி அரசு அதிகாரத்தில் இருந்தபோது இவளது வஞ்சகத்திற்குப் பலியானவர்களும் ஏராளம்.

காப்பிய நாயகி வீபிடணனையையும், கும்பகர்ணனையும் எதிர்த்து சண்டைப் போட்டாள். நமது சூர்ப்பனகையும், சகோதர்களிடம் சொத்து கேட்டு சண்டை போட்டு தோல்வி கண்டாள். இதனால் பிறந்த வீட்டுப் பகையையும் புகுந்த வீட்டுப் பகையையும் ஒன்று சேர சேமித்துக் கொண்டாள்.

சூர்ப்பனகையுடன் பிறந்ததால் வெட்க மடைந்தான் வீபிடணன். நமது சூர்ப்பனகையுடன் பிறந்த சகோதரர்களும் அவளது அடாவடி கண்டு சகோதரி என்று சொல்லவே வெட்கமடைந்தனர்.

ஒரு தடவை பக்கத்து வீட்டில் இருந்த குப்பை, சூர்ப்பனகை வீட்டுக்குக் காற்றில் பறந்து வந்துவிட்டது. காற்று செய்யும் காரியத்திற்கு பக்கத்து வீட்டுக்காரர் எப்படி பொறுப்பாவார்?

ஏதோ தெரியாத்தனமாக சமாதானம் சொல்லிவிட்டார்கள்.

அவ்வளவுதான். அவள் முகத்தில் வெறுப்பு. கண்களில் சினத்தீ.

வெறுப்பை உமிழ்ந்தவளாய் வீறு கொண்டு புறப்பட்டாள் சூர்ப்பனகை.

நெருப்புத் துண்டுகள் அவள் வாயிலிருந்து புறப்பட்டன. ஒவ்வொரு துண்டும் பக்கத்து வீட்டுக் காரர்களின் நெஞ்சுக்குள் விழுந்து கட்டு மனசு துடியால் துடித்தன.

இன்னாடி சொன்னே.... சிலிர்த்துக் கொண்டு புறப்பட்டன வார்த்தைகள்.. தலை முடி அவிழ்ந்து விழுந்தது. ..... அது என்னாடி! .... காற்றில் குப்பை வராதபடி நீ தடுத்திருக்கணும்... வீடுன்னா சுத்தம் இருக்கணும்..... வாயின்னா சுத்தம் இருக்கணும்டி..... கழுதை.... இன்னா வாய்க் கொழுப்பா.... அறுத்துப்புடுவேன்.... என்று கையில் விளக்கமாற்றை காண்பித்து எச்சரித்தாள்.

கணவன் சகுனியும் மகன் கார்கோடகனும் ஆளுக்கொரு விளக்கமாற்றையும் செருப்பையும்

கம்பையும் எடுத்து வந்து சூர்ப்பனகைக்குக் கறுப்பு பூனையாக பாதுகாவலுக்கு நின்றனர்.

இனிமேல் குப்பை வந்தது...... உன்னையும்...... உன்...... உங்காத்தாவையும்.... வார்த்தைகள் அருவிகள் போல் அவள் மனசிலிருந்து பிசிறிக் கிளம்பின. தன் கண்கள் சிவக்க, கூந்தல் ஆட ஜிங்கு ஜிங்கு என்று சாமி ஆடினாள்.

சுளீருடிகின்ற சாட்டையடிகள். இரக்கமில்லா பருந்தின் கொத்தல். பருந்தின் காலுக்கடியில் கொத்தப்பட்டு "வீயா... வீயா" என்று வீறிடுகின்ற கோழிக்குஞ்சுகளாய் பக்கத்து வீட்டுக் காரர்களின் மனசு நொந்து போனது.

சண்டையில் வாய் பிளந்த வண்ணமாக வெறித்து நின்றாள் சூர்ப்பனகை. வாயிலிருந்து ஒரு "ஆங்கார" ஓசை எழுந்தது. உடல் அகண்டாசாரமாய் பெருகிப், பெருமூச்சை இழுத்து வெளியேறிற்று. மலைகளையே பொடித்து பொடியாக்கும் அளவுக்கு அவளுடைய பற்களின் அறைப்பு ஒலி வந்தது. இராம காப்பிய சூர்ப்பனகையைப் படிக்காதவர்களும் கேட்காதவர்களும் இந்த காட்சியைக் கண்டு அதிர்ச்சியுற்றனர். பாரதிராஜாவின். பதினாறு வயதினிலே வரும் குறுவம்மா தோற்றுப் போயிடுவாள்.

தீய எண்ணச் சூழலில் எப்படி முன்னேற முடியும்? இதனால் தான் புத்திசாலி பக்கத்து வீட்டுக்காரர்களும் உறவினர்களும் இவர்களைக் கண்டு ஒதுங்கிப் போய்விட்டனர்.

இவளைக் கண்டு மிரண்டு ஓடிய பக்கத்து வீட்டுக் குடித்தனக்காரர்கள் வேறு ஊருக்கே போய்விட்டனர். சூர்ப்பனகை குடும்பத்தைப் பற்றி அவர்கள் அருமையாகச் சொல்லி வைத்தார்கள்.

முதல் நாள்..... அவர்கள் மீது எங்களுக்கு கோபம் வந்தது.

இரண்டாம் நாள்..... கோபம் மறைந்து வருத்தம் வந்தது.

மூன்றாம் நாள்..... வருத்தம் மறைந்து ஞானமே வந்தது.

வேறு ஊருக்குப் போனதால் தான், வாழ்க்கையில் பல முன்னேற்றங்களைக் கண்டு, தங்கள் குழந்தைகளை டாக்டராகப் படிக்க வைத்து வெற்றி பெற முடிந்தது என்று பெருமிதப்பட்டுக் கொண்டனர். அந்த அளவுக்கு தீய எண்ணச் சூழல்களை உண்டாக்கும் ஆற்றல் கொண்டவள்.

நாளடைவில் சூர்ப்பனகையின் செயல்களில் அவளுக்கு நோய்கள் சிநேகமாயின. டயாபடிசும், இரத்தக் கொதிப்பும் புருஷன் பொண்டாட்டிப் போல் ஜோடி சேர்ந்து கொண்டு சூர்ப்பனகையிடம் அமர்ந்து விட்டது.

இராமாயண சூர்ப்பனகை இராவணனிடம் காமத்தீயை மூட்டி இராமனை எதிரியாக்கியது போல் உறவுகளையும், ஊர்களையும் தனது பேச்சாலும்,

செயலாலும் அச்சமூட்டி வந்தவளுக்கு ஒவ்வொரு வியாதியாக வந்தது.

காப்பிய சூர்ப்பனகைக்கு கிடைத்த பலன் மூக்கையும், காதுகளையும், தனங்களையும் பறிகொடுத்த அவலக்கோலம். நமது சூர்ப்பனைக்கு கிடைத்த பலன் சர்க்கரை, இரத்தக்கொதிப்பு, தோல் வியாதியும் உடம்பைப் பறிகொடுத்த அவலக்கோலம்.

கடைசியாக பெருநோய் வந்து அவளருகே செல்லக்கூட கணவனும், மகனும், மருமகளும் தயங்கினார்கள்.

படுத்தபடுக்கையாக ஆகிவிட்டாள் சூர்ப்பனகை.

தனக்கு வந்திருக்கும் பெருநோயின் ஆபத்தை உணர்ந்த சூர்ப்பனகை, தனது கடந்தகால செயலுக்ாக நாள்தோறும் தனக்குள்ளே புழுங்கினாள்.

கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் தேவையா?

தனக்குதானே அழிவைத் தேடிக் கொண்ட சூர்ப்பனகையின் வாரிசுகளுக்கு மன்னிப்பே கிடையாது.

சூர்ப்பனகையின் தீய வரலாற்றை எந்த வகையில் மூடி மறைத்தாலும், காலம் காலமாகத்தோன்றும் கதா ஆசிரியர்களின் கதைகளிலிருந்தும், கவிகளிலிருந்தும் எப்படித் தப்ப முடியும்?

கம்பர் ஒரு சூர்ப்பனகையைக் காப்பியத்தில் படைத்தார். இன்று நம் சமுதாயத்தில் சில சூர்ப்பனகைகள் உலா வந்து கொண்டுத்தான் இருக்கின்றனர்.

# 4. ஊனத்தின் கண்கள்

"ஓம்" என்ற பேரிரைச்சலோடு எப்போதும் ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள். சூரிய சந்திர கோள்களுடன் விளையாடிக்கொண்டே கரையில் வந்து அலைகள் மோதிக் கொண்டிருக்கின்றன. கூட்டம் கூட்டமாக வானுயர்ந்த தென்னமரங்கள். மனிதக்கூட்டம் போல் குலைகுலையாய் தென்னங்காய்கள். கடல் ஜீவராசிகள் கரை ஒதுங்கி உயிர் அற்று கிடப்பது போல் கடலோரத்தில் படகுகள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கிடந்தன. சிறிது தூரத்தில் பழுதடைந்த டச்சுக்காரர்களின் பழையக் கோட்டை. பக்கத்தில் பஞ்ச பூதங்களை நினைவு படுத்தும் ஐந்து புதிய கட்டிடங்கள். செவித்திறனற்ற மற்றும் வாய் பேசாதவர்களின் பள்ளிக்கூடமும் ஹாஸ்டலும் ஐந்து கட்டிடங்களில் வாசம் செய்து கொண்டிருந்தன.

பாதர் தாமஸ் இருபத்தைந்தாவது வயதில் இத்தாலியிலிருந்து தமிழகம் வந்தவர். தன்னுடைய தந்தையின் ஊனம்தான் இவரைச் இச்சேவைக்கு வித்திட்டது. சின்ன வயதில் காது கேளாத, வாய் பேசாத அப்பாவிடம் தான் கண்ட சோகங்களை, சமுதாயத்திலிருந்து அகற்ற வேண்டும் என்ற லட்சிய வெறி சிறுவன் தாமஸுக்கு வித்திட்டது.

"உன் இலட்சியம் என்னப்பா?"

"மம்மி நான் பெரியவனாயிட்டா பாதர் மாதிரி ஆயிடுவேன்".

"ஊனமுற்ற பள்ளிக்குத்தான் பாதராக இருப்பேன் அம்மா"

தாய் மேரியின் கண்களில் கண்ணீர் மல்கியது. தனது குழந்தை சின்ன வயதிலேயே தான் அடைந்த சிரமங்களைக் களைய, சமுதாயச் சிந்தனையுடன் வளர்வதைப் பற்றிப் பெருமைப்பட்டார். இருபது வயதிலே பாதர் பயிற்சிக்கான பள்ளியில் சேர்த்தனர் பெற்றோர்.

ஊனம் ஒன்றும் பாவமல்ல. ஊனம் ஒன்றும் சாபமுமல்ல. இயற்கை படைப்பில் சில விநோதங்கள். ஊனத்தை உலகுக்குக் காட்ட சில மனிதர்களைப் படைத்து காட்டும் இறைவனின் விளையாட்டுத்தான் ஊனம். அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு அன்றி பிறத்தல் அரிது. இறைவன் படைப்பில் ஊனமின்றி பிறந்த பொக்கிஷத்தை மானுடத்திற்குக் காட்டுவதாகும்.

அம்மாவும், அப்பாவும் அடுத்தடுத்து மறைந்த பின்பு தனது சேவைப் பயணத்தை இந்தியா நோக்கிச் செலுத்தினார். வீரமாமுனிவர் வந்திறங்கிய தரங்கம்பாடியில் தனது ஊனமுற்ற பள்ளியினைத் தொடங்கினார். ஐந்து மாணவர்களுடன் செவித் திறனற்ற மற்றும் வாய் பேசாதவர்களுக்குப் பள்ளியைத் தொடங்கினார். உழைத்து உழைத்து அங்குலம் அங்குலமாய் உயர்ந்து இன்று தனது வாழ்க்கையின் வெற்றியைத் தன் தொண்டு நிறுவனத்தின் வாசலுக்கு வந்து வணங்க வைத்துக் கொண்டிருக்கும் பெருமகனார்

பாதர் தாமஸ். இன்று ஆல் போல் தழைத்து அருகு போல் வேரூன்றி, சேவை செய்து, "இந்தியாவின் சிறந்த ஊனமுற்ற பள்ளி" என்ற பரிசைப் பெற்று, இயங்கி வருகிறது.

தன் குழந்தைகளிடம் ஊனத்தைப் பார்க்கத் தெரியாது பாதருக்கு. மனிதனின் உற்சாகத்தின் பிரவாகம் ஓடிக் கொண்டிருக்கும் வரை, உறுப்புக்கள் ஒரு மனிதனை ஊனப்படுத்தி விடுவதில்லை.

"செவித் திறன் என்பது ஊனமில்லை.

"பாம்புக்கு செவிகள் கிடையாது"

"ஊமை என்பது ஊனமில்லை"

"பேசத் தெரியாது பசுக்களுக்கு"

"உண்மையில் ஊனம் என்பது உற்சாகமின்மை தான். அவ நம்பிக்கைதான். கவலைப்பட வேண்டிய ஊனம்.

வழக்கம் போல் அன்று மாலை பிரார்த்தனைக் கூடத்தில் குழந்தைகள் பிரார்த்தனைக்காக வரிசையாக வந்து நின்றனர். ஒரு மாணவன் மட்டும் அழுதுகொண்டே இருந்தான்.

"கணேசா ஏன் அழுகிறாய்?"

"அப்துல்ல இக்டிகிறான் சார்"

"அப்துல்லா அவனை ஏன் இடிக்கிறாய்"

"இலை சா..........யி........று....

"இனிமேல் இடித்தால் உதைப்பேன், கவனமாக நடந்துகொள்"

"சயி சா......ரு....."

பிரார்த்தனை முடித்து இரவு உணவு பரிமாறப்பட்டது. அப்போதும் ஒரு சிறுவன் அப்துல்லா தன்னை இடித்துவிட்டுப் போகிறான் என்று பாதரிடம் புகார் சொன்னான்.

"சாரு, அப்பல்லா நே....க்....கு இவித்துட்டான்"

அப்துல்லாவைப் பாதர் அழைத்தார். கையை நீட்டச் சொல்லி பிரம்பால் ஒரு அடி அடித்தார். அடியைத் தாங்கிக் கொண்ட அப்துல்லா கையெடுத்துக் கும்பிட்டான்.

பாதர் தாமஸ் தன் சிந்தனையை முன்னோக்கி ஓடவிட்டார். அன்று பிற்பகல் மூன்று மணிக்கு முக்காடு அணிந்த அம்மையார் தனது பையனுடன் பள்ளிக் கேட்டினுள் காத்துக் கொண்டிருந்தார். பாதர் எதேச்சையாகப் பார்த்த போது, வாசலில் நின்றிருப்பவர்களைக் கவனித்து அழைத்தார்.

"வாம்மா"

"வணக்கமுங்க"

"வணக்கம்"

"அய்யா என் பையனை இங்கு சேர்க்க வந்தேனுங்க"

பையனைப் பார்த்துக் கேட்டார் பாதர். "உன் பெயரென்ன?"

"அ.....ப...ல்....லா...."

"எத்தனையாவது படிக்கிறாய்?"

"நா....னா...வது"

அப்துல்லாவின் தாய் கண்ணீர் மல்கக் கூறினார். "ஒரு மாதத்திற்கு முன் என் வீட்டுக்காரர் ஒரு விபத்தில் இறந்துவிட்டார். எங்கள் ஊரில் உள்ள பள்ளியில் நான்காம் வகுப்பு படித்து வந்தான் அப்துல்லா. சாப்பாட்டுக்கே கஷடமாயிருக்கும்போது. இவனை எப்படிங்க படிக்க வைக்க முடியும்? நீங்களே பள்ளியில் சேர்த்துக்குங்க"

சிவந்த மேனி. நீண்ட முகம். பத்து வயதிருக்கும். பேதலிக்கும் கண்கள். ஆனால் துறுதுறுவென்ற விசாலமான பார்வை. பால்வடியும் கவர்ச்சித்தோற்றம். கிராமத்து வாழைக்கன்று போல் வாளிப்பான உடல் வாகுடன் இருந்தான். அப்துல்லாவின் அழகில் மயங்கித்தான் போனார் பாதர் தாமஸ். தாயின் குழந்தைக்கு அடைக்கலம் தந்தார்.

அடிவாங்கிய அப்துல்லா தேம்பித் தேம்பித் அழுதான். இரவு சாப்பிடாமல் படுத்துவிட்டான். அப்துல்லா சாப்பிடாமல் தூங்கியதை அறிந்த பாதர் அவன் அருகில் சென்றார். நேற்று வந்தது போல் இருந்தது பாதருக்கு. அப்துல்லா இப்போது பத்தாவது படிக்கிறான். வயது வளர வளர முரட்டுத்தனமும்

வளர்கிறதே. காலத்தின் ஓட்டம் நிறுத்த முடியாதது தானே? வளர வளர அப்துல்லாவிடம் வளரும் முரட்டுத்தனம் பாதரை வாட்டியது. கண்டிப்பை காட்டும் விதமாக அப்துல்லாவை அடித்தாரே தவிர, அவர் மனம் அன்று இரவு அழுதது. குழந்தைகளிடம் அன்புக்கீடாக அழுது விடும் ஆன்மாவுக்குச் சொந்தக்காரர் பாதர் தாமஸ்.

பாதரின் உள்ளமோ கனத்தது. சாப்பிடும் வயது. அவனை விட்டுவிட்டு தான் மட்டும் இன்று இரவு எவ்வாறு உணவருந்தமுடியும்? என்று மனம் படபடத்தது. அப்துல்லாவை மெதுவாகத் தட்டி எழுப்பினார். அவனை அழைத்துக் கொண்டு தன் ரூமிற்குச் சென்றார். தனது உணவில் பாதியை அவனைச் சாப்பிடச் சொன்னார். மீதிப் பாதியைத் தான் சாப்பிட்டார். பூவாய் மலர்ந்த பாதரின் புன்னகை அப்துல்லாவின் மனதுக்குள் இதமாகச் சென்று வருடியது.

"அப்துல்லா, முரட்டுத்தனமாக நடக்காதே"

அப்துல்லா கையெடுத்துக் கும்பிட்டு "தான் இனி இவ்வாறு செய்யமாட்டேன்" என்று சைகையைக் காட்டினான். மனம் அமைதி பெற்ற பாதர் உறங்கச் சென்றார்.

"ஊனம் என்பது உடம்பு சம்பந்தப்பட்டது என்ற உண்மைக்கு கிடைத்த 'உயிரோவியம் அப்துல்லா". செவியும் வாயும் ஊனமுற்றிருந்தாலும் அதனை ஈடு செய்யும் கெட்டிக்காரத்தனம். சுறுசுறுப்பு, படிப்பில் படுசுட்டி, பூமியைப் போல் நிற்காமல் சுற்றிக் கொண்டிருக்கிற தேனீயின் சுறுசுறுப்பு. பார்த்தவர்கள்

யாரும் அப்துல்லாவிடம் ஊனத்தைக் காண முடியாது. குழந்தைகளுக்கு எல்லாம் அப்துல்லாதான் லீடர். சின்ன சின்ன குழந்தைகளுக்குத் தாய் போல் இருந்து குளிப்பாட்டுவான். தலைசீவி விடுவான். சாதம் ஊட்டிடுவான். பாதருக்கு ஓடி ஓடி பணிவிடை செய்வான்.

கடலில் கழிவு நீரும் சங்கமம் ஆவது போல், பாதர் தாமஸ் பற்றியும் ஊரில் சிலர் ஆர்ப்பரித்தனர். பொழுது போகாத சோம்பேறிகளின் வாயில் பாதர் அடிக்கடி பேசப்பட்டார்.

"பாதர் இந்த வயதில் எப்படி இருக்கிறார்?"

"அவருக்கென்னடா, ஊர்ப்பணத்துல உடம்பை வளர்க்கிறார்."

"வெளிநாட்டிலிருந்து எல்லாம் பணம் வருகிறதாமே?"

"ஆமாம்! ஆமாம்!"

"நானே பார்த்தேன். பாங்கில் போய் கத்தை கத்தையாகப் பணம் வாங்கி வருவார்".

"பேசாம இருடா, நம்மூர் குழந்தைகளைத் தானே வளர்க்கிறார்".

"நீ போடா? வக்காலத்து வாங்க வந்துட்டான்"

ஊரையும், தேசத்தையும், உறவுகளையும் விட்டுவிட்டு குறைவுள்ள மனிதர்களோடு உறவாடி வரும் பாதருக்கு இச்சொற்கள் எல்லாம் காதிலே விழாது. விழுந்தாலும் அலட்சியப்படுத்தி விடுவார்.

தனது குழந்தைகளுக்குத் தேவையான அரிசி, பருப்பு, காய்கறிகளை மொத்தமாக வாங்கினார் பாதர். தரமோ விலையோ மாறுபட்டால் பொருட்கள் வாங்கும் இடத்தை தாட்சண்யமின்றி மாற்றிவிடுவார். இதனால் அதிருப்தி அடைந்தவர்கள் ஏராளம். ஆனால் இந்த ஊரைவிட்டு வெளியில் சாமான்கள் வாங்கமாட்டார். தனது கல்வி நிறுவனத்தால் ஊர் மக்கள் நலமடையவேண்டும் என்ற நோக்குடையவர்.

ஒரு சமயம், தரமற்ற மளிகை சாமான்கள் அவரை வேதனைப்படுத்தியது. பல முறை சொல்லியும் தரத்தில் மாறுதல் இல்லை. மாதம் ஒன்றுக்கு லட்சக் கணக்கில் சாமான்களை வாங்கிவரும் கடையை மாற்றி வேறு கடையில் தருவித்தார். இதனால் பழைய கடைக்காரர் வெகுண்டெழுந்தார். தன்னுடைய வியாபாரம் வேறு கடைக்குப் போனதில் பாதர் மேல் அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. தன்னைப் போன்ற வியாபாரிகளிடம் பாதர் பற்றி இல்லாததும், பொல்லாததும் சொல்லி வதந்திகளைப் பரப்பி விட்டார்.

“பாதர் மோசமானவர். பாதர் சின்ன வயசு. உடம்புப் பசிக்குத் தன் பணியாளர்களைப் பயன்படுத்துகிறார். அப்துல்லா என்ற வாலிபனை வைத்துக்கொண்டு, டீச்சர்களை சில்மிஷம் செய்கிறார். பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து, தன் ஊருக்கு அனுப்புகிறார்” என்ற வதந்திகளை வம்புக்காரர்கள் மத்தியில் விதைத்தார்.

பாதரைக் கண்டிக்க கடற்கரைக் கூட்டம் போட்டார்கள். கடற்கரை கூட்டத்தில் பாதிக்கப்பட்ட

வியாபாரி ஆவேசமாகப் பேசினார். கடல் அலைகள் கரையை விழுங்க போட்டி போட்டு வந்துகொண்டே இருந்தன. வெல்ல முடியாத கரையை வெல்ல அலைகளுக்கு ஆசை. கடல் அலைகளின் இரைச்சலை மீறி பாதிக்கப்பட்டவர்களின் அர்ச்சனை பாதர் மீது மோதியது. வானின் வடுபோல கரைநெடுக அலையின் நுரைபடிந்த சுவடுகள். பாறைகளின் மீது ஆக்ரோஷமாக மோதின அலைகள். பொறாமைக்காரர்கள் பாதர் மீது சொல்லால் அடித்தனர். பாறைகளின் ஆகுருதியை நசுக்கத் துடிப்பது போல் அலைகள் மோதின. பாதரின் தொண்டுள்ளத்தையும், கூழாக்கப் பார்த்தனர் விஷமக்காரர்கள். அலைகளுக்கும், பாறைகளுக்கும் காலம் காலமாக யுத்தம் நடப்பது போல், பொறாமைக் காரர்களுக்கும், பொறுமைக்காரர்களுக்கும் யுத்தம் நடைபெற்றுத்தான் வருகிறது.

"யார் இந்த பாதர்?

"எங்கிருந்து வந்தார்?

"தனி மனிதனாக வந்த இவர் இன்று பல கோடி சொத்துக்களுக்கு அதிபராகி விட்டார். ஐந்து பிள்ளைகளை வைத்து பாடம் சொல்லிக் கொடுத்தவர் இன்று முன்றூற்று இருபது பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். அன்று கொட்டகைப் போட நாம் கொடுத்த பணம் தான், இன்று தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, தொழிற்பயிற்சிப் பள்ளி, ஹாஸ்டல், பாதரின் மாளிகை என்று இந்த மாபெரும் கடற்கரையில் ஐந்து மாபெரும் கட்டிடங்களாக உருவாகியுள்ளன.

எல்லாம் நமது பணம்”. பாதர் பற்றிய அவதூறு பேச்சுக்களை கேட்டு, தென்னை மரங்கள் குபீரென்று சிலிர்த்து சிரித்தன. தென்னங்கீற்றுகள் அசைந்தவாறு மறுப்பு தெரிவித்தன. கடல் அலைகள் ஆர்பரித்து எதிர்ப்புத் தெரிவித்தன. ஜால்ரா போடும் மனிதக் கூட்டம் மட்டும் பொய்மைக்கும், புரட்டுக்கும் தலையாட்டிக் கொண்டிருந்தன.

இதெல்லாம் பாதர் செவிகளில் விழாது. அவருக்குத் தெரிந்ததெல்லாம் குழந்தைகள் - படிப்பு - குழந்தைகளின் எதிர்காலம். ஊனமுற்ற குழந்தைகளை தனது குழந்தைகளாகப் பாவித்து, உயர்கல்வி வரை படிக்க வைப்பதுடன் கடமையை முடித்துக்கொள்ள மாட்டார் பாதர். தொழிற் கல்வியும் தந்து ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்து விடுவார். சமுதாயத்தில் ஊனத்தை வென்று சொந்தக்காலில் நிற்கும் திறமைசாலியாக உருவாக்கி விடுவார். தமிழகமெங்கும் பல ஊனமுற்றவர்களைப் பல பதவிகளில் வைத்து, அழகு பார்த்துக் கொண்டிருக்கிறார். தனது உடல், உயிர், உழைப்பு எல்லாம் ஊனத்தில் பிறந்த குழந்தைகளை ஆதரிப்பது.

அன்று பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்று முடிந்தவுடன் டீச்சர் அமுதா வாடிய முகத்துடன் பாதர் அருகில் வந்து அமைதியாக நின்றார். கண்களில் சோகம்.

“பாதர்... பாதர்”

“என்னம்மா?”

சொல்லத் தயங்கினார் அமுதா டீச்சர்.

"சொல்லம்மா சொல்"

"பாதர் இரவு நேரங்களில் அப்துல்லா வேண்டுமென்றே என்னை இடித்து விட்டுப் போகிறான்"

"அப்படியா?"

"அவன் பார்வையே சரியில்லை பாதர்"

இரட்டை நாதஸ்வரம் போல் ஒரு பக்கம் டீச்சர்கள். மறுபக்கம் குழந்தைகள் மாறிமாறி புகார் கணைகளை வீசவீச, பாதருக்கு உஷ்ணக்காற்று ஓடத் தொடங்கியது. பாதரின் கண்கள் சிவந்தன. சாந்தமே உருவெடுத்த பாதரின் கண்கள் கோவைப் பழமாகின.

அப்துல்லாவை அழைத்தார். டீச்சரையும், பாதரையும் ஒன்று சேரப் பார்த்த அப்துல்லா வழக்கம் போல் சிரித்தான். மாறிமாறி இருவரையும் பார்த்தான். அப்துல்லாவை ஊடுருவின பாதரின் கண்கள். பாதர் தனது கோபக்கனலை அப்துல்லா உடம்பில் காட்டினார்.

அப்துல்லா வலியால் துடித்தான். "பே..பே..பே..." என்று கத்தினான். கால், கை எல்லாம் வீங்கிப் போய்விட்டன. தேம்பி தேம்பி அழுதான். பாதர் தன் மனதை இரும்பாக்கிக் கொண்டார். ஒரு பெரிய கல்விநிறுவனத்தில் புல்லுருவியாக வளரும் அப்துல்லாவை அனுமதித்தது குறித்து வேதனையடைந்தார்.

"அப்துல்லா ஏன் இப்படிச் செய்கிறான்? மீசை முளைத்த பருவக் கோளாறா? பக்தியும், ஒழுக்கமும்

கலந்துதானே வளர்க்கிறேன்? இவன் ஏன் இப்படி மாறினான்?” பாதரின் மனம் தானே கேள்வி கேட்டு, பதில் பெற முடியாமல் தவித்தது.

அன்று வழக்கம் போல் அரிமா சங்கத்திலிருந்து மருத்துவக் குழு டாக்டர்கள் ஊனமுற்ற சிறுவர்களைப் பரிசோதிக்க வந்தனர். மாதம் ஒருமுறை மருத்துவ பரிசோதனை நடைபெறுவது வழக்கம். இந்தமுறை டாக்டர் குழுவுடன் கண் டாக்டரும் வந்திருந்தார். கண் டாக்டர் ஒவ்வொருவராகப் பரிசோதித்து வந்தார். அப்துல்லா கண்களை மட்டும் நீண்ட நேரம் சோதனை செய்தார். பாதருக்கு ஒன்றுமே புரியவில்லை.

“டாக்டர், என்ன பிராப்ளம்?”

“பாதர் இந்த மாணவனை மட்டும் நீங்கள் என்னுடைய கிளினிக்குக்கு நாளை தனியாக அழைத்து வாருங்கள்”.

“சரி டாக்டர்”

பாதர் ஓரளவு நிலையைப் புரிந்துகொண்டார். அன்று இரவு பாதருக்கு உறக்கம் வர ஏனோ மறுத்தது. அப்துல்லாவைப் பற்றிய சிந்தனையுடன் பொழுது விடியும் வரை அவரால் காத்திருக்க முடியவில்லை. இரவு ஏனோ அன்று பாதருக்கு நீட்டிக்கொண்டே இருந்தது.

மறுநாள் காலை அப்துல்லாவை அழைத்துக் கொண்டு, கண் மருத்துவமனைக்கு சென்றார். ஐந்து மணி நேரம் வரை அப்துல்லாவின் கண்கள் டாக்டர்களால் சோதனை செய்யப்பட்டன. பாதர் அமைதியாகக் காத்திருந்தார்.

"பாதர்"

"யெஸ்" டாக்டரின் எதிரே அமர்ந்திருந்தார் பாதர். டாக்டரின் வாயில் வரும் வார்த்தைகளையும் ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருந்தார்.

"அப்துல்லாவின் கண்கள் மிகவும் பழுதடைந்து வருகின்றன. இரவு ஆறு மணிக்கு மேல் பார்வை மங்கலாகத்தான் தெரியும் பாதர்". அதிர்ச்சியடைந்த பாதர் பேசாமல் டாக்டரின் கண்களை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்.

"இன்னும் மூன்று மாதத்திற்குள் சுத்தமாகக் கண் பார்வை முழுவதும் மறைந்துவிடும்".

"இரண்டு கண்களுமா டாக்டர்?"

"யெஸ்"

"இதற்கு மாற்று வழியுண்டா?"

"முயற்சிக்கலாம் பாதர்" இருப்பினும் மாலை நேரங்கில் பையனை தனியாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள்".

"மாற்று அறுவை சிகிச்சை செய்யலாமா டாக்டர்?"

"அடுத்த மாதம் லண்டனுக்கு கான்பரென்ஸ் போகிறேன். நவீன சிகிச்சை குறித்து விசாரித்து வருகிறேன். தொன்னூற்று ஒன்பது சதவீதம் வாய்ப்பில்லை". அதிர்ந்துபோன பாதர் வாடிய முகத்துடன், தளர்ந்த நடையுடன் அப்துல்லாவின்

கைகளைப் பிடித்துக்கொண்டு, தனது இருப்பிடம் வந்து சேர்ந்தார்.

அப்துல்லாவை தனது அறையிலே தங்க வைத்துக்கொண்டார். அவனது பெட்டிகளைத் தனது அறைக்கு எடுத்துவரச் சொன்னார். டீச்சர்களுக்கும், சக மாணவர்களுக்கும் விஷயம் ஒன்றும் தெரியவில்லை. அப்துல்லா அதிர்ஷ்டக்காரன். பாதருடன் தங்கப் போகிறான் என்று டீச்சர்களுக்கு எல்லாம் எரிச்சல்.

அப்துல்லாவை தான் அடித்து துன்புத்தியது குறித்து நினைத்து நினைத்து வருந்தினார் பாதர். செவிடு, ஊமை என்ற இரண்டு ஊனத்தையே குழந்தைகள் தாங்க முடியவில்லையே, மூன்றாவது ஊனமான கண்களின்றி எப்படி அப்துல்லா வாழமுடியும்? இதே சிந்தனையுடன் தனது அன்னையின் படத்தை வெறித்துப் பார்த்தார்.

எதிரே சுவரில் மாட்டியிருந்த தாயினைப் பார்த்துக்கொண்டிருந்தார். அன்பும் பாசமும் கலந்த அலைகள் தாயின் படத்திலிருந்து வருவதை உணர்ந்தார்.

"கலங்காதே.... மகனே! ஊனம் வந்த பின்பு ஊமை, குருடு, செவிடு என்று ஏன் வரிசைப்படுததுகிறாய்?. ஊனத்தை வென்றவர்கள் வரலாற்றினைப் பார். இந்த வரலாற்றினை உன் குழந்தைகளுக்குச் சொல்லி உரமேற்று"

ஒரு கண் தெரியாத நெல்சன் தான் நீலநதிப் போரில் மாவீரன் நெப்போலியனை தோற்கடித்தான்".

"ரோமானியக் சக்கரவர்த்தி காக்காய் வலிப்பால் பாதிக்கப்பட்டவர். போர் நடைபெறும்போது தீடிரென்று காக்காய் வலிப்பு வரும். வலிப்பு நீங்கியதும் எழுந்து மீண்டும் போரிடுவார்."

"கோள்களின் இயக்கம் பற்றிய விதியைக் கண்டறிந்த கெப்ளருக்கு கண் பார்வை குறைவு. கை முடம்"

"தாமஸ் ஆய்வாய் எடிசனுக்குச் செவித்திறன் குறைவு"

"கண் தெரியாதவர்களுக்கு "பிரேய்லி" எழுத்துமுறையை அறிமுகப்படுத்தியவருக்கு கண் தெரியாது. திக்குவாய்க்காரர்தான் 20-ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆர்பர்ட் ஐன்ஸ்டீன். உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர் சாமர்செட் ஒரு திக்குவாய்க்காரர்."

தெய்வமாக இருந்து தன்னை ஆசிர்வதிக்கும் தாய் தந்த உற்சாகப் பிரவாகம் உடலெங்கும் ஓடியது. பாதர் புத்துணர்ச்சி பெற்றார்.

ராத்திரி வந்தவுடன் நட்சத்திரங்கள் எல்லாம் கூட்டம் போட்டு "சூரியன் அவ்வளவு தான்" என்று முடிவு கட்டி விட முடியுமா என்ன?

அப்துல்லாவுக்கு மாற்றுக் கண் பொருத்தி, அறுவை சிகிச்சை பெற இந்தியாவில் உள்ள கண் மருத்துவ மனைகளுக்கெல்லாம் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார். காலம் தான் அப்துல்லாவின் ஊனத்திற்கு கண்கள் தர வேண்டும்.

# 5. வர்ஷா

அன்புள்ள வர்ஷா,

நான் மரித்துப் போவதற்குள் - என் மூளை சுயநினைவு தப்பிப் போவதற்குள் உன்னைச் சந்தித்து விடுவேன் என்ற நம்பிக்கை தான் எனக்கு வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கி வைத்திருந்தது. உன் கடிதம் பார்த்து என்னுள் எழுந்த சந்தோஷத்தை எழுத வார்த்தைகளே கிடைக்கவில்லை.

இந்து பேப்பரில் விளம்பரம் பார்த்து உன் பையனின் பயோடேட்டா அனுப்பியிருந்தாய். நான் தான் பெண்ணின் அப்பா என்று தெரிந்த இச்ஷணத்தில், நானடைந்த சந்தோஷத்தை நீயும் அடைந்திருப்பாய். விதிதான் உன் கடிதத்தை என் முன் கொண்டு வந்திருக்கிறது.

மகிழ்ச்சி கடலில் நீந்திக் கொண்டிருந்த அதே சமயத்தில் உன் விதவைக் கோலம் என்னை துயரக் கடலில் தத்தளிக்கச் செய்துவிட்டது தெரியுமா?

கடைசி வரை உன் கணவரை என் கண்ணில் காட்டாமலேயே இருந்துவிட்டாய். சென்னைக்கும் திருவனந்தபுரத்திற்கும் தூரம் அதிகமா? நாம் ஒருவரை ஒருவர் பார்த்து கடந்து போன கால தூரம் அதிகமா?

சம்மந்தியம்மாவே....... உனக்கு...... சாரி, உங்களுக்கு நினைவிருக்கிறதா?..... ஒவ்வொரு

மனிதனும் தன் முதற் காதலை நினைத்துக் கொள்கிறான். அந்த இனிமையான வசந்த நேரத்தை திரும்ப நினைவுக்குக் கொண்டு வருகிறான். அதுபோல் உன் நினைவும் எனது ஆழமான உணர்வுகளை மாற்றியிருக்கிறது. கசப்புகளை வென்றிருக்கிறது.

ராஜராஜசோழனின் பெரிய கோயிலைக் கொண்ட தஞ்சை நகரம் வசந்த கால மணமகளைப் போலவும், தன் மென்மையான மேனியைக் அதிகாலை கதிரொளியில் உலர்த்திக் கொண்டிருந்தது. அங்கு ஒரு அழகிய திருமண மண்டபம். உறவினர் திருமணம். பாட்டி மடியில் உட்கார்ந்திருந்தாய். ஆறு வயதிருக்கும். அப்போது தான் உன்னை முதன் முதலாகப் பார்த்தேன்.

அம்மாவுடனும், அப்பாவுடனும் வந்த என்னை, கட்டி முத்தமிட்டு ஆசிர்வதித்தாள் உன் பாட்டி. எனக்குப் பதினொன்று வயது. அம்மாவும் பாட்டியும் கட்டிபிடித்துக் கொண்டார்கள். அம்மாவும் உன் பாட்டியும் ஒன்றுவிட்ட சகோதரிகளாம்.

"உன் பெரியம்மா" எனக்கு அறிமுகப்படுத்தினாள் அம்மா.

"பெரியம்மாவை இவ்வளவு காலமா பாக்கலையே?" அம்மாவிடம் கேட்டேன்.

"பெரியம்மா சிங்கப்பூரில் இருந்து இப்பத்தான் இங்கு வந்து செட்டில் ஆயிருக்காங்க" இது அம்மா.

"உன் பையன் புத்திசாலியாக இருக்கிறானே?" அம்மாவிடம் உன் பாட்டியின் பாராட்டுக்கள்.

"யாரு பாட்டி?" முதன் முதலில் உன் மழலையின் தெய்வீகக் கானத்தைக் கேட்டேன். அகன்ற விழிகள். குண்டு முகம், கவுன் அணிந்த கருப்பு உருவம். துறுதுறு வென்றிருந்த உன் பார்வை. புஷ்டியான உடம்பு.

"உன் மாமாடி" பாட்டி அறிமுகப்படுத்தினார்கள்.

"மாமாவை பிடிச்சிருக்கா" பாட்டி கேட்டாள்.

"ரொம்ப பிடிச்சிருக்கு" என்று சொல்லி என்னைப் பார்த்தாய். அன்று பார்த்த பார்வையை இன்றும் என் மனமென்னும் பொக்கிஷத்தில் பாதுகாப்பாய் வைத்திருக்கிறேன்.

"உன் பெயரென்ன பாப்பா?"

"வர்ஷா"

"வர்ஷான்னா என்ன அர்த்தம்?"

"தெரியாது"

"வர்ஷான்னா மழைன்னு அர்த்தம்"

என் கேள்வி பதிலைக் கேட்டு பூரித்துப் போனார்கள் அம்மாவும் பெரியம்மாவும்.

"அப்பன்னா என் பேரு மழையா?" சுருக்கென்று கேட்டாய்.

"இல்லை, மழை போன்று எல்லோருக்கும் நல்லது செய்யும் குணமுள்ள பெண்". அர்த்தம் சொன்னாள் பாட்டி.

காதல் தன் மந்திரக்கோலால் என் கண்களைத் திறந்ததும், தன் மெல்லிய விரல்களால் என்

ஆன்மாவைத் தொட்டதும் இப்போதுதான். தன் வசீகரத்தால் என்னை உயிர்ப்பித்த முதல் பெண் வர்ஷா. அன்று முதல் சந்திப்பிலேயே சூரியனை என் பக்கம் திருப்பி சுள்ளென்று அடிக்க வைத்தாய். மனசில் மிச்சமில்லாமல் உன்னோடு சிரிச்சேன். இதெல்லாம் நினைவிருக்கா வர்ஷா?

கல்யாண மண்டபத்திலேயே ஓடி ஆடி விளையாடினோம். சின்னஞ்சிறு சிறகு கொண்டு சிங்கார சிட்டாகச் செம்மாதுளைப் பிளந்து சிரித்து வரும் சிரிப்பாக என்னை சுற்றி சுற்றி வந்தாய்.

நானும் அம்மாவும் பெரியம்மா வீட்டில் ஒரு வாரம் தங்க அப்பா அனுமதி தந்தார்கள். அப்பா மட்டும் ஊருக்குப் போய்விட்டார்கள்.

முதல் சந்திப்பில் உன்னைத் தழுவிய கண்களிலும் இதயத்திலும் இன்று வரை, நீ கொலுவில் இருக்கும் பொம்மை போல் அமர்ந்திருக்கிறாய்.

மனசுக்கே விளங்காத மன ஆழத்தில் உறைந்து கிடைக்கின்ற உணர்வுகளுக்கு உயிர் தருகின்ற உயிர் வடிவமானாய்.

அந்த ஏழு நாட்களும் நீயும் நானும் ஓடியாடிய விளையாட்டுகள். உங்க வீட்டு மாமரத்தை சுற்றி கண்ணாமூச்சி ஆடிய போது அடிக்கடி நீ என்னிடம் மாட்டிக்கொள்வாய். மாமா, மாமா என்று என்னைக் கட்டிப்பிடித்துக் கொள்வாய். இந்தக் காலத்தில்தான் வர்ஷாவின் அன்பு ஒரு வித்தாய் விழுந்து முளைத்து

வளர்ந்தது. ஒரு காதல் வந்து இதயத்தின் கதவுகளை எல்லாம் திறந்து அதன் மூலை முடுக்குகளில் எல்லாம் நுழைந்தது.

இந்த நாட்களில் நீ என்னைப் பாசப் பூங்காவுக்கு அழைத்துச் சென்றாய். கொஞ்சம் இளைப்பாறியதும், கேரம்போர்டு விளையாடனும் என்பாய். உனக்காக வேண்டுமென்றே தோற்றுப் போவேன். ரெட் காயின் போட்டவுடன் "அம்மா, நான் மாமாவை தோற்கடிச்சுட்டேன்" என்று ஓடிப்போய் அம்மாவிடம் சொல்லிவிட்டு மீண்டும் விளையாடுவாய்.

பொம்மைகளைக் கொண்டு வைத்து "மாமா, கொலு வையுங்க" என்பாய்.

பொன் போன்ற உடலுடன், பூவின் முகத்துடன், மாவடு கன்னங்களுடன் மழலையின் மொழி பேசினாய். துறுதுறுப்பு, சுட்டித்தனம், பாசம் இவற்றின் சரியான கலவை. உன் மொழி கேட்டு என்னை வாழ வைத்த சேயாக இருந்தாய். பேசாத தெய்வத்தையும் பேசவைத்த தாயாக இருந்தாய்.

மணிக்கொரு தரம் "கதை சொல்லுங்க மாமா, கதை சொல்லுங்க மாமா" என்று நச்சரிப்பாய்.

எனக்குத் தெரிந்த தெரியாத கதைகளை எல்லாம் சொல்லி உன்னைச் சிரிக்கவைப்பேன். யோசிக்க வைப்பேன்.

நீ உண்ணும் அழகைப் பார்த்திருந்தேன். உன்னை உறங்க வைத்தே விழிந்திருந்தேன். "மாமா" என்றழைக்கும் குரல் கேட்டு பூரித்துத்தான் போனேன்.

அந்த நாட்களில் இரவு நேரங்களில் மாமாவிடம் தான் படுப்பேன் என்று அடம்பிடித்து வந்து என்னுடன் படுத்து உறங்குவாய். உன்னை முதுகில் தட்டிக்கொண்டு கதைகளைச் சொல்லி தூங்க வைப்பேன்.

தாயின் முலைச்சூட்டில் கண்ணயரும் குழந்தையைப் போல் என் கைகளின் கதகதப்பான வெப்பத்தில் பத்திரமாகத் தூங்குவாய். காதுக்குள் விழுந்து, இரத்தத்தில் கலந்து உயிர் தடவிய உன் குரல்கள், மனசுக்குள் தேன் பிழிந்த உன் ஸ்பரிசங்கள், உறங்கிக் கிடந்த மனதை உசுப்பி விட்ட உன் மழலை, எனக்கு மட்டுமே தெரிந்த உன் அன்பு.

வர்ஷா, அந்த ஆரம்ப சந்திப்பில் நீ என்னிடம் விதைத்த பாசம் ஆல்போல் தழைத்து விருட்சமாகி, பின் பட்டுப்போனது. இன்று சம்மந்தியாக துளிர்விடப் போகிறது.

விடுமுறைகளுக்கு என்னை மட்டும் உன் வீட்டில் விட்டுப்போவார்கள் அப்பா. பாட்டி என் மீது கொள்ளை பிரியமாய் இருந்தார்கள்.

சின்ன வயதில் ஆலமரத்தின் விழுதுபோல் அணைத்து நிற்கும் உறவைத் தந்தாய். வாழைக்கன்று அன்னையின் நிழலில் வாழ்வது போல என் இதய நிழலில் வாழ வந்தாய்.

பெரியம்மா நம் இருவரையும் மாட்டு வண்டியில் கடைக்கு அழைத்துப்போவார்கள். ஐஸ்கிரீம், அல்வா எல்லாம் வாங்கிக் கொடுப்பார்கள்.

பார்ப்பவர்களிடம் எல்லாம் "இவன் என் தங்கச்சி பையன்." "இவள் என் பேத்தி" என்று இருவரையும் அறிமுகப்படுத்துவார்கள். இரண்டும் என் கண்கள் என்று சொல்லி ஆளுக்கொரு முத்தம் கொடுப்பார்கள்.

பிறந்த குழந்தையின் உடம்பில் ஈரப்பசை ஒட்டியிருப்பது போல், மாமா, மாமா என்ற உன் ஒவ்வொரு உச்சரிப்பிலும் உன் உதிரமும் உயிரும் என்னோடு ஒட்டியிருந்தன.

உனக்கு நினைவிருக்கிறதா? ஒரு சமயம் மன்னார்குடியிலிருந்து, லீவுக்கு வந்திருந்தேன். திருவையாறு தியாகராஜர் ஆராதனைக்கு, பாட்டி என்னை மட்டும் அழைத்துச் சென்றார்கள். நீ, அழுது ஆர்பாட்டம் செய்தாய். "மாமா மட்டும் உசத்தியா? நானும் வருவேன்" என்றாய்.

"இல்லை வர்ஷா, மூன்று நாட்கள் தங்கி கச்சேரி கேட்கப் போகிறோம். மாமா தான் எனக்குத் துணை. நீ அம்மாவுக்குத் துணையாக இரு" என்று பாட்டி ஆறுதல் சொன்னதும் அமைதியானாய்.

ஆனால் அடித்தப் பந்தைப் போல மறுநாள் காலையே, தஞ்சைக்குத் திரும்பிவிட்டோம். பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி காலமானதால் நிகழ்ச்சிகள் ரத்தாகிவிட்டன.

எங்களைக் கண்டதும் கைகொட்டிச் சிரித்தாய்.

"மாமா நீங்க மட்டும் போனிங்கள்ளே? அதான் திரும்பி வந்திட்டிங்கே! என்னையும் அழைச்சிட்டுப் போயிருந்தா இது நிகழ்ந்திருக்காது" என்றாய்.

ஆனால் வாழ்க்கைப் படகில் நீ மட்டும் வேறொருவருடன் சென்றாய்?

இது என்ன விதியா? என் ஆத்ம சக்தியின் வலிமையா? இறைவனின் விளையாட்டுத்தான் என்ன?

வர்ஷா உன்னுடைய என்ஜினியர் பையனுக்கு என்னுடைய என்ஜினியர் பெண்ணை மனப்பூர்வமாக திருமணம் செய்து வைக்க சம்மதம் தெரிவிக்கிறேன்.

திருமணம் எப்படி நடத்த வேண்டும் என்ன செய்ய வேண்டும் எல்லாம் உன் விருப்பப்படியும், ஆசைப்படியும் செய்ய மனைவி உத்தரவிட்டுள்ளாள்.

நீ எப்ப வருகிறாய். முறைப்படி பெண் பார்க்க பையனை அழைத்து வா.

அப்போது உன்னை பார்த்து நான் என் நிலை மறக்காமல் இருக்கவேண்டும். நீ வரும்போது ஆறு வயது வர்ஷாவையும், பதினாறு வயது வர்ஷாவையும் அழைத்து வா! அவர்களைத்தான் எனக்குத் தெரியும், இருவரும் எனக்குப் பரிச்சயமானவர்கள்.

சம்மந்தியம்மாவுக்குரிய மரியாதைத் தரவேண்டும். ஆறுவயதிலிருந்து பதினாறு வயது வரை என்னுடன் வாழ்ந்த என் வர்ஷா தனியாகவே இதயத்தில் இருந்து போகட்டும்.

காலம் தான் மாறும் தன்மையுடையது. பாட்டியும் இறந்து போனார்கள். உன் தந்தையும் அகால மரணம் அடைந்தார். உனக்குப் பத்து வயது ஆனபின்பு நம் குடும்பங்களிடையே இருந்து வந்த உறவு விரிசலாகிப்போனது ஏன் என்றே தெரியவில்லை?

பெரியம்மா என் மீது காட்டிய பாசமா? உன் அம்மாவின் செல்வச் செருக்கா? எங்களின் ஏழ்மைத் தன்மையா? எனக்கு அப்போதும் புரியவில்லை? இப்போதும் தெரியவில்லை. விதியின் நாடகம்.

ஆனால் உன் நினைவுகள் இல்லாத நாளில்லை. எனக்கு பருவ வயது வந்தவுடன் நீ என்னிடம் வாழ்ந்து வருவதை உணர்ந்தேன்.

விதையிட்டு, நீரூற்றி, செடியாக வர்ஷா வளர்ந்து வருகிறாள் என் மனதில் என்பது, எனக்கு பள்ளிப்படிப்பை முடித்தவுடன் புரிந்தது.

அப்பாவுக்கு மாற்றுதலாகி தஞ்சைக்கு வந்தோம். குடும்ப உறவுகளில் ஏற்பட்ட விரிசல்களில் உங்கள் வீட்டிற்கு என்னால் வரமுடியவில்லை. ஏனோ உன் அம்மா கசப்பை விதைத்தார்கள்.

கல்லூரியில் சேர்ந்த போது நீ ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாய். நான் கல்லூரிக்குப் போகும் போது நீ ஸ்கூலுக்கும் போகும் போதும் பார்வையிலேயே ஐந்து ஆண்டுகள் வரை பேசி உறவாடினோம்.

ஸ்கூலுக்கு ரிக்ஷாவில் நீ செல்வாய். உன் தரிசனம் கிடைத்தால் தான் கல்லூரி செல்வேன். கல்லூரி முடிந்து மீண்டும் மாலை தரிசனத்திற்கு ஒடிவந்து நிற்பேன்.

நாளெல்லாம் உன் நினைப்பு. யூனிபாமில் வருவாய். உன் காந்தக் கண்கள் என்னைக் கவர்ந்திழுக்கும். பார்வையில் நலம் விசாரிப்பாய்.

பார்வையினாலேயே அள்ளி மனசுக்குள் அனைத்துக் கொள்வதைப் போல் பார்ப்பாய்.

பளிச்சிட்டு வரும் மின்னல் ஒரு வினாடிப் பொழுதில் தோன்றி மறைந்து விடுகிறது. அதைக் கண்ட கண்கள் வேறெதையும் காணமுடியாமல் நீண்ட நேரம் இருண்டு விடுகிறது. இதைப்போல் ஒரு நாளில் சில நொடிகளே உன்னைப் பார்க்கிறேன். அந்த வினாடித் தரிசனம் நாள் முழுவதும் கண்ணும் கருத்தும் உன் நினைவென்னும் இருட்டில் இருந்து வாடுகிறேன்.

ஒவ்வொரு நாளும் அந்தச் சில வினாடிகளுக்காக எவ்வளவு நேரம் தொலைத்திருப்பேன் தெரியுமா? கல்லூரி போகும் முன்பு, நீ ஸ்கூலுக்கு ரிக்ஷாவில் போகும் தரிசனத்தைக் காண, அந்த நொடிப்பொழுதிற்காக, கூண்டிலிருந்து விடுபட்ட பறவையைப் போல் ஓடிவருவேன்.

சத்தம் மிகுந்த கார்களும், சைக்கிளும், லாரிகளும் ஓடும் சாலையில் உன்னைத் தாங்கி வரும் ரிக்ஷாவைப் பார்த்தவுடன் என் மனதின் துள்ளல். என்னருகே உன் வாகனம் கடந்து போகும்போது நீ வீசும் பார்வை. ஆகா அந்தப் பார்வைதான் அன்று முழுவதும் எனக்கு உற்சாக பானம்.

பருவ வயதில், "மாமா சௌக்கியமா?" என்று நீ என்னைப் பார்ப்பாய். காதலியின் கடைக்கண் காட்டியதாக நான் துள்ளி ஓடுவேன். உன் விழியில் வழியும் களிப்பு. உதட்டில் அரும்பும் புன்னகை. இதைத்தான் உன்னிடம் இருந்து நான் நாள்தோறும் பெற்றது.

முதன் முதலில் உன்னைப் பாவாடைத் தாவணியில் பார்த்த போது பூவாடை வீசிவரும் பூத்த பருவ

மங்கையாய் காட்சி தந்தாய். பால்வடியும் உன் முகம் மாறியிருந்தது. எனைக் கண்டதும் உன் முகம் நாணத்தால் சிவந்தது. பருவத்தின் மாற்றம். ஹார் மோன்களின் சுரப்பு. பெண்மையின் பூரிப்பு.

எந்தத் தீண்டலுக்கும் ஆட்படாத காட்டு மலரின் வனப்பும், வாளிப்புமாக உன் இளமை பிரகாசித்தது.

நாம் கண்களால் மட்டுமே ஸ்பரிசித்துக் கொண்டோம். அந்தக் கண்களின் ஸ்பரிசத்திலிருந்த பரவசத்தை என் இதயமும் நரம்புகளும் தசை நார்களும் மயிர்க்கால்களும் இதுவரை வேறேதிலும் எய்தவில்லை வர்ஷா!

உன்னைக் காண தினம் தினம் வரும்போது, பாதையின் இருமருங்கிலும் உள்ள பூக்கள் எனக்கு குட்மார்னிங் செய்வதைக் கூட லட்சியம் செய்ததில்லை. புளகாங்கிதம் அடையவில்லை. உன்னைப் பார்ப்பது மட்டும் இலட்சியமாய் இருந்தது.

உன்னைப் பார்க்கும் போது எனக்கேற்பட்ட ஆசைகள் கொஞ்சமா.

அமாவாசை இரவில் ஒரு வார்த்தையும் பேசாமல் நட்சத்திரங்களைப் போல விடிய விடிய கண் சிமிட்டிக் கொண்டிருக்க ஆசைப்படுவேன்.

ஒரு பார்க்கில் நின்று இருவரும் மழையில் நனைந்து, மழை நின்றதும் உன் தாவணியெடுத்து தலையைத் துவட்டிக் கொள்ள ஆசைப்படுவேன்.

இந்த ஆசைகள் இன்னும் அப்படியே இருக்கின்றன.

இந்த வாயு மண்டலத்தில் நீ சுவாசிக்கும் காற்றும் கலந்திருக்காதா என்று தான் நான் சுவாசிப்பதற்கே ஆசைப்படுவேன்.

பல நாள் கனவில் வந்து பாதிமுகம் காட்டி ஓடிவிடுவாய். கல்லூரி நாட்களில் இரவெல்லாம் உன் ஞாபகக் கொசுக்கள் என்னை தூங்க விடுவதில்லை. கல்லூரியில் நண்பர்களுக்கெல்லாம் என் காதல் தெரியும். வர்ஷா என்று தான் என்னை கேலி செய்வார்கள்.

கொட்டையை எறிந்துவிட்டு பழத்தை மட்டும் சுவைக்கும் குழந்தையைப் போல் என் இதயத்தில் உன்னைப் பற்றிய இனிப்பான நினைவுகளுக்கு மட்டும் இடம் தந்திருக்கிறேன்.

உன்னைப் பார்க்கும்போது எனக்குள் ஏற்பட்ட இரசாயண மாற்றத்தை என்ன சொல்ல. உன்னை நாள்தோறம் தரிசித்த பின்பு என் பின்னால் மனசு வராமல், மனசின் பின்னால் நான் போன நேரங்களும் உண்டு.

சூரியன் தன்னை நேசிக்கிறதா என்பது தாமரைக்கு முக்கியமல்ல. சூரியனை நேசிப்பது தாமரையின் தர்மம். அதுபோல குழந்தைப் பருவத்தில் இதயத்தில் இடம் பிடித்த உன்னை நேசிப்பது என் தர்மம் அல்லவா வர்ஷா?

உன்னைக் காணாத கண்கள் இல்லை. உன்னை எண்ணாத நெஞ்சம் இல்லை என்ற நினைப்பில் நானும் வாழ்ந்தேன்.

உன் பார்வையில் ஆயிரம் கதைகள் சொன்னாய். படித்துப் படித்து தினம் மகிழ்ந்து போனேன்.

எனக்கு கல்லூரிக்கு டிரெயின் ஒன்பது முப்பதுக்கு. நீ எட்டே முக்காலிருந்து ஒன்பது மணிக்குள் ஸ்கூல் போவாய். அந்த நேரத்தில் என் மகாராணியைக் காண ஓடோடி வருவேன். நாள்தோறும் கட்டவிழ்ந்த என் கண்கள் இரண்டும் உன்னைத் தேடும். இரவில் பாதி கனவு வந்து மறுபடியும் கண்களை மூடுவேன். நாம் கண்களில் பேசிய வார்த்தைகளில் பேதமில்லாமல் இருந்தன.

குழந்தைப் பருவத்தில் பால் போல் சிரிப்பாய். பனிபோல் என்னை அணைப்பாய். கண்போல் வளர்ந்து இன்று என்னை கவிஞனாக மாற்றிவிட்டாய் வர்ஷா.

வர்ஷா உனது இருவிழியிலே நித்தம் நித்தம் எனக்கு மாலையிட்டாய். கள்ளுண்டவனைப் போல் உன் பார்வையினைக் குடித்துக் கல்லூரிக்குச் செல்வேன்.

அந்த நாட்களில் எனக்கு நீ காலங்களில் வசந்தமாகவும், கலைகளிலே ஓவியமாகவும், மாதங்களில் மார்கழியாகவும், மலர்களிலே மல்லிகையாகவும் மணம் தந்தாய்.

என் நெஞ்சம் என்பது நீயாக என் நினைவுகள் எல்லாம் ஒளியாக என் காதல் கோயில் சிலையாக என் உடல் முழுவதும் வியாபித்திருந்தாய் வர்ஷா.

நாள்தோறும் உன்னைப் பார்க்க வரும் போது பேச ஆசைப்படுவேன். விழி பார்க்கச் சொன்னாலும் மனம் பேசச் சொன்னாலும் வாய் வார்த்தை வராது நிற்பேன். ஆசைபாதி, உன் அம்மாவிடம் அச்சம் பாதி, நீயோ உன் பார்வையை உதிர்த்துவிட்டுப் பறந்துவிடுவாய்.

உன்னை அன்றாடம் சந்தித்த வேளைகளில் நான் சிந்திக்கவே மறந்திருந்தேன். என் பார்வையை உன் கண்களில் தந்துவிட்டு நிற்பேன்.

கல்லூரியில் இருக்கும்போது உன் கண்ணோடு கண் சேர உன்னோட நான் சேர யாரைத் தூது விடலாம் என்று தென்றலை ஒரு முறைகேட்டேன். அந்தத் தென்றல் கூட உன் அம்மாவைக் கண்டு பயந்தது. என்ன சிரிக்கிறாய்!

என் பார்வையை அதிசயமாகப் பார்ப்பாய். என் காதலை ரகசியமாக விழிகளால் சொல்வதாக நான் மகிழ்ச்சியடைவேன்.

நீ பள்ளிப்படிப்பை படிக்கும்வரை கண்களால் கதை பேசி காவியம் படைத்துக்கொண்டிருந்தோம். நான் என் காதல் சிறகைக் காற்றினில் விரித்து வானவீதியில் பறந்தேன். கண்களில் நிறைந்த உன் நினைவென்னும் கடலில் குளித்து வந்தேன். எண்ணங்களால் பாலம் அமைத்து இரவும் பகலும் நடந்து வந்தேன். இளமைக் காலத்தில் நாமிருவரும் இருந்ததை எண்ணி இரு கை கொண்டு வணங்கி வந்தேன்.

என் கற்பனை ஓட்டத்திற்கு, உன் கண்களின் தரிசனத்திற்கு, யார் கண்பட்டது என்று தெரியவில்லை. என் காதல் வாழ்வுக்கு முதல் அடி விழுந்தது ஒரு நாள்.

நீங்கள் எல்லாம் குடும்பத்துடன் மதுரை சென்று விட்டீர்கள் என்று அத்தை வீட்டில் சொன்னார்கள். மரம் சாய்ந்தது போல் சாய்ந்து போனேன் தெரியுமா? நானும்

கல்லூரி படிப்பு முடித்து திருச்சிக்கு பி.ஜி. படிக்கச் சென்றேன்.

மதுரையில் எந்த காலேஜ்ஜில் படிக்கிறாய் என்பது தெரியாது. திருச்சியில் படித்துக் கொண்டிருக்கும்போது மதுரை செல்லும் பஸ்களை எல்லாம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பேன்.

பஸ்களே, என் வர்ஷாவை பார்க்க தூது போங்களேன் என்பேன். வானத்தையும் நிலவையும் கூட கெஞ்சிப் பார்த்தேன். தூது செல்ல அவர்கள் ஏனோ தயங்கினார்கள்.

மாமரத் தென்றலில் விளையாடி, தஞ்சைத் தெருக்களிலே சந்தித்த தென்றலும் உன்னோடு பொதிகை மலை நோக்கி மதுரை சென்றுவிட்டது. மதுரை மீனாட்சியுடன் சேர்ந்து நீயும் தமிழை வளர்க்கப் போனாய் போலும்.

ஒவ்வொரு நாளும் உன் முகம் கண்டு பூரித்து வந்தேன். இன்று உன் பாதையிலே உன் பார்வையிலே வலம் வந்த என்னைத் தவிக்கவிட்டு மதுரை சென்று விட்டாய். உன் நலம் பற்றி பறந்து செல்லும் பறவைகளிடம் கேட்டேன். பாடிச் சென்ற தென்றலிடம் கேட்டேன். உறுமிச் செல்லும் பேருந்துகளிடம் கேட்டேன். அலையும் என் நெஞ்சை உன்னிடம் சொல்லச் சொன்னேன்.

பன்னீர் பூப் போன்ற உன் பார்வையும், உன் நெற்றி பரப்பினில் விழும் முத்தான வேர்வையையும் பார்க்கத் துடித்த என் கண்கள் ஏமாந்து போயின. ஒவ்வொரு நாள்

காலையிலும் கோலமயில் போல் வருவாய். குங்குமப் பூப் போல் கண்களால் சிரிப்பாய். உன் சிரிப்பும் பார்வையும் என்னை இன்பக் கோட்டைக்குள் அழைத்துச் சென்றன. இன்று உன் பார்வையின்றி என் கண்களிரண்டும் வாடுவதென்ன?

ஸ்கூலுக்குச் செல்லும் போது காலையில் தாமரைப் பூவாகவும், மாலையில் மல்லிகைப் பூவாகவும் காட்சி தருவாய். இரவில் அல்லிப்பூவாய் என் மனதில் வீற்றிருப்பாய். என்றும் மணக்கும் முல்லைப் பூவாய் வாழ்ந்திருந்தாய். இன்று காகிதப் பூவாய் தெரிகிறாயே வர்ஷா?

திருச்சியிலே கல்லூரி படிப்பு முடிந்ததும் சென்னைக்கு வேலைக்குச் சென்றுவிட்டேன் வர்ஷா. சென்னை செல்லும் போதும் மதுரையையும் வர்ஷாவையும் மனதில் சுமந்து சென்றேன்.

சென்னையிலே பாச்சிலர்ஸ் பாரடைஸ் தெரியுமா உனக்கு? அதான் வங்கக் கடல் ஓரம் மெரினா பீச்சருகில் இருக்கும் திருவல்லிக்கேணி. அங்கே தான் ரூமில் தங்கியிருந்தேன்.

கோட்டையிலே வேலைப் பார்த்து வந்தேன். அலுவலகம் முடிந்ததும் வங்கக் கடலின் ஓரமாக பொடி நடையாக ரூமுக்கு நடந்து வருவேன். ஏன் தெரியுமா? மாலை நேரத்தில் உன் நினைவுகளை சுமந்து வரத்தான்.

கடல் அலைகளிடம் என் வர்ஷாவின் காதலைச் சொல்வேன். அவளுடன் சிறுவயதில் ஓடியாடி விளையாடியதைச் சொல்லிக்கொண்டே வருவேன்.

பருவ வயதில் பார்வையில் பவனி வந்த நம் உறவைச் சொல்வேன். அலைகள் என்னைத் தாலாட்டி வருடிக் கொடுத்தன.

என் பிரிவாற்றாமை தாங்காமல் சமயங்களில் அலைகள் பாறை மேல் மோதி எனக்காக அழுத காட்சிகள் உண்டு. இரவு நேரங்களில் நானும் என் அறை நண்பனும் பாடல்கள் பாடுவோம். என் பாடல்கள் அனைத்தும் என் வர்ஷாவின் காதலைப் பற்றித் தான் இருக்கும்.

மதுரையில் இருக்கும் உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?

ஒரு நாள் கடிதம் வடிவில் ஒரு பேரிடி என் இதயத்தை தாக்கியது. பெரும் சூறாவளிக் காற்று வீசியது. என் மண்டையில் பேரிடியாய் இடிகள் தாக்கின. காய்ச்சிய இரும்பு கம்பினால் என் கண்கள் குத்தப்பட்டன. காதுக்குள் கோடி நாகங்கள் கொத்தின. நிலைகுலைந்து போனேன். ஆம்! உனக்குத் திருமணமாம்! அத்தை எழுதியிருந்தார்கள்.

ஊரையும் உறவுகளையும் அலட்சியப்படுத்தி சென்றார்கள் உன் அம்மா. கல்லூரி படிப்பு முடிந்ததும் உனக்குத் திருவனந்தபுரத்தில் திருமணம் நிச்சயிக்கப்பட்ட செய்தியை, தஞ்சையில் இருக்கும் அத்தை மூலம் தெரிந்துகொண்டேன். உன்னிடம் உள்ள பிரியத்தை, அன்பை, என் காதலை, உன்னைக் கைப்பிடிக்கும் என் ஆவலை, தெரிந்து வைத்திருந்த வயதான அத்தை உன் திருமணத்திற்கும் வந்தார்களாம்.

இப்போதெல்லாம் நான் ஒருதலை ராகப் பாடலையும், தோல்வியடைந்த காதல் பாடல்களையும் இரவு நேரங்களில் பாடி மகிழ்கிறேன். வங்கக் கடல் அலைகளும் என் ஒரு தலை காதலுக்குத் தாளம் போட்டுக்கொண்டிருந்தன. கோள்களின் இயக்கத்தை சோதிடரால் மாற்ற முடியாததைப் போல், கடவுளின் சித்தத்தை மனித எண்ணத்தால் மாற்றமுடியுமா?

கண்ணுக்குள் உனைக் காணாத உறுத்தல், கண்களின் ஓரங்களில் நீர் பிசுபிசுப்பு. சிறகொடிந்த பறவையாய், துடித்த மனசோடு, ஏக்கமும் சோகமுமாய் அலைந்தேன்.

என் காதல் கனவுகள் கலைந்து சிறகுகள் முறிந்து போனாலும், என் இதயத்தில் இருந்த சிறகுகளை முறிக்க என்னால் முடியவில்லை.

மனம் படைத்தேன் உன்னை நினைத்து வாழ்வதற்கு. வடிவெடுத்தேன் உன்னை மறந்து வாழ்வதற்கு. எவ்வளவோ முயற்சித்தும் உன்னை மறக்க முடியவில்லை வர்ஷா.

வர்ஷா உன் காதல் தான் என் ஒரே மகிழ்ச்சி. அது இரவில் ஆனந்த கீதம் பாடியது. வாழ்வின் இன்பத்தையும், இரகசியத்தையும் உணர்த்த எழுப்பியது உன் சிநேகம்.

தெய்வீகக் காதல் பொறமையற்றது. பாசத்திற்காக ஏங்கும். காதல் முறிந்தாலும் உன் உறவுகள் எந்த வகையாலும் என்னிடம் வந்து சேரும் என்ற நம்பிக்கை. என் ஆன்மாவை யாரும் காயப்படுத்த முடியாது.

ஆன்மாவை உன்னத காதலால் வளர்த்து வந்திருக்கிறேன்.

ஒரு முறை உன் பழைய வீட்டிற்குச் சென்றிருந்தேன். பின்புறமுள்ள மாமரங்கள், மொட்டை மாடி .... இவையெல்லாம் என் ஆலயம். இங்கேதான் என் காதல் தொடங்கப்பட்டது. என் காதல் வாழ்த்தப்பட்டது. உயிர் ஆராதனை செய்யப்பட்டது. இதயம் மண்டியிட்டு வழிபட்டது.

நண்பன் சொன்னான். "நீ தான் அரசு வேலையில் உயர் பதவியில் இருக்கிறாயே, உன் அக்காவிடம் பெண் கேட்டிருக்கலாமே?" என்றான். வர்ஷாவின் அம்மாவின் குணம் எனக்கு நன்கு புரியும். சூழ்நிலையும் எனக்குத் தெரியும்; என் சம்பளத்தை நம்பியிருக்கும் குடும்பம். திருமணத்திற்கு நிற்கும் தங்கை. படித்துக் கொண்டிருக்கும் தம்பிகள். வறுமையுள்ள குடும்பத்திற்கு, செல்வச் சீமாட்டி சகோதரியாக இருந்தால் என்ன? உறவுகளாயிருந்தால் என்ன? எப்படி பெண் தருவார்கள்? நான் ஊமையாக இருந்து காதலைத் தியாகம் செய்தேன்.

நீ பறந்து போனாய், என்னை மறந்து போனாய்... பார்த்துக்கொண்டிருக்கும் போது கண்களிரண்டையும் கவர்ந்து சென்றாய். நீ சென்ற பின்பு என் காதுகளுக்கு மொழியில்லை. நாவுக்குச் சுவையில்லை. நெஞ்சுக்கு நினைவில்லை. மனதுக்கு உறக்கமில்லை. கண்களுக்கு காதல் இல்லை.

உன் பார்வையின் காதலை என் இதயத்தில் பூட்டி வைத்தேன். நாளும் காவல் காத்து வந்தேன். கதவை உடைத்து, சிறகை விரித்து பறந்து சென்றுவிட்டாய்?

நீ சென்ற பின் சோககீதங்கள் என்னை தாலாட்டின. ஊரெல்லாம் தூங்கும் போது விழிந்திருந்தன என் இரவுகள். உலகமெல்லாம் சிரிக்கையில் அழுதிருந்தன என் மனது. பாதையிலே வெகு தூரம் சென்றுவிட்டாய். இனி உன்னைக் காண்பதெங்கே? கூடுவதெங்கே?

காலங்கள் உள்ளவரை காளையர்கள் யாருக்கும் இந்தக் காதல் வரவேண்டாம் வர்ஷா. எனக்கேற்பட்ட இந்த கோலம் எவருக்கும் வரவேண்டாம்.

நினைக்கத் தெரிந்த என் மனதிற்கு உன்னை மறக்கத் தெரியவில்லை. பழகத் தெரிந்த என் உயிருக்கு உன்னை விலகத் தெரியவில்லை. உன்னைப் பார்த்து மயங்கத் தெரிந்த என் கண்களுக்கு உறங்கத் தெரியவில்லை.

கொதிக்க தெரிந்த நிலவிற்கு குளிரத் தெரியாததைப் போல் படரத் தெரிந்த பனிக்கு மறையத் தெரியாததைப் போல் பிரிக்கத் தெரிந்த கடவுளுக்கு உன்னை என்னிடம் இணைக்கவும் தெரியவில்லை.

என் வாழ்க்கைக் கனவுகளை கலைத்து ஒரு வாசல் திறந்ததென்று நினைத்தாயோ, மாயப்பறைவை ஒன்று வானில் பறந்து வந்து அழைத்ததும் சென்று விட்டாயோ?

இப்போதெல்லாம் நான் நாள்தோறும் இரவில் பாடும் பாடல் என்ன தெரியுமா?

எங்கிருந்தாலும் வாழ்க உன்
இதயம் அமைதியில் வாழ்க
மஞ்சள் வளத்துடன் வாழ்க - உன்
மங்கள குங்குமம் வாழ்க .....
இங்கே ஒருவன் காத்திருந்தாலும்
இளமை அழகைப் பார்த்திருந்தாலும்
சென்ற நாளை நினைத்திருந்தாலும்
திருமகளே நீ வாழ்க - என்
வர்ஷா வாழ்க.

பாடலைப் பாடிய பின்தான் நாளும் உறங்கச் செல்வேன். இந்தப் பாட்டிற்கு கடல் அலைகள் சோக இசை வாசிக்கும். கடல் அலைகள் இப்போது எனக்கு ரொம்ப சிநேகம். இறைவனது விளையாட்டில் முடிந்த கதை தொடர்வதில்லை. என் விதியில் தொடர்ந்த கதை முடியவில்லை. உனை மறக்க முடியவில்லை.

எங்கே வாழ்க்கைத் தொடங்கும். அது எங்கே எப்படி முடியும் என்பதும், இதுதான் பாதை என்பதும் யாருக்கும் தெரியாது. பாதையெல்லாம் மாறி பயணம் முடிந்து வரும் என்ற மாற்றத்தை உணர்ந்து கொண்டால் மயக்கம் தெளிந்துவிடும். கவியரசின் வரிகள் எனக்காக எழுதப்பட்டிருந்தன.

மாதங்கள் ஓடின. உன்னைக் காணாமல் என் மனம் மட்டும் மெதுவாக ஓடியது. மீண்டும் அத்தையிடம் இருந்து கடிதம் என் நெஞ்சை உலுக்கியது. ஏதோ ஒரு விநோத கத்தி என் நெஞ்சை கிழித்தது. என் தெய்வீக இதயம் சுக்குநூறாய் உடைந்திருப்பதை அறிந்தேன்.

உன் கழுத்தின் மீது கணவனின் நுகத்தடி விழும்வரை, நாத்தனார், மாமியார் கொடுமைகளுக்கு ஆளாகி அடிமை ஆகும்வரை, உன் அன்புத்தாயின் அரவணைப்பில் இருந்தாய்.

உன் கணவன் உன்னை நாளும் அடித்து துன்புறுத்துகிறானாம். வெள்ளை நறுமணமிக்க சிறகுகளுடன் வானில் பறந்து திரிந்த பெருமைமிக்க ஒரு உயிர் ஒரு பொறியில் சிக்கிவிட்டது. துயரம் தாங்காமல் அம்மாவுக்கு கடிதம் எழுதினாய். கடிதத்தைப் பார்த்து சினமுற்றாள் உன் தாய். உடனடியாக டாக்சிப் பிடித்து திருவனந்தபுரம் வந்தார்கள். மூன்றாவது வீட்டில் இருந்துகொண்டு யாருக்கும் தெரியாமல் தஞ்சைக்கே உன்னை அழைத்து வந்து விட்டார்களாம். நல்ல வேளை, துணிச்சல்காரி வயிற்றில் பிறந்தாய். தாயின் செல்லத்திற்கும், மணமகனின் பேராசைக்கும் பலியாகிப் போனாய். காலத்தை விரட்ட தஞ்சையிலே ஒரு பிரைவேட் ஸ்கூலில் டீச்சராக வேலைப்பார்த்து வருவதாக அறிந்தேன்.

என் வர்ஷாவின் இதயம் நொறுங்கிவிட்டதா? அது என்னிடம் அல்லவா பத்திரமாக இருக்கிறது. என் ஆறாவது அறிவு வேகமாக முழித்துக் கொண்டது.

'ச்சி.,' இதுவரை வர்ஷாவைப் பார்த்தாய், பழகினாய், உன் காதலை வளர்த்தாய். இன்று அவள் இன்னொருவனின் சொத்தல்லவா? நீ எப்படி பழைய நினைவுகளோடு பார்த்து ஆறுதல் சொல்ல முடியும்?

மனம் தடைபோட்டது. தடையை மீறி காதலால் ஒன்றும் செய்ய இயலாமல் சும்மா இருந்துவிட்டது.

உன் சோக முகத்தை - முறிந்த சிறகுகளை.. கண்ணீர் சிந்தும் கண்களை பார்க்க இயலாது என்று வாளாயிருந்தேன்.

நானும் நீயும் அந்த வயதில் சந்தித்துக் கொண்ட நாட்களில் நம் உயிர்கள் இரண்டும் ஒன்றையொன்று தேடிக் கலந்து கொண்டதாக நினைத்திருந்தேன்.

நீ மாற்றான் தோட்டத்து மல்லிகையாக மாறிப்போனபோது துடித்துப் போனேன். சூறாவளிப் புயலில் மழைக்குப் பலியான பலவீனமான நெல் நாற்று போல் இருந்தேன். இன்று நீ கூரிய அரிவாளால் வெட்டப்பட்ட அல்லி மலராய் தெரிகிறாய். வெள்ளத்தில் வீடு இழந்ததைப் போல் உன் தாயாரின் நிலைமை. என்னடா இது சோகம்!

ஊமையின் கனவை யார் அறிவார் - என் உள்ளத்தின் காதலை யார் திறப்பார். மூடிய மேகம் கலையும் முன்னே நீ போனதென்ன வர்ஷா.

கோடையில் ஒரு நாள் மழைவரலாம்.... என் கோலத்தில் இனிமேல் எழில் வருமா.... மாலையில் ஒருநாள் தென்றல் வரலாம், என் பார்வையில் இனிமேல் சுகம் வருமோ?

அமைதி இல்லாத நேரத்திலே அந்த ஆண்டவன் என்னையே படைத்துவிட்டான். நிம்மதி இழந்தே நான் அலைந்தேன்.... இந்த நிலையிலும் உன்னை மறக்கமுடியலேயே வர்ஷா.

துள்ளி ஓடும் உன் கால்கள் எங்கே? தூண்டில் போடும் உன் கண்களெங்கே? கள்ளப் பார்வை

போனதெங்கே? கன்னிச் செல்லமே என் மனமும் உறங்கவில்லை, விழியும் உறங்கவில்லை.

நாம் சிறுவர்களாகவே இருந்திருக்கலாம் வர்ஷா. கண்ணை இமை போல் காத்திருப்பேன். எங்கோ போய் வாடிய மலராய் நிற்கிறாயே?.

குழந்தையாய் இருந்தபோது உனக்குத் தங்க மனசு. என்னைப் பார்க்கும் போதெல்லாம் பொங்கிய உன் மனசு, நூறு வயசுக் கண்களைக் கொண்டு ஆறு வயசு மழலையில் என்னை கிறங்கடித்தாய்.

எண்ணெயில் எரியும் விளக்குப் போல, நீ என்னையே ஈர்த்த அந்தச் சிரிப்பு. ஏதோ நடந்தது நடப்பு. அதில் ஏதோ சுகமும் இருந்துச்சு.

யாருக்கு இந்தக் கதையெல்லாம் தெரியும். சாமிக்கு மட்டும் எல்லாம் புரியும் வர்ஷா.

உன் பிஞ்சு முகத்தின் ஒளியிழந்திருப்பாயே? பேசிப் பழகும் மொழி மறந்திருப்பாய். காதல் கொடியே, அமைதி கொள். இறைவன் உன்னை உன் கணவனிடம் சேர்ப்பான். அவன் திருந்த நான் வாழ்த்து அலைகளை தினமும் வானில் அனுப்பி வருகிறேன்.

டீச்சர் வேலை முடித்தவுடன் மாலையில் தினமும் அத்தை வீட்டில் இருந்து இளைப்பாறுவாய்!. ஒரு நாள் மாலை இளைப்பாறலில் என் காதலை..... உன் நினைவால் வாடும் என் நிலைமையை உன்னிடம் அத்தை சொன்னபோது, உன் கண்கள் கலங்கினவாம். காதல் பேசிய கண்களில் இருந்து கண்ணீர் வடிந்ததாம்.

"மாமா என்னிடம் காதலை சொல்லியிருக்கலாம்... என்னைத் திருமணம் செய்து கொள்ள இருக்கும் விருப்பத்தையாவது என்னிடம் சொல்லியிருக்கலாம். நான் அவசரப்பட்டு விட்டேனே! மாமாவை இழந்து விட்டேனே"

"மாமா என்மீது உயிரையே வைத்து வாழ்ந்து வருவதை பற்றித் தெரியாத பாவியாகி பாழுங்கிணற்றில் விழுந்துவிட்டேனே......" என்று புலம்பிய வார்த்தைகளைப் பின்னாளில் அறிந்தேன்.

சொல்லாத காதல் சொல்லிய நேரத்தில் சுகப்பட முடியாமல் சோர்ந்து போயிருப்பாய்.

இதயத்தின் ஒரு பக்கத்தில் சோகம். ஒரு பக்கத்தில் மகிழ்ச்சி. என் ஒருதலைக் காதல், காலம் கடந்து வர்ஷாவின் மனதில் சென்று புகுந்த குடைந்துவிட்டதே!

காதல்.... காலம் கடந்து.... தோல்வியில் முடிந்து.... உன் நினைவுகள்.... உன் குழந்தைத்தனம்..... கண்ணால் காட்டிய காதல் பார்வை..... இன்றும் என் மனதில் பசுமையாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றன வர்ஷா.

என் இதயம் என்ற சிறகில் உனை மூடி வளர்த்த கதை சொல்லவா? கனவில் நினையாத காலம் இடையே வந்து நம்மை பிரித்த கதை சொல்லவா? இந்த மண்ணும் கடல் வானமும் மறைந்து முடிந்தாலும் மறக்க முடியுமா வர்ஷா. நம் தெய்வீக உறவை பிரிக்க முடியுமா, இந்தச் சமயத்தில் ஒரு நாள் கனவில் வந்தாய்.

"மாமா! என்னை மன்னிச்சிடுங்க" காலம் கடந்து உங்கள் ஆசையைத் தெரிஞ்சிக்கிட்டேன். இல்லேன்னா... நாம வாழ்க்கையில் எவ்வளவு பெரிய திருப்பம் ஏற்பட்டிருக்கும்.

'ச்சீ' அழக்கூடாது. ஆசைப்பட்டது கிடைக்கலை. கிடைக்காததற்கு எதற்கு ஆசைப்படணும். மனதைப் பறிகொடுத்த என்னாலேயே உன்னை மனதிலிருந்து தூக்கி எறிய முடியவில்லை.

கனவா...... நினைவா.... நினைவின் கசிவா.....

உன் நினைவிலேயே என் காலமெல்லாம் கடந்துவிட்டாலும் ஓர் பிறவிலேயே முதுமையை நான் அடைந்து விட்டாலும் மறுபடியும் பிறந்து வந்து மாலை சூடுவேன் வர்ஷா.

நமது கலாச்சாரப்படி கொண்டவனின் கைப் பிடித்தவனிடம் நீ மீண்டும் சேரவேண்டும் என்று வேண்டாத நாட்களுமில்லை. நேரமுமில்லை.

பத்து மாதங்கள் கழித்து நீ மீண்டும் உன் கணவருடன் சேர்ந்து வாழ்வதை அறிந்து என் மனம் அமைதியடைந்தது. இந்த நாட்களில் என் கண்கள் மட்டுமல்ல வர்ஷா... இதயமும் போட்டிபோட்டுக் கொண்டு அழுதது.

கல்லூரி நாட்களில் கடைசியாகப் பார்த்த உன் முகம் நினைவிருக்கிறது. குழந்தையாய் ஓடிஆடி விளையாடிய முகம் நினைவிருக்கிறது.

அதன் பின்னர் உன் கல்லூரி முகம், திருமணமான முகம், மனைவியாய் இருந்த முகம், தாயின் முகம், எதுவுமே எனக்குத் தெரியாது வர்ஷா.

பழைய முகத்தை, பழைய வர்ஷாவைத்தான் இன்னும் காதலித்து வருகிறேன். இன்னொன்று தெரியுமா உனக்கு. எனக்குத் திருமணமானதிலிருந்து என் மனைவியும் என் வர்ஷாவை பார்க்க ஆசைப்படுகிறாள்.

நம் குழந்தைகள்.... மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்க ஆசைப்படுகின்றனர்.

அதைவிட ஆண் சம்மந்தியும், பெண் சம்மந்தியும் முப்பது வருட இடைவெளிக்குப் பின் சந்திக்கப் போகின்றோம்.

இந்தக் காட்சியைக் காண என் மனைவி தவம் இருந்து வருகிறாள் தெரியுமா?

அந்த நாளினைத் தழுவ ஆசையுடன் காத்துக் கொண்டிருக்கிறேன்.

"பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும் போது அழுதால் கொஞ்சம் நிம்மதி. பேச மறந்து சிலையாய் இருந்தால் அதுதான் தெய்வத்தின் சன்னதி."

அன்புடன்,

மாமா.

கடிதத்தைப் படித்த வர்ஷாவின் ஒரு கண்ணில் ஆச்சரியம். ஒரு கண்ணில் ஆனந்தம். மனசுக்குள் சந்தோஷ அலை - முகத்தில் பிரகாசித்தது. ஆயிரம் விஷயங்களைப் பேசி முடித்த உணர்வு.

அடுத்த முப்பது நிமிடத்தில், தன் மகனுடன் சென்னை செல்வதற்காக இரயில் டிக்கட் ரிசர்வேஷன் கவுண்டர் கீயூவில் காத்திருக்கிறாள் வர்ஷா.

# 6. தலைப் பிரசவம்

எழுத்தாளர் என்று சொல்றீங்க. நீங்க அனுப்பிய வேகத்தை விட சூப்பர் வேகத்தில் உங்க கதை திரும்புது, மகனின் கிண்டல் பேச்சு.

தபால்காரர் கொடுத்த கவரைப் பிரித்துப் பார்த்தேன். எழுதிய "பிள்ளைப் பாசம்" கதை திரும்பி வந்திருந்தது.

நான் எழுத்தை முழு மூச்சாக கொண்டவனல்ல. நேரம் கிடைக்கும் போதெல்லாம் எழுதுகிறேன்.

அரசு அதிகாரியாக இருக்கும் எனக்கு கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு அறிவுரையும், ஊக்கமும், ஆக்கமும் ஊட்டும் பணி. அவர்களிடம் திறமையாக வேலை வாங்கும் அதிகாரி என்று பெயர் எடுத்தவன்.

என் திறமை கண்டு அரசு அலுவலர் பயிற்சி கல்லுரிக்குச் சிறப்பு விரிவுரை ஆற்ற, வந்த அழைப்பைப் பயன்படுத்தி என் திறமைகளை வளர்த்து வந்தேன். தொண்டு நிறுவனங்கள், மன்றங்கள், கல்லூரிகள் போன்றவற்றிலும் சிறப்புரை ஆற்றி வந்தேன்.

பயிற்சி நிறுவனங்களில் ஆற்றும் சொற்பொழிவு களின் குறிப்புகளை வாசர்களுக்கு வழங்கி வந்தேன்.

அரசு வெளியிடும் மலர்களிலும், பத்திரிக்கையிலும் இக்குறிப்புகளே கட்டுரையாகப் பிரசவித்தன.

கட்டுரைக் குழந்தைகளைப் பார்த்த பதிப்பகத்தார்கள் எல்லாவற்றையும் தொகுத்து புத்தகமாக வெளியிட முன் வந்தனர்.

ஓரிரண்டு புத்தகங்களும் வந்தன. கட்டுரை இலக்கியத்தில் பரிணமித்த நான் சிறுகதை இலக்கியத்தில் முதன் முதல் நுழைந்தேன். அல்லது பிடித்துத் தள்ளப்பட்டேன்.

அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெற்ற பின்பு வாழும் முறை குறித்த சொற்பொழிவுகளை "ஓய்வுகால வாழ்க்கை" என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட நண்பர்கள் முடிவு செய்தனர்.

இப்புத்தகத்தில் சேர்ப்பதற்காக ஒரு கதை எழுதித் தருமாறும் கோரிக்கை வைத்தனர்.

சிந்தித்தேன், சிறுகதை எழுதுவது என்பது இலக்கியமல்லவா?

சிறுகதை என்பது தனித்துவம் பொருந்திய ஒரு துறை. இதை இலக்கியத் தரமுள்ளதாக மதித்து அதற்காகவே எழுத வேண்டும்.

இலக்கியத்தின் ஒரு பகுதி ஒரு வடிவம்தான் சிறுகதை. கதை கேட்க வேண்டும் கதை சொல்ல வேண்டும் என்ற விருப்பம் மானுட குலம் தோன்றிய நாளிலிருந்து இருந்து வருகிறது. இலக்கியம் தோன்றும் முன்பே கதை இருந்துள்ளது.

அனுபவங்களைச் சேகரித்து எழுதுவது, பார்த்து கேட்ட வாழ்க்கை அனுபவங்களை கற்பனையுடன்

எழுதுவது, வாழ்க்கை சம்பவங்களைச் கூர்ந்து நோக்கும் பார்வை - கற்பனை - எழுதும் உத்தி, இந்தக் காரணிகளைக் கொண்டு சிறுகதை எழுதவேண்டும் என்பதை உணர்ந்தவன்.

என்னுடைய முதல் கதையாக அமைய இருப்பதால் நல்ல கதையம்சம் வேண்டும், சமுதாயத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், ஒரே மூச்சில் படித்து முடிக்கக்கூடிய கதையாக அமைக்க வேண்டும், படிப்போர் மனதில் ஆழப்பதிந்து கிளுகிளுப்பை ஏற்படுத்த வேண்டும், தொடக்கத்திலிருந்து முடிவு வரை ஒரே சீராக செல்ல வேண்டும் என்று திட்டமிட்டேன்.

இன்றைய நிலையை மட்டும் கருத்தில் கொள்ளாமல் வருங்காலத்தையும், ஊடுருவி நோக்கி அமையும்படி கதையைப் படைக்கும் உத்தியை தேர்ந்தெடுத்தேன்.

சமுதாயத்திற்கு ஒரு நல்ல செய்தியை நாம் கொடுக்க வேண்டும். தெரிந்தோ தெரியாமலோ அந்தக் கதாபாத்திரங்கள் நம்மை இழுத்துக் கொண்டு போக வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதத் தொடங்கினேன்.

இந்த நோக்கத்தில் என் நண்பரின் வாழ்க்கையை கதையாக முதல் முதலில் எழதினேன். ஆசிரியத் தம்பதிகள் ஒரே பிள்ளையைப் பெற்று, கடைசி காலத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட அவரது நிலையைக் கதைக் கருவாக அமைத்தேன்.

இக்கதையில் ஒரு புதுக்கருத்து, ஒரு புதுப்பார்வை, புது அம்சம் என்ற நோக்கினில் முதியோர் படும்

துயரங்களை விளக்கி இலக்கிய உலகிற்குப் பயன்படும்படியாக அமைத்தேன். முதியோர் இல்லத்தில் இருந்தாலும் அந்த தந்தைக்கு மகன் பேரில் அன்பு குறைவதில்லை, இதுபோன்ற பெற்றோர்கள் இன்றும் அதிகமாகத் தான் உள்ளனர். முதியோர்படும் துன்பங்களை எழுதினேன். பிள்ளைப்பாசம் சிறுகதையை தொடங்கியதும் முழு மனநிறைவு பெற்றேன்.

இக்கதையில் சோம்பலுக்கு இடமில்லாமல் மிக நுணுக்கமாக ஒரு தவசியின் மன ஒருமைப்பாட்டுடன் மையப்புள்ளியை இலக்காக வைத்து ஒவ்வொரு விபரத்தையும் அம்பாக கதையின் மேல் செலுத்தி முழுமையடையச் செய்தேன்.

நல்லவராக வாழ்ந்து பலரது அன்பைப் பெற்ற கதாநாயகன் முதுமைக் காலத்தில் துன்பத்துக்கு உள்ளாகிறார். ஒரு சோக சித்தரமாக அமையுமாறு படைக்க முற்பட்டேன். கதைக் கருவை மனதில் உருவாக்கிக் கொண்டபின் அந்தக் கருவை நான் நிறைந்த அர்த்தத்துடனும், அமைப்புடனும் எழுத்தில் பதித்துச் சென்ற போது அதற்குரிய சொற்கள் தாமாகவேவந்து பொருந்தின. என் சிறுகதை நுட்பமான கலைப்பொருள். எனவே, கிளிஞ்சல் மீது சித்திரம் தீட்டுவது போன்று படைத்தேன். ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு வரியும் பொருத்தமாக பிணைந்து இறுக்கமாக கட்டுக் கோப்பாக அமையும்படி நயமும் தரமும் அமையும்படி அமைந்தது இக்கதை.

பல இரவுகள் பல நாட்கள், நேரம் கிடைகக்கும் போதெல்லாம் கதையை எழுதினேன. அடித்தேன் திருத்தினேன். கற்பனையைச் சம்பவ நிகழ்ச்சியோடு சேர்த்தேன். நாயகனின் உணர்ச்சிக் கொந்தளிப்புகளைத் தத்ரூபமாக படம் பிடித்து எழுதினேன்.

கதாநாயகன் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினையைச் சுருக்கமாக ஆனால் தீவிரக் கண்ணோட்டத்துடன் சித்தரித்தேன். அவர் வாழ்க்கை என்னும் பெருங்கடலில் வீசிய சோகப் புயலை நேரில் பார்க்கும்படி எழுதினேன்.

சில நாட்களின் நடு இரவு எழுந்து எழுதினேன். மனைவியின் கட்டுப்பாடுகளை உறக்கத்தை மறந்தேன். ஏழு பக்கக் கதையை உருவாக்க பல இரவுகளை, தூக்கத்தை தியாகம் செய்தேன். கதையை உருவாக்கி முடித்ததும் மனதில் தானாக எழும் உணர்ச்சியைப் பிரமானமென்று கொண்டேன்.

பிள்ளைப் பாசம் எழுதியபோதும், எழுதி முடிந்த போதும் இக்கதையின் நாயகன் படும் பிள்ளைப்பாச வேதனையைப் படித்து நானே பலமுறை கண்ணீர் வடித்தேன்.

ஓர் பௌர்ணமி இரவு பிள்ளைப்பாசக் கதையைப் பிரசவித்தேன். கதை எழுதி வடிவம் பெறுவதும் ஒரு பிரசவம் மாதிரிதான். கதை முடித்த பின்பு பிரசவ வேதனையை அனுபவித்தேன். ஆனால் பிறந்த குழந்தையைப் பார்க்கும் தாயின் துன்பம் மறைவது போல், கதை முழு வடிவம் பெற்ற பின்பு என் வலிகள் மறந்துவிட்டன.

பிள்ளைப் பாசக் கதையை "ஓய்வுக்கால வாழ்க்கை" புத்தகத்தில் சேர்ந்து வெளியிட அனுமதி தந்தேன். புத்தகம் வெளிவந்த பின்பு அக்கதையைப் படித்த சிலர், "பிள்ளைப் பாசம்" கதை கண்களை குளங்களாக மாற்றிவிட்டன, என்று எழுதிய கடிதங்கள் என் எழுத்துக்களுக்கு அங்கீகாரம் தந்ததாக உணர்ந்தேன்.

சாதாரணமாக சமூகத்தில் நாம் பார்த்துப் போய்விடக்கூடிய ஒரு நுண்ணிய சம்பவத்தைப் பற்றி கணப்பொழுதில் ஆழ்ந்ததோர் உணர்வு பளிச்சிட்டு வாசகர்கள் பார்வையைக் குளிப்பாட்டி வியப்பில் ஆழ்த்தியது பிள்ளைப் பாசக்கதை.

வாசகர்களுக்கு மனநிறைவு அளித்ததை உணர்ந்தேன். வாசகர்களிடம் ஒரு தாக்கத்தை விளைவை ஏற்படுத்தியதை உணர்ந்து ஆகாயத்தில் பறந்தேன்.

நெருங்கிய நண்பரின் வாழ்க்கையைப் பற்றி கதை எழுதினேன். ஆனால் கதையைப் பற்றி யாரிடமும் சொல்லவில்லை. கதையைப் படித்த என் சகோதரி ஒருவர் மட்டும், "இது உன் நண்பரின் கதை தானே" என்றார். "யாரிடமும் சொல்லிவிடாதீர்கள்" என்றேன். என்னுடைய முதல் கதையை எல்லோரும் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் இக்கதையை நண்பரின் குடும்பத்தினர் படித்து விடக்கூடாதே என்று கவலைப்பட்டேன். நண்பர் மட்டும் படித்துவிட்டு பத்து பிரதிகள் வாங்கி அவரது நண்பர்களுக்கு கொடுத்து மகிழ்ந்தார்.

இக்கதையைப் படித்து முடித்ததும் வாழ்வைப் பற்றிய பரந்ததோர் அறிவைப் பெற்றதான உணர்வை வாசகர்கள் பெற்றதை உணர்ந்தேன்.

இக்கதையை ஏன் வார இதழ்களில் வெளியிடக் கூடாதென நினைத்தேன்.

பல்வேறு இதழ்களுக்கும் அனுப்பினேன். பந்தை அடித்ததைப்போல் திரும்பி வந்தன.

"திரும்பி வந்த கதையை மறுபடியும் படிங்க. படிக்க, படிக்க உங்களுக்கு நீங்க செய்திருக்கிற தவறும் புரியும். மறுபடியும் கதையை அங்கங்க டச் செய்யுங்க, விடாமுயற்சி பலனை தராமல் போகாதுங்க" அன்பான ஆறுதலான வார்த்தை மனவை வாயிலிருந்து வந்தன.

என்னவள் என்பக்கம் பேச ஆரம்பித்துவிட்ட பின் என்னை கையில் பிடிக்க முடியாது. வாழ்க்கைத் துணைவியின் உற்சாகம் என்னை வானில் பறக்கும் அற்புதத்தை தந்தன.

மனைவியின் வார்த்தைகள் வேதவாக்கு போலிருந்தன.

பிள்ளைப் பாசத்தை அங்கங்கே டச் செய்து அனுப்பினேன்.

பல வாரப்பத்திரிக்கையின் சிறுகதைப் போட்டிக்கும் அனுப்பி வைத்தேன்.

திடீரென ஒருநாள் ஒரு இன்ப அதிர்ச்சி தபால்காரர் உருவத்தில் வந்தது.

நான் எழுதிய கதைக்கு ரூபாய் பத்தாயிரமும் முதற் பரிசும் கிடைத்திருப்பதாகக் கடிதத்தில் எழுதப் பட்டிருந்தது.

மனசு முழுக்க சந்தோஷத்தில் இருந்தது.

அச்சிடப்பட்ட என் கதை, பல வார இதழ்களில் வெளிவந்தன.

அச்சில் என் எழுத்தைக் கண்டதும் என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

என் மனம் பூரித்துக் கிடந்தது. மனசுக்குள்ளிருந்த சந்தோஷம் தாளம் போட்டு சிந்து பாடியது.

ஒன்பது இலட்சம் பிரதிகள் வெளியிடும் வார இதழில் என் கதை. இது மட்டுமல்ல பத்தாயிரம் பரிசு.

என் தலைப்பிரவசம் வலியுடன் பிறந்தாலும், சுகமாக வெற்றியாகவே அமைந்தது.

# 7. கடல்

சூரியன் சுடத்தெரியாத அதிகாலை நேரம்.

ஜப்பானின் போலே துறைமுகத்தில் கப்பலை நிறுத்தினேன்.

புயல் கடந்த கரையில் பளிச்சென்று ஆனது மனசு.

பூமி தன் உடம்பில் முக்கால் பாகத்தை கடலுக்குத்தானே தந்துள்ளது.

பூமியும் பெண்தானே! பூமித்தாய் தன் உடலில் முக்கால்வாசி ஈரம் கொண்டவள் தானே? கடலின் கருணையினால் கோரப்புயலில் இருந்து கப்பலை மீட்டேன்.

மாலுமியாக இருபது வருட கடல் அனுபமல்லவா?

சமார்த்தியமாக கப்பலை துறைமுகம் கொண்டு வந்தது குறித்து, "கொடும் புயலில் அகப்பட்ட கப்பலை கலங்காது செலுத்திய கடமை மிக்க மாலுமி என" சக பணியாளர்கள் பாராட்டு மனதை குளிர வைத்தது.

இரண்டு நாட்கள் கப்பல் நிற்கும். பெரிய பெரிய கண்டெய்னர்களை இறக்க தேவைப்படும் காலம்.

கிடைக்கும் சந்தர்ப்பங்களில் பணியாளர்கள் பலரும் ஜப்பானைக் காண உள்ளே சென்றார்கள்.

நான்தான் கடலின் உறவினன் ஆயிற்றே! எப்போதும் போல் கடலையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

கடலைப் பார்க்கும் பொழுதெல்லாம் மனசில் இருக்கும் துருக்களை எல்லாம் அது துலக்கி விடுகிறது.

என்னைச் சுற்றி ஈரமும் பசுமையும் எப்போதும் இருக்க வேண்டும் என்ற எனது ஆழ்மன ஆசைதான் கடலுடன் எனக்குத் தொடர்பை உண்டாக்கியது.

நான் கடலைப் பார்க்கும் போது தொட்டாச் சுருங்கியாய் இருக்கும் மனசு முள்ளம் பன்றியாய் சிலிர்த்துக் கொள்கிறது.

கடலுடன் வாசம் செய்யும்போது தென்றலின் கச்சேரியை இரசிப்பேன். மனசு குளிர பெய்யும் மழையை இரசிப்பேன். இயந்திர வாழ்க்கைக்கு ஆறுதல் மந்திரம் தரும். மன அழுத்தத்தை நீக்க வழிகள் சொல்லும். மனசு இலேசாகிப் பறக்கும்.

கடல் வாழ்க்கையில் என் பொருளாதாரம் மட்டுமா உயர்ந்தது! என் புகழும் அல்லவா உயர்ந்துள்ளது.

ஆம்! கடலைப் பார்த்து இரசித்து எழுதிய கவிதைகள், கதைகள், கட்டுரைகள், நாவல்கள், அடேங்கப்பா, எழுத்துக்களால் பணமும் அல்லவா வந்து கொண்டிருக்கிறது.

முதல் தடவையாக கடலில் டிரெய்லர்ஸ் சென்ற போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஏதோ இமாலய சாதனை புரிந்தவாறு ஸ்டியரிங் கியரை (கப்பலை இயக்கும் கருவி) ராஜ கம்பீரத்துடன் கையாண்டேன். பயிற்சியாளரே அசந்து போய்விட்டார்.

கடலை மையமாக வைத்து நான் படைப்புகளை படைக்கும்போது கடலின் அலைகளில் குடித்தனம் செய்திருக்கிறேன். ஒரு தேவதை போல் பறந்து சென்றுள்ளேன். என் கண்களில் திரை வழிய அழுது இருக்கிறேன். அது என் காகிதத்தை நினைத்திருக்கிறது. என் நரம்புகளைத் தெறிக்கும் அளவுக்கு முறுக்கேறி இருக்கிறது. எனக்குள் இருக்கும் கடல் அனுபவங்களை எல்லாம் எழுதும்போது தவம் செய்த உணர்வைப் பெறுவேன்.

படைப்பில் ஈடுபட்டிருக்கும்போது கடலின் படுக்கை எனக்குத் தேவைப்படுகிறது.

தொடக்கத்தில் நான் எழுதிய கதைகளும், கட்டுரைகளும், கவிதைகளும் கடலில் தெளித்த உப்பாய் காணாமல் போயின.

அக்னி ஆறுகளைக் கடந்து வந்த பின், கடலோடு உறவாடி படைத்த போது என் படைப்புகள் இன்று இலக்கியமாய் பரிணமிக்கின்றன.

வாழ்க்கையில், உறவுகள் தந்த விமர்சனங்களைக் கொந்தளிக்கும் கடலில் எறிந்த கூழாங்கல்லாக மாற்றினேன்.

கடலை என் மனசுக்குள் கோயில் கட்டி ஆராதனை செய்து வருகிறேன்.

ஒரு சமயம் என் பருவ கால காதலியை வர்ணித்த போது,

"கண்களில் நீலம் விளைவித்தாள் அதைக் கடலினில் கொண்டு கரைத்ததாலோ" என்று கடலின் நீலத்தை வர்ணித்த போது கடலே நாண முற்றாள்.

ஒரு வள்ளலின் மனது போல் கடல் விரிந்து கொடுக்கும் தன்மை கொண்டவள்.

கடலுடன் எப்போதும் பேசிக் கொண்டே இருப்பேன். அலைகள் என் மனக் கதவை உடைத்து உள்ளே வந்து போவதும் உண்டு.

இரவின் கடலில் நீயும் நானும் நட்சத்திரப் படகுகளில் பயணிப்பதாக என் மனைவிக்குக் கடிதம் எழுதி மகிழ்ந்ததுண்டு.

கப்பலின் ஸ்டியரிங் பிடித்த எனக்கு மனதில் சுழலும் எண்ணங்களை மீட்டுவது எளிய காரியமாயிற்று.

"பௌர்ணமியின் பார்வை உன் மீது விழும் போது நீ ஏன் ஆர்ப்பரிக்கிறாய்? அப்படியென்ன உனக்கு மகிழ்ச்சி" கடலிடம் ஒரு முறை கேட்டேன்.

மௌனம் தான் பதில்.

பிறந்த குழந்தையின் உடம்பில் ஈரப்பசை ஒட்டியிருப்பதைப் போல் அந்தக் கடல் தாயின் ஒவ்வொரு சத்தமும் ஆர்ப்பரிப்பும் என் உடலில் ஒட்டிக் கொண்டே இருக்கின்றன.

ஆற்றலில் நான் சமுத்திரமாக இருந்ததால் தான் என் மீது வீசப்பட்ட தீவட்டிகள் தீய்ந்து போயின.

கடல் என் வாழ்க்கையின் ஓட்டத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது?

சிந்தனையை ஓட விட்டேன்.

"கடல் பார்க்காதவங்க எல்லாம் எழுந்து நில்லுங்க"

பாதி பையன்கள் எழுந்து நின்றார்கள்.

"சரி மலை பார்க்காதவங்க எல்லாம் ஏந்திரிங்க"

பாதி பையன்கள் எழுந்து நின்றார்கள்.

டீச்சர்! தனபால் இரண்டு தடவையும் எழுந்து நிற்கிறான்.

"ஏண்டா! நீ இரண்டு தடவையும் நின்னே?"

"டீச்சர் நான் கடலையும் பார்த்ததில்லை, மலையையும் பார்த்ததில்லை"

"சரி, சரி உட்கார்" என்றார் டீச்சர்.

நான் ஏழாவது படித்துக் கொண்டிருந்தேன். அந்த நிகழ்ச்சி எனக்கு நன்றாக நினைவில் உள்ளது.

அந்த வகுப்பில் கடலையும், மலையையும் பார்த்த ஒருத்தன்தான் இருந்தான்.

நாங்கள் எல்லோரும் அவனை பொறாமையோடும், அதிசயத்தோடும் பார்த்தோம்.

"கடல் எப்படி இருக்கும்?"

பாக்குற இடமெல்லாம் தண்ணீரா இருக்கும். கடல் ஓரத்தில் நின்னேன்னா தண்ணி வந்து என்னோட விளையாண்டது.

"போதும் வாடா" அம்மா கூப்பிட்டாங்க. நான் விளையாடிட்டே இருந்தேன். அம்மா கையை பிடித்து இழுத்துக் கொண்டு போய், கட்டுமரத்திலே நிக்க வைச்சாங்க.

ஈரமான டிரவுசரையும், சட்டையையும் கழற்றி, உடம்பையெல்லாம் துடைத்துவிட்டு வேறு சட்டை போட்டாங்க அம்மா.

அவன் சொல்ல சொல்ல என் விழிகள் இமைக்காமல் அவன் வர்ணனையைக் கேட்டு மகிழ்ச்சியுற்றன. கடலை பார்த்து விட்ட இன்பம். கடலை பார்க்க வேண்டும் என்ற ஆசை தீயிட்டு எரிந்தது.

"கடல் பார்க்கணும்ங்கறவங்க எல்லாம் நாளைக்கு ஐந்து ரூபாய் கொண்டாங்க. வேளாங்கண்ணி எக்ஸ்கோர்ஷன் போகலாம்."

"மலைப் பார்க்கணும்கறவங்க எல்லாம் பத்து ரூபாய் கொண்டாங்க. திருச்சிக்கு எக்ஸ்கோர்ஷன் போகலாம்"

டீச்சரின் அறிவிப்பில் மனம் குதூகலித்தது.

"போன வாரம் தான் ஸ்கவுட் டிரஸ்ஸில் போட்டோ பிடிக்க அப்பா இரண்டு ரூபாய் கொடுத்தாங்க".

அரிசி வாங்க காசில்லாமல் இரண்டு வேளை பட்டினி.

இந்த நிலைமையில் எப்படி எக்ஸ்கர்சனுக்கு பணம் கேட்பது. தயங்கி தயங்கி அப்பாவிடம் என் ஆசையைச் சொன்னேன்.

என்ன அதிசயம். ஸ்கூலுக்குப் போக கிளம்பும்போது வெளியே போயிட்டு வந்த அப்பா ஐந்து ரூபாய் கொடுத்தாங்க.

"செட்டியார்கிட்ட கடன் வாங்கிட்டு வந்தேன்" அப்பா அம்மாகிட்ட சொன்னாங்க.

"ஆமாம் இப்ப கடல் பாக்காட்டி குடி முழுகிடும். அது ஒன்று தான் குறைச்சல்" அம்மா சத்தம் போட்டாங்க.

"புள்ளை ஆசைப்படுறான். மலையைப் பார்க்க பத்து ரூபாய் தர முடியாது. கடலைப் பார்க்கவாவது ஐந்து ரூபாயாவது புரட்டலாம்" என்று தான் கடன் வாங்கி வந்தேன்.

"போன மாசம் வாடகைப் பாக்கி, வீட்டுக்காரன் தினமும் வரான். மளிகைக் கடை பாக்கி. பால் பாக்கி. ஏதோ போங்க. நான் எதைச் சொல்லி நீங்க கேட்கறீங்க"

அம்மா, அப்பாவுடன் வாயாடிக் கொண்டிருந்த போது ஐந்து ரூபாய் கிடைத்த துள்ளலில் ஓடி வந்து டீச்சர் முன் நின்றேன்.

கடல் பார்க்கும் லிஸ்டில் என் பெயரை எழுதிக் கொண்டார்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஆறு மணிக் கெல்லாம் இரண்டு பஸ் வந்தது.

கடல் பார்க்கும் பஸ்ஸில் ஏறினேன்.

மலைப்பார்க்கப் போகும் பஸ்ஸைப்பார்த்து ஏக்க மூச்சு விட்டேன்.

கடலையும் மலையையும் ஒரே நேரத்தில் பார்க்க ஆசைதான்.

முதல்லே வேளாங்ககண்ணி கோயிலுக்கும் போனோம்.

கண்கள், எதிரே இருந்த அதிசியத்தைப் பார்த்து கண்கள் நம்ப மறுத்தன.

நீலக்கலரில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தண்ணி. மகிழ்ச்சி தாங்கமுடியலை.

நெஞ்சில் ஆர்வத்தையும், கண்களில் வியப்பையும் தேக்கி வைத்திருந்த நான் கடலை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். கடல் ஓலமிட்டுக் கொண்டிருந்தது.

டீச்சர் கடலின் ஓரத்திற்கு அழைத்துச் சென்றார்.

இந்தக் கடலில் தான் நான் மாலுமியாக பயணிக்கப் போகிறேன் என்பதும், கடலைப் பற்றி புதினங்களையும், கதைகளையும், கவிதைகளையும் படைத்து உயர்புகழ் பெறுவேன் என்பதும் கடலுக்கு தெரியும் போலிருக்கிறது. என்னை விட கடல் இன்பமுற்று ஓடி வந்து என்னை வரவேற்றது.

கடல் அலைகள் ஓடி வந்து என்னைத் தழுவின. அலைகள் என் கால்களை முத்தமிட்டன. குனிந்து இரு கைகளாலும் கடல் நீரை எடுத்து முகத்தில் தெளித்தேன். முகம் சிலிர்த்தது. ஆனந்தக் கண்ணீரின் உப்பும், கடல் நீரின் உப்பும் சங்கமமாயின. கடல் அலைகள் என்

கால்களுக்கு சிலம்பாயின. சிலம்பு கட்டிய கால்கள் நடனமாடின.

மற்ற பையன்களும் ஓடி வந்து என் இன்ப வெள்ளத்தில் பங்கேற்றனர். அவர்கள் கையைப் பிடிப்பதும், அலைகளின் கைகளைப் பிடிப்பதும் மாறி மாறி நடந்தன. அலைகளின் புரளில் இருந்த ஒழுங்கின்மையில் தெரிந்த ஒரு ஒழுங்கின் லயத்தில் ஒன்றிப் போனேன்.

பக்கத்திலிருந்த பாறைகளின் மீது அலைகள் மோதிச் சென்றன. பாறை பதில் சொல்லவில்லை. நான் மட்டும் பதில்சொல்லிக் கொண்டிருந்தேன். கடல் அலைகள் வெள்ளிப் பூக்களாக உயர்ந்து தாழ்ந்து கரையில் மோதுவதும் மறைவதும் ஒயாத அற்புதத்தை நிகழ்த்திக் கொண்டிருந்தது.

நிலத்தைக் கலப்பை உழுவதைப் போல உழுது கொண்டே கடலின் நடுவில் புதைந்து புதைந்து கப்பல்கள் சென்று கொண்டிருந்தன.

கடலே பார்க்காத நான் கடலுடன் எனது வாழ்க்கை அமையப் போகும் என்று வானமும் மழை பெய்தது. கடல் அலைகள் என் காதுகளை நிறைத்து என் நெஞ்சுக்குள் புகுந்து ஓங்காரமிட்டது.

காற்றுக்கும் மழைக்கும் குருஷேத்தரம் தான். இப்படியே கடலோடு பேசிக் கொண்டே இருந்து விடட்டுமா? கடலைப் பார்த்தவுடன் என்னுள் நிகழ்ந்த ரசாயாண மாற்றத்தைச் சொல்லத் தெரியவில்லை.

சூரியனைக் கண்டு தாமரையும் நிலவைக் கண்டு அல்லியும், மாலைக் கருக்கல்லில் மல்லிகையும், சுடர் மின்னல் கண்டு தாழையும் மலருவது போல் கடலைப் பார்த்தவுடன் என் மனம் மலர்ந்தது. உள்ளம் பேருஉவகை அடைந்தது.

என் சிரிப்பலைகள் மோதியதில் கடல் அலைகளே கொஞ்ச நேரம் ஆடி அசைந்து நின்றன. திருவிளையாடலில் சிவாஜி பாடும் போது கடல் அலை நிக்குமே அது மாதிரி.

ஒரு பெரிய அலை அவசரமாய் ஓடிவந்து என் உடல் மீது ஆசை தீர முட்டிக் கொண்டது. பிரணவ கீதமாக மனசை என் உள்ளத்தை நிரப்பி தாலாட்டியது.

டீச்சர் விசில் அடித்து, கையில் உள்ள பிரம்பைக் காட்டி எல்லோரும் திரும்பி வரும்படி அழைத்தார்.

விசில் சத்தம் கேட்ட கடல் அலைகளுக்கு என்னைப் பிரிய மனம் வரலை போலிருக்கு. வேகமாக வந்து என்னைத் தழுவி விடை கொடுத்தது.

மனமில்லாமல் கடலை விட்டுப் பிரிந்தேன். கடல் ஒரு அற்புதந்தான். பார்க்க பார்க்க சலிக்காத காட்சி.

முதன் முதலில் கடல் என்னைப் பார்த்து தழுவிய புன்னகையை, அது மோதியபோது இருந்த அலைகளின் குளிர் நிலையில் அப்படியே வாடி விடாமல், இன்றும் என் இதயம் என்ற குளிர்பதனப் பெட்டியில் பாதுகாப்பாக வைத்திருக்கிறேன்.

# 8. குறி கேட்ட பெரியம்மா

ஆபிசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன்.

வாசலில் கார் ஹாரன் சத்தமிட்டது. எட்டிப் பார்த்தேன்.

அம்பாசிடர் காரை விட்டு பெரியம்மா இறங்கினார்கள். கழுத்து நிறைய நகை. வைரம் மின்னும் காது. செல்வத்தின் செழிப்பைக் காட்டும் தோற்றம். அம்மாவின் அக்கா.

“வாங்க வாங்க” பெரியம்மாவை நானும் மனைவியும் வாசலில் இருந்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றோம்.

“திடீரென்று ஊரிலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறீர்களே ஏதாவது விசேஷமா?”

அதெல்லாம் ஒன்றும் இல்லை பாபு. இந்த ஊரில் குப்பம்மா என்பவர் குறி சொல்கிறாராம். எல்லாத்தையும் பிட்டு பிட்டு வைக்கிறார்களாம். அதான் பார்த்து குறி கேட்டு விட்டு வரலாம் என்று வந்தேன். பார்த்துட்டு அப்படியே ஊருக்குப் புறப்படுறேன்.

“என்ன பெரியம்மா வந்ததும் கிளம்புகிறீர்கள். இரண்டு நாள் இருந்து விட்டுப் போகலாமே”

இல்லை பாபு. பெரிய புள்ளை இரண்டு நாளைக்கு ஒரு தடவை அமெரிக்காவில் இருந்து போன்ல பேசுவான். சின்ன புள்ளை லண்டனிலிருந்து தினமும்

பேசுவான். அம்மாவிடம் பேசினால்தான் இந்த புள்ளைகளுக்குத் தூக்கம் வரும்."

மனைவி தந்த காப்பியை மட்டும் குடித்துவிட்டு ஊரிலிருந்து கொண்டு வந்திருந்த மாம்பழங்களையும், மிளாகாய் வற்றலையும் கொடுத்துவிட்டு கிளம்பினார்கள்.

அலுவலகம் முடிந்து மாலை வீடு திரும்பினேன்.

தொலைபேசி அடித்தது. பெரியம்மாதான் பேசினார்.

"பாபு, குறி கேட்க இன்று டோக்கன் கிடைக்கவில்லை. அடுத்த வெள்ளிக்கிழமைத் தான் வரணும். முதல் நாள் இரவே வந்துடுறேன். அதிகாலையில் போனால் தான் டோக்கன் கிடைக்குமாம். அதுவும் வெறும் வயிற்றில் குறி கேட்டால்தான் பலிக்குமாம்".

"சரி பெரியம்மா வாங்க"

மனைவியிடம் விஷயத்தை சொல்லிச் சிரித்தேன்.

"ஏன் சிரிக்கிறீங்க"

"இல்லை! பையன்கள் எல்லாம் பெரிய படிப்பு படித்து உலகத்தைச் சுற்றுகிறார்கள். இந்தப் பெரியம்மா குறி கேட்கிறாரே"

இதை நினைத்துத்தான் சிரித்தேன் என்றேன்.

"ஏங்க குறி சொல்வதில் உண்மை இருக்குமா?" குழந்தைதனமாய் கேட்டாள் மனைவி.

"மனிதர்களின் அறியாமையை முதலீடாக்கி தொழில் நடத்துபவர்கள் குறிசொல்பவர்கள்"

பேராசை கொண்டவர்கள், உழைக்க மனம் இல்லாதவர்கள். வாழ்க்கைப்பற்றி பயம் கொண்டவர்கள். தன்னம்பிக்கையற்றவர்கள், சோம்பேறிகள் இருக்கும் வரை குறி சொல்பவர்கள் இருக்கதான் செய்வார்கள்.

பகலில் ஒளிசேர்க்கை செய்யும் மரம் ஆக்சிஜனை வெளியிடுகிறது.

இரவில் மரம் கரிமிலவாயுவினை உமிழ்கிறது. வேப்பமரத்தடியில் படுக்கிறவன் ஆக்சிஜனும் இல்லாமல் படுகிற துன்பத்திற்கு 'முனி' என்ற பெயரிட்டுள்ளனர்.

இரவில் வேப்பமரத்தின் அடியில் படுத்திருக்கும் பலரை முனி அடித்து விட்டதாக குப்பம்மா கூறுவதை உலகம் இன்னும் நம்புகிறது.

அறிவு தன் முயற்சியைச் செய்யாத இடத்தில் மூடநம்பிக்கை முளை விடுகிறது. இந்த நாட்டில் மரணம் வந்து மரித்தவர்களை விட மூடநம்பிக்கையால் அறியாமையால் மரித்துப் போனவர்கள் அதிகம்.

நாட்டில் அம்மை நோய் வந்து கொத்து கொத்தாய் மனிதக்கூட்டம் இறந்த போது "தெய்வ கோபம்" என்றார்கள் குப்பம்மாக்கள். ஆத்தாளின் ஆவேசம் என்றார்கள் குறி சொன்னவர்கள்.

அப்போது அம்மை நோய் கிருமிகளை அறியமுடியவில்லை. இப்போது 1940-லேயே கிருமிகள் கண்டறிந்து வைத்தியமும் வந்துவிட்டது. ஆனால்

இன்னும் அம்மை நோய் ஆத்தாளைத் தரிசிக்கிறது. குப்பம்மாக்களிடம் குறி கேட்கிறது.

"என்னங்க குறி சொல்வதில் உண்மை இருக்கா என்றுதானே கேட்டேன்".

"நிச்சயமாக இல்லை. குறி கேட்க வருபவர்களிடம் கேள்விகளைக் கேட்டு அவர்களிடமிருந்து வரும் பதிலிருந்து தன்னம்பிக்கையூட்டும் செய்திகளைச் சொல்லும் தந்திரம் தான் குறி சொல்வது. சித்துவேலை செய்து மக்களை கவர்கிறார்கள் குறி சொல்பவர்கள். இதனால் அவர்களுக்குப் பிழைப்பு நடக்கிறது.

"சித்து விளையாட்டில் விபூதி, சிவலிங்கம் எல்லாம் காட்டுகிறார்களே எப்படி?"

அறிவில் குறைவுடையோர் சிந்தையை மயக்கும் செயல்கள்தான் சித்து.

ஒரு துளி விந்துவை பத்து மாதத்தில் அற்புதமான குழந்தையாக்கி தரும் பெரும் வினோத சித்து செய்யும் தாய்மார்களையும்.

ஒருநெல் மணியை நூறு நெல் மணியாக மாற்றி சித்து செய்கிற விவசாயியையும்.

ஊதினால் பறக்கும் பஞ்சை அற்புதமான ஆடையாக மாற்றிக் காட்டும் சிறப்பாக சித்து செய்யும் நெவாளியையும்.

மண்ணைக் கொண்டு மாளிகை அமைத்து மனிதர்களைச் சுகமாக வசிக்க அற்புதமான வீடாகக் கட்டித்தரும் கொத்தர்களையும் நாம் பாராட்டுவதில்லை.

இவர்கள் செய்யும் சித்துக்களை விட வேறொன்றும் உலகத்தில் இல்லை.

வாழ்க்கைக்கு உபயோகமற்ற, சமுதாயத்திற்கு எந்த விதத்திலும் நஷ்டம் செய்யும், எது எதையோ வரவழைத்துக் காட்டும் அந்தச் சித்து விளையாட்டுக் காரர்களிடம் வயிற்றுக்குத் தேவையான அரிசியை வரவழைத்து கொடுக்கச் சொன்னால் ஓடி விடுவார்கள்.

சித்து என்ற பெயரால் சிந்தையை மயக்கும் செயல்களில் அறிவுடையோர் சிக்கி மயங்கமாட்டார்கள்.

ஊருக்கு வெளியோ ஒதுக்குப்புறமான இடத்தில் வசிக்கிறார் குப்பம்மா.

பஸ் ஸ்டாண்டிலோ, ரயில்வே ஸ்டேஷனிலோ இறங்கிக் குறிக்கேட்கும் இடம் போக வேண்டுமென்றால், ஆட்டோக்காரர்கள் நேரிடையாக பயணிகளை அழைத்து வந்துவிடுவார்கள். அவ்வளவு பிரபலமானவர் குப்பம்மா.

வயிற்றுப் பொழப்புக்காக வெளியூரில் இருந்து வந்தவர்தான் குப்பம்மா. சிறு சிறு வேலை செய்து ஜீவனம் நடத்தியவர். தொடக்கத்தில் சிறு கொட்டகையில் குறி சொல்ல ஆரம்பித்தார். மக்கள் மயங்கவே தனது தொழிலை வேகமாக நடத்தினாள்.

இன்று மாடி வீட்டில் வாசம். பக்கத்தில் குறி சொல்லும் இடம். கோயில், நந்தவனம் என்று சுற்றியுள்ள நிலங்களை எல்லாம் சொந்தமாக்கி விட்டாள். வாசலில்

இரண்டு கார்கள். அம்மா அம்மா என்றழைக்கும் பணியாளர்கள், பக்தர்கள்.

மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் கந்து வட்டிக்காரர்கள். பேராசை பிடித்தவர்கள், சுயநல வாதிகள், சுரண்டும் வியாபாரிகள், அரசியல்வாதிகள், அறியாமையில் தங்கள் வறுமையும் கஷ்டமும் போய்விடும் என்று கருதும் கீழ்த்தர மக்கள், உழைக்காமல் குறுக்கு வழியே முன்னேற துடிப்பவர்கள் போன்றவர்களின் கூட்டம் அலைமோதும்.

அதுவும் செவ்வாய், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமியில் சிறப்பு பூஜையில் குறி கேட்க வரும் மக்களின் கூட்டம் நிரம்பி வழியும். இதனை நம்பி அருகில் பழக்கடை, பூக்கடை, டீக்கடை, சாப்பாடு ஓட்டல் என்று அந்த ஏரியாவே மிகப் பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

சொன்னபடியே பெரியம்மா முதல் நாள் இரவே வந்து விட்டார்கள். மறுநாள் அதிகாலை மனைவி தந்த காப்பியை கூட அருந்தாமல் பயபக்தியுடன் டோக்கன் வாங்கச் சென்றார்.

அலுவலகப் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தேன். டெலிபோன் அலறியது. ரீசிவரை எடுத்தேன்.

“பாபு நான்தான் பேசுறேன். குறி கேட்டுவிட்டேன். யாரோ எங்களுக்கு பில்லி சூனியம் வைத்து விட்டார்களாம். அதனை எடுக்க இன்று இரவு சிறப்பு

பூஜையில் கலந்து கொண்டு விட்டு நள்ளிரவானாலும் வீடு வந்து விடுகிறேன்."

"சரி பெரியம்மா, பத்திரம்மா வாங்க"

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு, அலுவலகத்தில் பெரியம்மா போனில் சொன்னச் செய்தியை மனைவியிடம் சொன்னேன்.

"அவுங்க தான் நல்ல வசதியா இருக்காங்க. அவுங்களுக்குப் போய் பில்லி சூன்யமா?

"பில்லி சூனியம் என்று ஒன்று உள்ளதா?" வெகுளித்தனமாய் கேட்டாள் மனைவி.

"பில்லி சூன்யமெல்லாம் இருக்கத்தான் செய்கின்றன"

"அது எப்படிங்க?"

மனதுக்கு வல்லமைகள் அதிகம். பொதுவாக மனதில் வல்லமைகளை நாம் நல்லதுக்குத்தான் பயன்படுத்துகிறோம். மனதில் வல்லமைகளை மற்றவர்களுக்குத் தீங்கு செய்வதற்காகச் சிலர் பயன்படுத்துகிறார்கள். அத்தகைய தீங்குகளை வீரியப்படுத்துவதற்காக சில கடினமான ஆபத்தான பயிற்சி முறைகளை வைத்திருக்கின்றனர். இதில் பெற்ற மன சக்தியை மற்றவர்கள் மீது ஏவுகிறார்கள்"

அதனைப் பெற்றவர்கள் தாங்க முடியாத கஷ்டங்களை துயரங்களை அடைகின்றனர்.

"ஏங்க இதைத் தவிர்க்க முடியாதா?"

நிச்சயமாக தடுக்கலாம். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்று நம் முன்னோர்கள் ஆணித்தரமாகச் சொல்லி வைத்துள்ளார்கள். நல்ல மன வலிமையும் நேர்மையான சிந்தனையுடையவர்களிடமும் பாவப்பதிவுகள் இல்லாதவர்களிடமும் இந்தத் தீங்குகள் அணுகாது.

"சூன்யத்தால் எப்படி கஷ்டப்படுகின்றனர்?"

"பாவப் பதிவுகள் இருக்கிறதென்றால் பாதிப்புகள் வரத்தான் செய்யும். கொஞ்சம் கொஞ்சமாகத் துன்பத்தை அனுபவித்து நீண்டகாலமாகத் தீர்க்கப்பட வேண்டிய பாவப்பதிவுகள் எல்லாம் திடீரென்று குறுகிய காலத்தில் அதிக அளவில் தாக்கும்போது பில்லி, சூன்யத்தால் பாதிக்கப்படுவர்கள்தான் சொல்லாத துயரத்திற்கு ஆளாகிறார்கள்.

சரி இத்தகைய பில்லி சூனியத்தால் மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள முடியாதா?

மகான்களில் மந்திரத்தை உச்சரித்து வலிமை பெற்ற மனம் கொண்டவர்களைத் தாக்காது. மனவளக்கலை மன்றங்களிலே சொல்லித்தரும் அருட்காப்பின் மூலம் இத்தகைய கெடுதல்களிலிருந்து தற்காத்துக் கொள்ளலாம்.

"பில்லி சூன்யம் இவற்றில் இருந்து தப்பிக்கலாமா?"

இத்தகைய கெடுதல்களை நமக்கு யார் செய்திருப்பார்கள் என்று தெரியும் பட்சத்தில் அவர்களை மனம் குளிர்ந்து வாழ்த்துவதன் மூலம் துன்பத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

அதுமட்டுமல்ல. தவங்களில் ஒன்பது மைய தவம், பிரணவதவம், துரியாதீத தவம் போன்ற தவங்களைச் செய்து கொண்டே வந்தோமேயானால் இத்தகைய பாதிப்புகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

"பில்லி, சூன்யம் செய்பவர்களைப் பாவப்பதிவு தாக்காதா?"

பந்தை சுவரில் எறிந்தால் திரும்பி நம்மீது வருவது போல், செயல் விளைவுத் தத்துவத்தின்படி இவ்விதமெல்லாம் தீங்கு செய்பவர்கள் தப்பிக்க முடியாது. அவர்களும் அவர்களது தொடர்ந்து வரும் சந்ததியினரும் அதிகமான துன்பங்களை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். இது வரலாறு காட்டும் பாடமாகும்.

சரி எப்போது இந்தச் சமுதாயம் திருந்தும்?

நூறு சாக்ரடீஸ், நூறு பெரியார்கள், நூறு வேதாத்திரி மகரிஷிகள் வந்தாலும் போதாது. மக்கள் உண்மையை உணர்ந்து வாழும் காலம் வரும்போது இவையெல்லாம் தானாக மறைந்துவிடும்.

இந்த உண்மைகளை எல்லாம் சொல்லி பெரியம்மாவை நல்வழிப்படுத்தக் கூடாதா?

ச்சீ! போடி. பெரியம்மா மட்டுமல்ல, உண்மைகளை உலகமே ஏற்றுக் கொள்ளாது. உள்ளதை உணர்தல், நல்லதை செய்தல், அல்லதை விடுதல் என்று சொல்லிப்பாரு. உலகம் உன்னைப் பார்த்து சிரிக்கும். போலிச் சாமியார்களும், மந்திரத்தால் விபூதி

வரவழைக்கும் சித்து வேலைகளை மட்டும்தான் தற்போதைய சமுதாயம் மதிக்கும்.

உரையாடிக் கொண்டே நேரம் போவது தெரியாமல் இருவரும் கண்ணயர்ந்து போனோம்.

காலிங் பெல் கத்தியது.

மணி அதிகாலை நான்கு. வாசலில் நின்றிருந்த பெரியம்மாவை உள்ளே அழைத்து வந்தேன்.

"என்னே நல்லபடியா பூஜை முடிந்ததா?" என்று கேட்டேன்.

எல்லாம் சரியாக நடந்தது பாபு. "எங்களுக்கு தீமை செய்தவர்களுக்கே சூன்யத்தைக் குப்பம்மா திருப்பி விட்டாங்க" என்றார் பெருமிதத்துடன்.

பெரியம்மாவின் அறியாமையையும், குப்பம்மாவின் பணம் பிடுங்கும் வித்தையையும் எனக்குள் எண்ணி அமைதியாக இருந்தேன்.

அமைதியைக் கலைத்தார் பெரியம்மா.

பாபு. எங்கள் குடும்பத்திற்கு இருந்த கஷ்டங்களையெல்லாம் ஆத்தா போக்கிட்டாங்க. இதற்குப் பிராயச்சித்தமாக ஒரு பசுவை வாங்கி கோசாலையில் கட்டச் சொல்லியிருக்கிறது சாமி"

அப்படியா!

ஆமாம் தம்பி. பத்தாயிரத்துக்குள் ஒரு பசுவை வாங்கி செலுத்திடுனும். உதவி பண்ணு பாபு.

சரி முதல்ல நீங்க கொஞ்சம் படுத்து ரெஸ்ட் எடுத்துக்குங்க. காலையில் நான் ஏற்பாடு செய்கிறேன்.

பொழுது விடிந்ததும் அலுவலகத்துக்கு லீவு போட்டேன். பசு வாங்க புரோக்கர்களை நோக்கிப் படையெடுத்தேன்.

பெரியம்மாவின் அவசரத்தை உணர்ந்த தரகர்கள் ஏழாயிரம் பெறுமான மாட்டை பத்தாயிரத்துக்கு விற்றார்கள்.

பசுவை ஓட்டிக் கொண்டு பெரியம்மாவுடன் நானும் குறி சொல்லும் குப்பம்மா கோயிலுக்குச் சென்றேன்.

கோதானம் செய்ய விசேஷ பூஜைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

பசுமாடு பத்தாயிரம். பசுதானம் செய்ய பூஜைக்கு இரண்டாயிரம்.

பசுவுக்கு மாலை மரியாதை எல்லாம் செய்து மிகவும் பயபக்தியுடன் கோசாலையில் ஒப்படைத்தார் பெரியம்மா.

இது மட்டுமல்ல ஆண்டுதோறும் கோதானம் செய்வதாக குப்பம்மாவிடம் உறுதியளித்தார்.

பெரியம்மாவின் செயல் எனக்கு எரிச்சலை ஏற்படுத்தினாலும் அவரைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

பெரியம்மா போன்று வாழும் சமுதாயத்தில் குப்பம்மா போன்ற கெட்டிக்காரப் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இதுதான் உலகம்.

# 9. அவசர புத்தி

நெஞ்சில் ரணமாக வடுவாக நிலைத்துவிட்ட அந்த மாறாக் கசப்பு கசியும் நிகழ்ச்சி சரஸ்வதியின் நினைவில் நிழலாடியது.

அழைப்பு மணி ஜலதரங்கமாய் ஒலித்தது.

தூக்கம் கலைந்த எரிச்சலில் புரண்டு புரண்டு படுத்த சரஸ்வதிக்கு அரைத்தூக்கம். மீண்டும் அழைப்பு மணி ஒலித்தது.

மணி ஐந்து அடித்தது.

மீண்டும் அழைப்பு மணி அலறல்.

"ராகினி.. ராகினி.. எழுந்து போய் பால் வாங்கு" அம்மா தூக்கத்தில் கத்தினாள்.

பால்காரன் மணி சத்தம். எரிச்சலடைந்த சரஸ்வதி அரைத்தூக்கத்தில் எழுந்தாள். பக்கத்தில் காலியாக இருந்த ராகினி படுக்கையைப் பார்த்தாள்.

வாசற்கதவு திறந்து இருந்தது.

பால்காரன் பால் ஊற்ற வாசலில் நிற்கிறான்.

கண்ணைக் கசக்கிக் கொண்டு பாலினை வாங்கினாள். "ஏம்மா கதவு திறந்தே கிடக்கு, பெரிய பாப்பா எங்கே? பால்காரன் கேட்டான்.

"எங்கு போயிட்டாள் சனியன், காலையிலே"

வாசலில் வந்து பார்த்தாள் காணவில்லை.

மகளின் செருப்பும் காணவில்லை.

சரஸ்வதி அம்மாளின் இதயம் "படக் படக்" என்று அடித்தது. திடீரென்று மண்டைக்குள் ஒரு பளீர். நெஞ்சை ஊடுருவிப் பாய்ந்து கிழிப்பது போன்ற பிரம்மை.

கணவனை எழுப்பினாள். நெஞ்சில் ஆழத்திலிருந்து பந்துபோல் தொண்டையை அடைப்பது போலிருந்தது.

"என்னங்க, என்னங்க ராகினியைக் காணுங்க" அலறியடித்து எழுந்த தண்டபாணி வீடு முழுவதும் தேடினார். ஊரெங்கும் தேடினார்.

இந்த வருடம் மகளுக்குத் திருமணம் செய்ய தீர்மானித்து இருந்தனர். மகளின் திருமணம் குறித்து பெற்றோர்கள் மனதுக்குள்ளே மெல்லிய கண்ணாடிச் சிற்பங்கள் நிறைந்திருந்த ஆயிரமாயிரம் கனவுகளும் சிலீரென்று நொறுங்கிப் போயின. இமயமலையே இடிந்து விழுந்தது போல் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்துக் கதறி அழுது கொண்டிருந்தனர். மனதின் சோகம் தீயொளி ஜ்வாலை வீசிக் கிளர்ந்தது. பெற்றோர்கள் தலையில் உள்ளே மின்னல் கம்பிகள் கூர் வாளாய் இறங்கின.

தெருவே கூடிவிட்டது. ஊர் பிரமுகர்கள், அலுவலக நண்பர்கள் ஓடி வந்தனர். நண்பர்கள் உறவினர்கள் வீடுகளுக்குப் போன் செய்தனர். ஒரு இடத்திலும் துப்பு கிடைக்கவில்லை.

தண்டபாணி தாசில்தாராகப் பணிபுரிகிறார். மனைவி சரஸ்வதி உள்ளூரிலே டீச்சர். வசதியான குடும்பம். இரண்டு பெண்கள். பெரியவள் ராகினி, பி.எஸ்.சி. முடித்து வீட்டில் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் சமையல் செய்து கொண்டிருந்தாள். இரண்டாவது பெண் வெளியூர் கல்லூரியில் ஹாஸ்டலிலேயே தங்கிப் படிக்கிறாள்.

பதினெட்டு வயது பருவ மங்கை ராகினி. மாங்கொழுந்து வண்ணத்தில் இளமை மெருகேற்றிய திண்ணென்ற உடல்கட்டு. கடைசல் பிடித்தாற் போன்ற உடல் அமைப்பு.

பார்ப்பவர்களைச் சுண்டியிழுக்கும் கண்கள். அம்மாவும், அப்பாவும் வெளியே சென்று இரவு வருவதால் பக்கத்து வீட்டில், வேலையற்று இருந்த நெல்சனிடம் ஏற்பட்ட நெருக்கம்.

ஊர் முழுக்கத் தேடினார்கள். பக்கத்து ஊர்களுக்கும் ஆள் அனுப்பினர்.

சோகத்துடன் விழித்தெழுந்த ஆதவனும், தனது கடமையை முடித்து மறையத் தொடங்கினான்.

இரவு வரை ஒரு செய்தியும் தெரியவில்லை. தண்டபாணியும், சரஸ்வதியும் பல்கூட துலக்கவில்லை.

"இப்படி பண்ணிட்டாளே சண்டாளி.... இன்னொரு பெண்ணை எப்படி கரையேத்துவேன்... கூடப்பிறந்த வங்க வந்தா என்ன பதில் சொல்வேன்...."

அக்கம் பக்கத்தினர் வற்புறுத்தியும் பேயறைந்தது போல் சாப்பிடாமல் உட்கார்ந்திருந்தனர்.

சரஸ்வதி அம்மாளின் ஒப்பாரி அவ்வப்போது தெருவையே அலற வைத்தது. படித்திருந்து, பதவியில் இருந்தாலும், பெத்த வயிறல்லவா? பற்றி எரிந்து கொண்டிருந்தது. இருதயத்தில் பொங்கி பீறிட்ட துக்கம், மூக்கில் மோதியது. கண்கள் கதைத்தன.

அவள் இதய சமுத்திரத்தில் ஒரு குறைந்தழுத்த காற்று சூழ்ந்த தாழ்வு மண்டலம் உருவாகி பொறுக்க முடியாத கோரப்புயலாக மாறி வீசிக் கொண்டிருந்தது.

உறவினர்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். இரண்டு நாட்களாகியும் ஒரு விபரமும் தெரியவில்லை. மூன்றாவது நாள் ஒரு கடிதம் வந்தது.

"அப்பா, அம்மா, தங்கைக்கு... என்னைத் தேடாதீர்கள். நான் நெல்சனுடன் சென்று விட்டேன். பதிவுத் திருமணம் செய்துகொண்டேன்.

மன்னிக்கவும்,

-ராகினி.

"அடிப்பாவி! குடும்பத்தைக் கெடுத்திட்டியடி. மானம், மரியாதை குல கௌரவத்தையெல்லாம் தொலைச்சுட்டியேடி. அய்யோ, என் வயிறு எரியுதே, நான் என்ன செய்வேன்...." புலம்பினாள் சரஸ்வதி அம்மாள். குமுறி வெடிக்கின்ற எரிமலையின் தீக்குழம்பு.

சரஸ்வதிக்குள் பாம்பு ஊர்ந்தது. அடிவயிற்றில் ஏதோ ஒரு ராட்ரஸ சக்கரம் பிசைவது போன்று கொடிய உணர்வு.

பெட்ரோல் கிணற்றில் வெடிகுண்டு விழுந்த மாதிரி அவள் இதயம் பற்றி எரிந்தது. மயக்கமுற்ற சரஸ்வதியைக் கைத்தாங்கலாக மடியில் படுக்க வைத்துக் கொண்டார் தண்டபாணி. இருதயம் இருந்த இடம் வெறுமையாகி விட்டது போன்ற உணர்ச்சி.

அவள் அழுவதைப் பார்த்தால், பூமி தன் உயரத்தில் ஓர் அங்குலம் இறங்கி விடும் போலிருந்தது.

ஒரு மாதம் வீட்டிலே அடைபட்டுக் கிடந்தார் சரஸ்வதி அம்மாள். சக டீச்சர்கள் ஆறுதல்களினால் மனதைத் தேற்றிக் கொண்டாள். சக டீச்சர் ஒருவரின் அறிவுரை இதமாக இருந்தது.

"சரஸ்வதி, டீன் ஏஜ் குழந்தைகளை நாம தான் பத்திரமாக வளர்க்கணும்"

"டீன் ஏஜா?"

ஆமாண்டி, குழந்தை பிறந்ததும் மூளையின் அளவு முந்நூறு கிராமில் இருக்குது. உணவில் உள்ள சத்து எல்லாம் பன்னிரெண்டு வயது வரை மூளை வளர்ச்சிக்குச் செல்லும்.

தேவையான அளவு மூளை வளர்ந்த பிறகு, சக்தியானது விந்து அல்லது நாதமாகி பால் சுரப்பியான மூலாதரத்தில் வந்து தங்குகிறது.

டீச்சர் பானுமதி சொல்வதையே, சரஸ்வதி அம்மாள் கவனமுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இது தான் பருவ வயது. ஆண் பிள்ளைகளுக்கு அரும்பு மிசை வளர்வது, குரல் மாறுவது. பெண் குழந்தைகளுக்கு மாத விலக்கு வருவது.

இந்த டீன் ஏஜ் வயதில் குழந்தைகளை எப்படி வேண்டுமானாலும் உருவாக்கலாம். மனித வளர்ச்சியில் இது ஒரு முக்கியமான காலகட்டம்.

இந்த வயதில் பருவ வயதினர் நிதானிக்க வேண்டிய இடம் இதுதான். ஆனால் நிதானிக்கவே முடியாத நேரமும் இதுதான்.

உணர்ச்சியே பிரதானமாக அங்கம் வகிக்கும். இது கற்பூர பருவம்.

பக்குவமற்ற இரத்த அணுக்களின் பரிணாம வளர்ச்சி உற்சாகத்தையே மூலதனமாக்கி விடும்.

ஆசைத் தீ உடனுக்குடன் பற்றிக்கொள்கிற பருவம்.

தங்கள் குழந்தைகளைப் பக்குவமாய் பாதுகாக்க வேண்டிய பருவம். பருவ வயதில் கண்டிப்பும், கட்டுப்பாடும் அளவுக்கு மேல் இருந்தால் பருவவயது கொடிகள் வேறு திசை நோக்கிச் செல்ல வாய்ப்புண்டு.

இந்த வயதில் தாய் மகளுக்கு, சகோதரியாக, தோழியாக ஆலோசகராக இருக்க வேண்டும்.

“அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இதெல்லாம் நம்ப சொத்து. பொண்ணு நடந்தா மண்ணு அதிரக் கூடாது.

கண்ணு பார்வை கால் கட்டை விரல் மேலே தான் இருக்கணும்" என்று சொல்லி சொல்லி பெண்களை வளர்க்கணும்.

பொம்பளைக்களுக்குச் சுதந்திரம். சதாகாலமும் அக்கம் பக்கத்தில் போய் பேசிக்கிட்டு இஷ்டப்படி சுத்திகிட்டு இருக்கணும்னு நினைக்கிறது தப்புன்னு சொல்லணும்.

வயது வந்த மகள் கல்லூரிக்கோ, வெளியிலேயோ சென்று வந்தபின்பு அன்று முழுவதும் நடந்த நிகழ்ச்சிகளை தோழியைப் போல் கேட்க வேண்டும். தகுந்த ஆலோசனையை, அறிவுரையை, தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் பக்குவமாய் விதைக்கணும். பல பெற்றோர்கள் இதனைச் செய்ய தவறுகின்றனர்.

தான் செய்த தவறுகளை உணர்ந்தார் சரஸ்வதி அம்மாள். எதற்கெடுத்தாலும் தேள் போன்று கொட்டும் தாயின் வார்த்தைகள்.

உலோபியின் மொத்த உருவமான தந்தையின் போக்கு. சூழ்நிலையும் அன்பைத் தேடி ஓடியதில் வியப்பில்லை. ராகினி அவசரபுத்திக்கு இங்கு அவர்களது பெற்றோர்களும் முதற் காரணமாக அமைந்து விட்டனர் என்பதை சக டீச்சர்கள் அறிந்து வைத்திருந்தனர்.

தாயும், தந்தையும் அலுவலகம் சென்ற பின்பு நாள்முழுவதும் ராகினி தனியாக இருந்தாள். பருவ தாகங்கள், இயற்கையின் உடல் பசிகள், அவளைத் தடம்

மாறச்செய்தன. தாயின் சிடுசிடு பேச்சு. தந்தையின் கருமித்தனம். தன்னிடம் மனம் விட்டுப் பேசாத பெற்றோர்கள். நாள் முழுவதும் தொலைக்காட்சியில் பால் வேட்கையைத் தூண்டும் காட்சிகள். அன்பைத் தேடி மனம் சென்றது. பசியைத் தேடி ஹார்மோன்கள் ஓடின. சுற்றுச்சூழலும் அவளை தடம் மாற்றின.

தன்னைவிட படிப்பிலோ, அழகிலோ, குணத்திலோ ஒத்துவராத பக்கத்துவிட்டு நெல்சனிடம் நான் முழுவதும் அரட்டை. அவனுடைய முத்தங்கள் அவளுக்குப் போதை ஏற்றியது. அவனுடைய அணைப்பில் சொர்க்கத்தை கண்டாள். அவனின் அணைப்பினில் பின்னாளில் பல துயரங்களையும், சுமைகளையும் பெறப்போவது அவளுக்குத் தெரியவில்லை.

இந்தக் காலத்தில் புகைவண்டியிலும், பேருந்திலும் டீன் ஏஜ் பருவத்தினர் செய்யும் செயல்கள் எல்லாம் இதைப் போன்றது தான்.

தங்களது மகள் பக்கத்து வீட்டு தறுதலையுடன் உறவாடியது தெரிந்ததும் கொதித்து போனார்கள் பெற்றோர்கள். மகளை அடித்தனர். வீட்டினைப் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு அலுவலகம் சென்றனர் தம்பதிகள். காமத்துக்கும் காதலுக்கும் கட்டுப்பாடு விதிக்க முடியுமா?

வீட்டை விட்டு ஓடிப்போன காதல் ஜோடிகளுக்கு நண்பர்கள் பதிவுத் திருமணம் செய்து வைத்தனர்.

பக்கத்து ஊரிலேயே வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கினார்கள். காதல் பறவைகளாக வானில் இலட்சியமின்றி பறந்தனர். இளம் தம்பதிகள் உல்லாச வாழ்க்கை நடத்தினர். தினம் தினம் சொர்க்கத்திற்குச் சென்றனர்.

ராகினி அழகில் மயங்கி மேலோட்டமாகவே அவளை விரும்பினான் நெல்சன். அவளை அடிமனதில் விரும்பவில்லை. அவளது அழகையும், சொத்தையும் விரும்பினான். அவளை விரும்பவில்லை.

காதல் தம்பதிகளுக்கு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்தவுடன் பெற்றோருடன் ஒட்டிக்கொண்டு, சொத்தில் பங்கு கேட்டு உறவாட நினைத்த ராகினியும் ஏமாற்றம் அடைந்தாள்.

காற்றில் கரையும் கற்பூரத்தைவிட அவளது கனவுகள் விரைவாகவே கரைந்து போயின. காதல் மனைவியின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யமுடியாத நெல்சன் அவளை வெறுத்தான். விதவிதமான உடைகள், உணவுகள், ஆடம்பர வாழ்க்கை நடத்திய ராகினியின் ஆசை அறுபது நாட்களை தாண்டி ஒரு வருடத்துக்குள் கசந்தது.

பெண் மலர் தேடும் வண்டாக வேறொரு பெண்ணைத் தேடிப் போய்விட்டான். அவனது குணமும், சூழலும் அப்படி. அவனது பரம்பரையும் அப்படி.

நம்பிக்கையோடு வீட்டை விட்டு ஓடிய ராகினிக்கு ஏமாற்றம். வீட்டுக்குத் திரும்பி போக முடியாத நிலை.

ஊரையும் உறவையும் உதறி தள்ளிவிட்டு தான் தேர்ந்தெடுத்தவனே தனக்கு கொள்ளியானதை ஆறுதலுக்காக கூட யாரிடமும் சொல்லி அழ முடியவில்லை. விசும்பிக் குமுறவும் தனிமை இல்லை. தன்மானமும் தடையிட்டது. தனக்கும், சிசுவுக்கும் உணவு வேண்டும். வீட்டுக்கு வாடகை கொடுக்க வேண்டும்.

சின்ன வயதில் அப்பா, அம்மா கற்றுக்கொடுத்த பரத நாட்டியம் கைகொடுத்தது. ஓட்டலில் காபரே டான்சரானார்.

நாள்தோறும் ஆடி மரத்துப்போன உடல். அவள் உணர்ச்சியற்ற ஒரு மரம் போல் ஆனாள் - காலம் உருண்டு ஓடியது. ராகினி உடல் உருக்குலைந்தது.

ராகினியின் மனோநிலை மேலும் மேலும் பாதிக்கப்பட்டது. ஒவ்வொன்றாக பழைய நினைவுகள் மனதில் தோன்றி அவளைப் பைத்தியக் காரியாக்கியது. ஊரையும், உறவையும் உதறிவிட்டு, பெற்றோரை மனம் வாடச் செய்த அவசர புத்தியினால் மதிகெட்டு, உடல் கெட்டு புத்தி பேதலித்துப்போன அவளது வாழ்க்கை அவளைப் படாத பாடுபடுத்தியது. சித்திரைவதை செய்தது.

பெற்றோர்கள் சொல் கேளாமல் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, அவசர புத்தியினால் தவறான முறையில் சென்ற ராகினி மகளீர் காப்பகத்தில் சேர்ந்து வாழ்ந்து வருகிறாள்.

மூத்தவள் ஓடிப்போனதால், இளைய மகளுக்கு வரன் கிடைப்பதில் பெற்றோர்கள் அடைந்த துன்பம் அளவிட முடியாது. கடைசியாக பல வருடங்களுக்கு பிறகு இரண்டாவது பெண்ணுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

தன் மூத்த மகளால் தனக்கும் தன் வம்சத்திற்கும், ஏற்பட்ட அவமானங்களுக்கு சரஸ்வதி அம்மாள் தம்பதியினர் பிராயச்சித்தம் செய்தனர்.

தங்களின் அசையும், அசையாத சொத்துக்களில் பாதியை இளைய மகளுக்கும், மீதி பாதியை மகளிர் காப்பகம் ஒன்றிற்கும் எழுதி வைத்தனர்.

தாய் தந்தை சொல்படி ராகினி நடந்திருந்தால் பல இலட்சங்களுக்கு அதிபதியாகி ஒரு ராணியைப் போல் வாழ்ந்திருப்பாள்.

தன் கடமையும், பொறுப்பும், பெத்தவங்க அருமையையும் புரியாம, தெரியாம அவசர புத்தியினால் முடிவெடுத்து தன் வாழ்க்கையை அனாதையாக முடிச்சிக்கிட்டா ராகினி.

# 10. தவம்

எனக்கு வயசு நாற்பது தான். ஆனால் நூறு வயது பக்குவமும், அனுபவமும் பெற்ற உணர்வு. இத்தனைக்கும் வெளியே எங்கும் சென்று அனுபவத்தைச் சேகரிக்கலை.

என் அப்பாவின் பெயரில் தொடங்கிய கிளினிக்கில் ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் முந்நூறு பேருக்கு மேல் சிகிச்சை அளிக்கிறேன். சுற்றுப்புற கிராம மக்கள் அனைவரும் அரசு மருத்துவமனை போல் என்னுடைய கிளினிக்குத் தான் வருகின்றனர்.

காலை ஆறு மணிக்கு வநதால் இரவு ஒன்பது மணி வரை சிகிச்சை. கிளினிக் தான் எனது முதல் குடும்பம். நோயாளிகள் தான் எனது உறவினர்கள். இத்தனைக்கும் இதுவரை எந்த நோயாளிடமும் நான் கை நீட்டி காசு வாங்கியதில்லை. எதிரில் இருக்கும் உண்டியில் நோயாளியே முடிந்தால் வசதிக்கேற்ப போடும் காசுகள்.

நாள்தோறும் இரவு பத்து மணிக்குதான் மனைவி உண்டியலை திறந்து கணக்குப் பார்ப்பாள். வீட்டு நிர்வாகம், கிளினிக் நிர்வாகம், பொதுச்சேவை எல்லாம் அவளுடையது. சிகிச்சை அளிப்பது மட்டும்தான் என் கடமை.

எனக்கு மாளிகை போல ஒரு வீடு. பக்கத்தில் பத்து கிரவுண்டில் இரண்டு மாடிக் கட்டிடத்துடன் கூடிய பெரிய மருத்துவமனை. எல்லாம் என் நோயாளிகள் கொடுத்த காசுகள். அது மட்டுமா?

சுற்றுப்புற கிராம மக்கள அனைவரும் என்னைக் கடவுளாக நாள்தோறும் கை கூப்பி தங்கள் நன்றியைக் காட்டுகின்றனர். என் கடமையைச் செய்வதற்கு மக்கள் காட்டும் அன்புதான் எனக்கு உழைக்கும் சக்தியைச் தருகின்றது. "நான் நோயுள்ள போது எனக்கு சிகிச்சை தந்தீர்கள்; நீங்கள் ஆசிர்வதிக்கப் படுகிறீர்கள்" என்ற பைபிளின் வாசகம் மனதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. "ஏழைகளுக்கு செய்யும் தொண்டு தான் இறைவனுக்குச் செய்யும் தொண்டு" திருமந்திர வாசகம். அடிக்கடி அப்பா சொன்ன வார்த்தைகள் நெஞ்சில் ஆழமாய் பதிந்து உள்ளன.

இந்த மாதிரி நினைப்பெல்லாம் எனக்கு வர்ரப்ப எனக்கென்னமோ நாற்பது வயது டாக்டராக யோசனைப் பண்றாப்போல இருக்காது. ஏதோ ஒரு வயதான துறவி ஆராய்ச்சி பண்றாப்பலே படும். இதெல்லாம் அப்பா விதைச்ச விதைகள்.

அப்பா மனசுலே வாழறார். அப்பா மட்டும் இப்ப உயிரோடு இருந்தா நான் இப்படி கடமையை மட்டும் செஞ்சுகிட்டு இருக்கிறதைப் பார்த்து என்ன சொல்லுவாங்க?

அப்பா செத்துப் போயிட்டப் பின்னாலும் நான் அவங்களை அடிக்கடி நினைக்கிறேன். அவங்க ஆவி ரூபத்திலே இருந்து என்னை கவனிச்சுக்கிறாங்க. இவுங்க எனக்கு அப்பா மட்டுமில்லே, நெருங்கிய நண்பர். எனக்கு அப்பான்னா உயிரு.

அப்பா என்னை உக்கார வைச்சு உபதேசம் செய்யமாட்டார். புத்திமதி சொன்னதில்லை. அவுங்க வாழ்க்கையிலே சந்திச்ச கசப்பையும் இனிப்பையும் எடுத்துச் சொல்லுவாங்க. அதிலேயிருந்தே நல்லது கெட்டதை நான் புரிஞ்சுக்கணும்னு நெனச்சாங்களோ என்னவோ? ஒரு விதத்திலே சொல்லப்போனா அப்பாவோட வாழ்க்கை தோல்விமயமானது. கசப்பானது; துன்பங்கள் அதிகமுள்ளது;

அந்திமக் காலத்தில் எதையோ என்கிட்டே சொல்லணும்னு ஆசைப்பட்டாங்க போலிருக்கிறது. அவுங்க என்னை முறைச்சு வெறிச்சு பார்க்கிற பார்வையிலே தெரியும். இந்தப் பார்வை என்னையே சுத்தி சுத்தி வட்டம் போடும். என்னோட வெகுளித்தனத்தையும் குழந்தை தனத்தையும் சேட்டைகளையும் தாறுமாறா பண்ற பழக்கத்தையும் பார்த்து கவலையா இருந்திருக்குமோ என்னவோ? ஒரு நாள் திடீர்ன்னு சொன்னாங்க.

"மனோகர், என் அனுபவங்களை எல்லாம் உனது அனுபவங்களா எடுத்துக்கோ, எனக்கு கிடைக்காத வெற்றிகள் எல்லாம உனக்கும், உன் மூலமாக இந்தச் சமூகத்துக்கும் கிடைக்கணும்"

ஒரு தந்தை தன் மகனுக்கு சொல்றது மத்தவங்களுக்கு ஆச்சரியமா இருக்கும்.அப்பா தன் கசப்பான அனுபவங்களை இனிப்பாக மாற்றி வாழணும்னு, அப்படி சொல்லறாங்கன்னு எனக்குத் தெரியும்.

என்னுடைய வாழ்க்கையைப் பற்றியோ, அறிவைப் பற்றியோ சந்தோஷத்தைப் பற்றியோ அப்பா குறைச்சு மதிப்பிட்டாங்க என்று சொல்ல முடியாது. அப்பா என்னை ரொம்ப நேசிச்சாங்க.

பொதுவா சின்ன குழந்தைங்ககிட்ட மத்தவங்க சொல்லாத எத்தனையோ விஷயங்களை அப்பா சர்வசாதாரணமாக என்கிட்ட கேஷிவலா பேசி இருக்காங்க.

பூப்போன்ற வார்த்தைகள் இரும்பைப் போன்ற கருத்துக்கள். நம் முன்னோர்கள் ஒவ்வொருவரிடமும் வேரூக்கு நீராகும் விஷயம் இருந்துள்ளது.

சின்ன சின்ன விஷயங்கள் மனதை நீராட்டுகின்றன.

அப்பா ஒரு அற்புதமான மனுஷர். மானுடத்தின் மீது மாபெரும் அன்பு கொண்டவர். அம்மாவை உலக அழகியாகவும், தாயாகவும் போற்றி அன்பு பாராட்டியவர். அருமையான எழுத்தாளர் வேறே. உங்களோட எழுத்தே போதும் அப்பா "நீங்கள் இந்த சமுதாயத்திற்குச் செய்த சேவைகள்".

அப்பா சின்ன வயசிலே நிறைய கசப்புகளைத்தான் சுமந்திருக்கிறார். அந்த வயதிலும் ஒன்றுவிட்ட சகோதரியின் பெண்ணை விரும்பியிருக்கிறாரு. அப்பாவின் குடும்ப வறுமையாலும் சகோதரியின் பணக்கார அந்தஸ்தும் குறுக்கே நின்றுவிட்டது. ஆனா, அந்தப் பொண்ணு பின்னாலே அப்பாவை நினைச்சு

நினைச்சு மாபெரும் வாழ்க்கையை இழந்திட்டதா சொன்னதாம்.

அம்மாவையே அந்தக் காதலிச்ச பெண்ணா நினைச்சு அப்பா வாழ்ந்தாங்க. அத்தகைய உயர்ந்த குணம் அப்பாவுடையது.

அப்பா அதிகாரியாக இருந்தாலும் வேலையிலே கறார் பேர்வழி. தன் கீழே பணிபுரியும் எல்லோரிடமும் அன்பையும், பாசத்தையும் காட்டுவாங்க. அதே நேரத்திலே கண்டிப்பையும், ஒழுங்கையும் பாதுகாப்பாங்க.

பொறந்த சமுதாயத்துக்குத் தொண்டு செய்யணும்கிறதை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தாங்க. ஆன்மீகத்திலே ஈடுபாடு கொண்டு துறவிகளுடன் தான் நெருங்கியிருப்பாங்க. அப்பாவோட உறவிலே ஆண் துறவிகளுமுண்டு. பெண் துறவிகளுமுண்டு. இந்து, மூஸ்லீம், கிறிஸ்துவ துறவிகள் நட்பும் அப்பாவுக்கு உண்டு.

வாரம் ஒரு நாள் வீட்டின் மாடியில் ஆன்மீக சத்சங்கத்தை நடத்துவார். ஆன்மீகக் கல்வியைப் பரப்ப அம்மாவையும், என்னையும் தயார்படுத்தியிருந்தாங்க.

அப்பாவுக்குப் பிறகும் வாராந்திர சத்சங்க சபையை இன்னும் நடத்திகிட்டு வர்றது, அப்பாவின் தொண்டு தொடர்வதாக நினைப்பேன். இதில் தான் எத்தனை ஆன்மீக முத்துக்களை உருவாகிப் போயிருக்காங்க. இதில் எங்க குடும்பத்துக்கே சந்தோசமட்டுமில்லை.

பெரிய மதிப்பும் கௌரமும் வாழையடி வாழையாக அணி சேர்த்து வருகின்றன.

இருபந்தைந்து வருஷத்துக்கு முன்னாலே ஒரு வயதான தாடி வச்ச துறவியை அப்பா வீட்டுக்கு அழைச்சு வந்தாங்க. பார்த்தவுடனே கவரும் தோற்றம். அன்பைக் காட்டும் கூர்மையான கண்கள். அதிலே தான் எவ்வளவு அன்பு. அறிவு உமிழும் பெரியவரின் கண்ணிலே சூரிய வெளிச்சத்தைப் பார்த்தேன். இவரு அப்பாவின் குருவுக்கு நேரடி சீடர். இவர் மீது அப்பா காட்டிய பாசம் சொல்ல முடியாது.

பெரியவரும் ஆண்டுக்கு ஒரு முறை வருவார். வீடே ஆன்மீகப் பூமியாக, காந்தக் களமாய் மாறிவிடும். அப்பா இது மாதிரி சொத்துக்களைத் தான் அதிகம் எங்களுக்குச் சேத்து வைச்சிருந்தார்.

ஆபிஸ் முடிந்து வந்ததும் இரவு நேரங்களிலும் எழுதி எழுதி களைச்சு போயிடுவாங்க அப்பா. அவுங்களே ஸ்ட்ராங்கா ஒரு டீயைப் போட்டு குடிப்பாங்க. சாஞ்சுகிட்டு அடிக்கடி புத்தக அலமாரியையே கண்கொட்டாமா பார்த்துக்கிட்டு இருப்பாங்க.

இந்த மாதிரி சமயங்களிலே அம்மாவோ, நானோ ரூமுக்குள்ளே நுழைச்சிட்டோமுன்னா கையும் களவுமா மாட்டிக்கிட்ட காதலன் மாதிரி வெட்கத்திலே முகம் சிவந்து போயிடுவாங்க. அப்பாவுக்கு புத்தகங்கள் என்றால் உயிரு. புத்தக அலமாரியை பூஜை அறையாக பாதுகாப்பாரு. அவரு எழுதிய புத்தகங்களை நெறைய

பேருக்கு இலவசமாகத்தான் கொடுப்பாரு. அப்பாவோட பேச்சு, மூச்சு, செயல்களில் எல்லாம் ஒரு எழுத்தாளனைப் பார்க்கலாம். தொண்டுள்ளம் கொண்ட கருணை உள்ளத்தை பார்க்கலாம்.

அப்பாவோட உயில் என்ற கவிதையில் அவங்க புத்தகங்களைப் பற்றி நிறைய எழுதி இருக்காங்க. நம்மை உருவாக்கிய சமுதாயத்திற்கு தன் எழுத்துக்களை அடிக்கடி புத்தகமாகப் போட்டு வெளியிடனும்னு ஆசை; அவரே பாட்டி பேரில் பதிப்பகம் வைச்சாரு. அந்தப் பதிப்பகம் இப்ப ஆல்போல் தழைத்து எல்லோருடைய எழுத்துக்களையும் வெளியிட்டு வருகிறது.

அப்பாவோட டைரியில்.

"மானுடம் வென்றதம்மா....." என்ற குறிப்புகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். இதெல்லாம் குறிப்புகளாகவும் இல்லை. கட்டுரைகளாகவும் இல்லை, கடிதங்களாகவும் இல்லை. அதை முழுவதும் படிச்சதுக்கு அப்புறம்தான் தெரிந்தது. இவையெல்லாம் வெறும் எழுத்து அல்ல. ரத்தமும் சதையுமா துடிக்கிற அன்பும், கருணையும் நிறைந்த ஒரு மாபெரும் எழுத்தாளரின் மனசுன்னு புரிந்தது. எழுத்தை தவமாகக் கொண்டு வாழ்ந்தவர். மனசுலே இருந்து வந்த உணர்ச்சிகளின் காவியமாக இருந்தது.

ஒரு சமயம் அப்பாவோட நண்பர் ஒருவர் வீட்டிற்கு வந்தார். "நான் உங்களுடைய கதை ஒன்றைப் படித்தேன். அதுலே நீங்க கதாநாயகனை இப்படி

வதைச்சு துன்பப்படுத்தியிருக்க வேண்டாம். காதலிச்சது அவர் குற்றமில்லை. அதுக்காக வாழ்நாள் முழுவதும் கசப்பை அவர் உண்பது எவ்வாறு நியாயம்? கதாநாயகி திருமணம் ஆனதும் தன் காதலரின் அன்பை எண்ணி உருகி வருவதாக கதையை முடிச்சுட்டிங்க. கதையிலே நாயகன் தான் வேதனைப்படணுமா......" அப்பா சிரிச்சுக்கிட்டார்.

அப்பாவுக்கு ஒரு குணம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நட்புகள், உறவுகள் தேடி வந்தாலும் ஒட்டமாட்டார். தன்னையொத்த உறவுகளையும், நட்புகளையும் வலியபோய் உறவாடுவார். பின்பு அவர்களே இவரிடம் அடைக்கலமாகி விடுவார்கள். அப்பாவின் எண்ணத்திற்கும் பார்வைக்கும் அப்படி ஒரு ஆற்றலுண்டு.

தன்னோட குருவை குரங்கு குட்டி மாதிரி புடிச்சிருந்தார். பின்னாலே குருவே அப்பாவை பூனை மாதிரி கவ்விக் கொண்டு போனதாக அடிக்கடி சொல்லுவாங்க. அப்பா எழுதி எழுதி களைச்சப் போறப்ப வாசல் வராந்தாவிலே, பயங்கரப் பனியிலே, மாலை நேரங்களிலே, புயலிலே கூட விசித்திரமாக வராந்தாவில் நடப்பாங்க.

அப்பா உயிரோட இருந்து எழுதினது மாதிரியே அவர் போன பிறகும் தொடர்ந்து எழுதியிருந்தாங்க. பேனா தன் கையிலிருந்து நழுவி விழுற வரைக்கும் எழுதிகிட்டே இருந்தாங்க.

கடைசியாக அவுங்க எழுதியது "மனுஷனாப் பிறந்தா யாருக்கும் துன்பம் தராம வாழணும், முடிஞ்ச வரைக்கும் அடுத்தவங்க துன்பத்தைப் போக்க உதவணும். நான் வர்றேன்."

தன்னுடைய மரணப் படுக்கையில் கூட அப்பாவால் எப்படி இப்படி மானுட சிந்தனையுடன் இருக்க முடிந்ததுன்னு எனக்குப்புரியல. அவுங்க வாழ்க்கையிலே கடைபிடிச்சதே, குருவிடம் கத்துக்கிட்டதை தவமா எழுதியிருக்காங்கன்னு தான் சொல்லனும்.

அவுங்களோடே சாம்பல் மண்ணோட மண்ணா கலந்துச்சு. மானுடத்திலிருந்து அவுங்களைப் பிரிக்க முடியாது. அருகம் புல்லாக, அடுத்தடுத்து வரும் அலையாக, தொடரும் மேகங்களாக, நெருங்கி வரும் தென்றலாக, அவங்க ஆயிரம் ஆயிரம் வருஷம் வாழ்வாங்க. அவுங்களுடைய "மானுடம் வென்றதம்மா.... டைரியின் வரிகளைப் படிக்கும் போதெல்லாம் எனக்க அழுகை பொங்கி பொங்கி வருது.

இந்த மாதிரி சோகங்களுக்கெல்லாம் யார் காரணம்? யாருக்குத் தெரியும்? காலம் காலமாக வருகிற பழக்கங்களா? வழக்கங்களா? என்னமோ தெரியலை.

ஆனா அப்பாவைப் போல எனக்கு போதும்னு மனசு வந்துட்டு. காசு பணம் மேலே வெறுப்பும் கிடையாது. ஆசையும் கிடையாது. அவுங்க நினைப்புப்படியே வருமானத்தை அஞ்சாகப் பிரிச்சு செலவழிக்கிறா மனைவி.

குடும்பத்துக்கும் மருத்துவமனைக்கும்; உறவுகளுக்கும் நட்புகளுக்கும்; கல்வி; ஊனமுற்றோர், முதியோர், வறுமையுடையோர்களுக்கும்; கடைசியாக நலிவடைந்த எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு.

அப்பா தன் வாழ்க்கையையே தவமா வாழ்ந்தாரு. அவரது தவத்தால் தான், நான் உடல்நலத்தோடு, நீண்ட ஆயுளுடன், உயர் புகழோடு, மெய்ஞ்ஞானத்தோடு தொண்டாற்றி இன்பம் கண்டு வருகிறேன்.

# ஆசிரியரின் நூல்கள் குறித்து

## ஓய்வு கால வாழ்க்கை

☆ கையில் எடுத்தவுடன் அப்படியே படித்து முடித்து விட்டேன் ஒரு சிறந்த படைப்பு.

தற்போதைய பரபரப்பான வாழ்க்கையில் அனைவரும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள்.

கடலூர். சி.சேகர்

To the people who are in the evening of their lives..... "how to grow graciously" எனும் ஆழ்ந்த அமுதம் கொண்ட "ஓய்வு கால வாழ்க்கை" ஒப்பற்றதாக அமைந்துள்ளது.

தாளவாடி. சிஸ்டர் மேரி

☆ நூலில் அரிய தகவல்களை கொடுத்திருக்கிறீர்கள். "சமர்ப்பணம்" உள்ளம் தொடுகிறது! ஓய்வு காலத்திற்கான திட்டமிடல், ஓய்வு காலப்பணி, பொழுதுபோக்கு என்று விரிவான செயல்திட்டம் நூலின் சிறப்பு. "பிள்ளைப் பாசம்" கண்களை குளமாக்குகிறது அய்யா!

உடுமலைப்பேட்டை. கா. திருநாவுக்கரசு

☆ ஓய்வு கால வாழ்க்கை என்பது எல்லா மனிதனும் சந்தித்து ஆக வேண்டிய காலத்தின் கட்டாயம். ஆனால், அதனை எளிதாக்கிக் கொள்ள, கவாரஸ்யமான பல வழிமுறைகளை இந்த நூலாசிரியர் தொகுத்து வழங்கியுள்ளார். ஓய்வு கால பிரச்சினைகள் என்ன அவற்றின் தீர்வுகள் என்ன எல்லாவற்றிற்கும் துல்லியமான பதில்களை தந்துள்ளார்.

11.12.2003 தினகரன்

☆ ஓய்வுகால வாழ்க்கை இன்பமாக இருக்க பணியில் இருக்கும்போதே செய்ய வேண்டிய கடமை களையும், உடற்பயிற்சி, இறைப்பணி, சேமிப்பு என்று திட்டமிட்டு செயல்பட்டால் ஓய்வுகாலம் ஒப்பற்றதாக அமையும் என்பதை விளக்குகிறார் நூலாசிரியர்.

7.04.2004 தினத்தந்தி

## காலமே உன் உயிர்

☆ உடம்பின் உன்னதங்கள், உடல்நலமே முதல் நலம், ஊக்கமே உயர்வு, நினைவாற்றல் கலை, தன்னம்பிக்கை தரும் வெற்றி உள்ளிட்ட பன்னிரண்டு வாழுங்கலை அறியும் வாழ்வியல் கட்டுரைகள் அழகான தொகுப்பு.

19.06.2004 தினமணி

☆ இவருடைய கட்டுரைகள் மனித குலத்திற்கு ஒரு கலங்கரைவிளக்காகவும், நல் வழி காட்டியாகவும் அமைந்து ஒளி செய்யும் தன்மை கொண்டவை.

பொள்ளாச்சி புலவர் க. தியாகராஜன்

☆ காலமே உன் உயிர் என்னும் ஆய்வுத்திறம் சான்ற தமிழ்நூலை, அன்மையில் படித்தும் மகிழும் பேறு பெற்றேன். இந்நூல் "காலத்தை வென்று நிற்கும்" என்பது உறுதி

சென்னை கவிஞர் கானவன்

## டென்சனை வெல்வது எப்படி?

☆ "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற முதுமொழியில் நெறிநின்று, இந்நூல் வடிவம் தந்து உலகுக்கு வழங்கிய திரு. பானுகுமார் அவர்களின் மனித நேயச் செயலை கம்பனின் சொற்களில் "மானுடம் வென்றதம்மா" என்று கூறி, அவரை வாயார, நெஞ்சார வாழ்த்திட தோன்றுகிறது.

திரு. கு. பாலசுப்பிரமணியம்,
மொழிபெயர்ப்பு துணை இயக்குநர் (ஓய்வு)
தலைமைச் செயலகம்.

☆ மக்களின் ஆரோக்யம் குறைவதற்கு டென்சன் தான் முக்கிய காரணம், அத்தகைய டென்சனை வெல்வதற்கான வழிவகைகளை கூறும் நூல்.

12.08.2004 தினமணி

☆ இந்நூல் டென்சனுக்கான காரண காரியங்கள் அலசப் பட்டு அவற்றிற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆகஸ்டு 2004 மங்கையர் மலர்

## மாவீரன் நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

☆ இதைக் கையில் எடுத்துவிட்டால் படித்து முடித்து விட்டுத்தான் கீழே வைக்க முடியும்.

அந்த அளவுக்குச் சிறப்பாக இதைச் செய்து முடித்திருக்கிறார் இந்நூலாசிரியரும் எனது இனிய நண்பருமான பானுகுமார் அவர்கள்.

பல நூல்களைப் படித்து உண்மை விபரங்களை சேகரித்து, ஒழுங்கு படுத்தி ஒரு அழகிய நூலாக உருவாக்கி இருக்கிறார்.

*சென்னை.* *தென்கச்சி கோ. சுவாமிநாதன்.*

143

# புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

பன்னூலாசிரியராகிய நண்பர் திரு. பானுகுமார் 'புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்" என்னும் நூலை எளிமையாக இளையோர் படித்து உள்ளங்கொள்ளும்படி எழிலுற எழுதியுள்ளார். இவ்வாறே ஏனைச் சான்றோர் வரலாறுகளையும் இவர் எழுதுதல் நல்லது. நூலாசிரியர் பானுகுமாருக்கு என் வாழ்த்துக்கள்.

முன்னாள் அரசுச் செயலர். டாக்டர் ஔவை நடராஜன்,
முன்னாள் துணை வேந்தர். எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,

# திரு பானுகுமார் எழுதிய நூல்கள்

| | ரூ. பை |
|---|---|
| எங்கே போகிறோம்? | 10.00 |
| சிம்லாவில் ஐந்து நாட்கள் | 10.00 |
| ஏழு ஆலயங்கள் | 15.00 |
| உடம்பின் உன்னதங்கள் | 15.00 |
| அறிவறிந்த மக்கட்பேறு | 20.00 |
| நினைவாற்றல் கலை | 15.00 |
| காலமே உன் உயிர் | 75.00 |
| டென்சனை வெல்வது எப்படி? | 50.00 |
| மாவீரன் நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் | 50.00 |
| புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் | 40.00 |
| ஓய்வுகால வாழ்க்கை | 25.00 |
| முயற்சி பயிற்சி உயர்ச்சி | |
| ஆலய வழிபாடு | |
| செயலே விளைவு [சிறுகதைத் தொகுதி] | - |
| போதிமரங்கள் [சிறுகதைத் தொகுதி] | - |
| அவசரப்பட்டு விட்டேன் [நாவல்] | - |
| மனதை மீட்டும் எண்ணங்கள் [கவிதை தொகுப்பு] | - |
| Stress Management | - |
| Brilliant Generations | - |
| Seven Temples | - |

வெளியீடு
ராஜம் பதிப்பகம்
120, அரிசிக்கடைத் தெரு,
மன்னார்குடி – 614 001.

'காட்டுக்கு கோபமா?' எனும் சுப செய்தி நற்செய்தி.... விவிலிய கூற்றுடன் ஆரம்பித்து தத்ருபமாக கொண்டு செல்லும் தங்களின் பாங்கு மூக்கின் மேல் விரலை வைக்கத் தூண்டுகிறது. உங்கள் எழுத்துக்களால் பயனடைந்தோர் அடிதட்டு மக்களே. வறுமையிலிருந்து அவர்களை தட்டி எழுப்பச் செய்த தங்களின் கருணைக்கு கைம்மாறு பெறாமல் போக மாட்டீர் .

(நற்செய்தியின் படி)

காட்டுக்கு கோபம் கதையை பன்முறை படித்தேன். கதையை விவிலியம் கூறும் அன்பு செயல்களில் துவங்கி... அன்பையே ஊடுறுவலாகக் கொண்டு அன்பின் செயலை உச்சக் கட்டத்தை வகிக்கச் செய்து அன்பின் செயல்பாட்டை கூறும் திருமூலம். நம்மை ஒவ்வொருவரையும் திருவாக திகழ அருள் பாலிக்கும் மந்திரத்தை இவன் வழங்கி அன்பிற்கிடக்காய் என்றும் திகழும் தங்களின் இதயத்தில் வலது அறைகளில் ஆச்சரியத்தையும். இடது அறைகளில் ஆனந்தத்தையும் மாறி மாறி கொண்டிருக்கும் அன்புள்ளம் கொண்ட உங்களை எப்படி பாராட்டுவது என்று தெரியவில்லை.

இனிவரும் காலங்களில் இதுபோன்ற கதைகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டு வையகம் உய்ய வழிவகைச் செய்து தருவீர்கள் என நிச்சயம் நம்புகிறேன்.

தூய மரியன்னை தொடக்கப்பள்ளி,
செங்கற்பட்டு.

சிஸ்டர் மேரி அல்போன்சா,
தலைமை ஆசிரியை.

வெளியீடு : **ராஜம் பதிப்பகம்,**
120, அரிசிக்கடைத் தெரு,
மன்னார்குடி – 614001.